ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்




'சொல்லும் நிமிடங்களை
சொன்னபடியே தருவது'
தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro

# ஈழமுரசு
ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 09 - 15 Septembre 2004 30

சம்யுக்தா
Credics Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# மூன்று மாதங்களில் ஐ.தே.க. ஆட்சி !

## – ரணில் அறிவிப்பு –

(06.09.2004)

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து பெரும்பான்மை பலம்கொண்ட அரசாங்கம் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் என அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டுக்கு அவசியமான சக்திமிக்க பொருளாதாரமும் கட்டியெழுப்பப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஐக்கிய தேசிய கட்சியின் 58வது வருட நிறைவை முன்னிட்டு கட்சியின் தலைமையகமான சிறீகொத்தாவில் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை இன்றைய அரசு கேள்விக்குரியதாக்கி விட்டதாகவும், சமாதான முனைப்புகளும் தெளிவற்ற போக்கில் சென்றுகொண்டிருப்பதாகவும் தெரிவித்த

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

## திருமலையில் புலிகளின் புதிய முகாம்கள் மறுக்கிறது கண்காணிப்புக் குழு

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்துள்ளார்கள் என்ற கூற்றில் உண்மையெதுவும் இல்லை என போர்நிறுத்த கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. அண்மைக் காலமாக சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இவ்வாறான குற்றச்சாட்டை சுமத்தி வந்தது எனினும் இந்த கூற்றை மறுத்துள்ள போர்நிறுத்த கண்காணிப்புக் குழு, விடுதலைப் புலிகள் தமது பிரதேசங்களிலேயே முகாம்கள் அமைந்திருப்பதாகவும் அரசாங்க பிரதேசங்களில் எவ்வித முகாம்களும் அமைக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. இதே வேளை, சிலாவத்துறை மற்றும் மன்னார் பிரதேசத்தில் உள்ள தமது முகாம்களை பார்வையிட விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை என கொழும்பில் வெளியான செய்திகளை புலிகள் மறுத்துள்ளனர்.

## ஆறுமுகம் தொண்டமான் எம்முடன்...
# ஆட்சியைக் கலைத்து விடலாமென்று எவரும் கனவு காண வேண்டாம்

### – பிரதமர் மஹிந்த ராஜபக்ச –


(06.09.04)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் மட்டுமல்ல, இன்னும் பலரும் விரைவில் எம்முடன் இணைந்து கொள்ளவுள்ளனர். எனவே, எமது ஆட்சியைக் கலைத்து விடலாமென்று எவரும் கனவு காண வேண்டாம் என சிறீலங்காவின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். காலி சமனல விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 53வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது, ஆளுங்கட்சிக்குப் போதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாததால் விரைவில் ஆட்சியைக் கலைத்து விடலாமென்று கனவு கண்டவர்கள் இன்று ஆறுமுகம் தொண்டமான் எம்முடன்

(தொடர்ச்சி 28ம் பக்கம்)



சிறீலங்கா அரசுக்குள் தோன்றியுள்ள பனிப்போர் → 07



தோல்வியில் முடிவடைந்த பணய நாடகம் → 11

என்னதான் அந்தஸ்து பெற்றாலும் ஒரு அகதி ஜெர்மனியன் அல்லது பிரெஞ்சுக்காரனாக முடியாது! 17



பால் வடியும் கண்! → 16



மோகன் ஜுவலரி மார்ட்

201 Rue du fg. st. Denis, 75010 Paris.

Tel: 01 42 05 65 26 / Fax: 01 42 05 65 79
M°: La Chapelle / Gare du Nord

தங்க நகைகளுக்கு தவணை முறையில் செலுத்தும் கடன் வசதியுடன்!



உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்துள் ஒரு போத்தல் 1Euro – மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro – 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# புலிகளுக்கு எதிராக போராட கிழக்கில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரி தகவல்

(05.09.04)

கிழக்கில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு ஒன்று உருவாகி வருவதாக இந்தியப் புலனாய்வு துறை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் தங்கியிருந்த காலப் பகுதியில், இந்தியப் படைகளின் புலனாய்வு அதிகாரியாக இலங்கையில் கடமையாற்றிய கேணல் ஹரிகரன் என்ற ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

முஸ்லிம் இளைஞர்கள் குழு ஒன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதப்போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தயாராகிவருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். ஓசாமா அமைப்பு என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்பு, தனது அலுவலகத்தை திருகோணமலை - கிண்ணியா பகுதியில் அண்மையில் திறந்துள்ளதாகவும், கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அடிப்படைவாத கருத்துக்களின் பால் அதிக நாட்டம் கொண்டிருப்பது தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழு ஒன்று தோற்றம் பெறுவது, இலங்கையின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி, இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

தற்போது இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவராக பதவியேற்றுள்ள பாகிஸ்தானின் முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி பஸீர் வாலி இந்த அடிப்படைவாத அமைப்புக்கு உதவி புரியலாம் என்றும், சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது பஸிர் வாலி பதவி ஏற்ற காலப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் சிலருக்கு புலமைப்பரிசில் வழங்கி, பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், இவர்கள் அங்கு எதனைக் கற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதே தற்போது எழுந்துள்ள முக்கிய கேள்வி என்றும் கேணல் ஹரிகரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

## தேசியத் தலைவரின் அழைப்பாணையை ரணிலின் முகவரிக்கு அனுப்ப உத்தரவு

(05.09.04)

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 1ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, சிறீலங்கா மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை அழைப்பாணை பிறப்பித்தது. இதற்கான அறிவித்தலை மேற்பார்த்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனோடு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி, சிஹலய உறுமய, சிங்கள ஜாதிக சங்கம் ஆகிய கட்சிகளும், திலக் கருணாரத்னவும் சமர்ப்பித்த மனுக்களை ஆராய்ந்த பின்னரே இந்த உத்தரவை சிறீலங்கா மேல் நீதிமன்றம் விடுத்தது.

இந்த மனுக்களின் பிரதிவாதிகளாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சரவை ஆகியவற்றுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கத்தின் அரசியல் யாப்பை மீறிச் சென்றுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்தனர். இதனால் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தமது கட்சி உறுப்பினர்களையும், பிரதிவாதிகள் பட்டியலில் இணைத்துக் கொள்ளுமாறு கோரி ஜே.வி.பி மீள்பரி சீலனை மனு ஒன்றை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்க கோரி, ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய ஆகிய கட்சிகள் தாக்கல் செய்த வழக்கில் நேற்று முன்தினம் மீளாய்வு மனு ஒன்று சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவி ஏற்றுள்ள நிலையில், தொடர்ந்தும் அந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதால், தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான 33 பேர் கொண்ட அமைச்சரவையைப் பிரதிவாதிகள் தரப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் என ஜே.வி.பி ஏற்கனவே நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தது. அதனை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டிருந்தது. இந்த நிலையில் அமைச்சரவையில் அமைச்சர்களாக அங்கம் வகிக்கும் தமது கட்சியின் நான்கு உறுப்பினர்களையும் நீதிமன்றம் பிரதிவாதிகளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஜே.வி.பி தனது மீள்பரிசீலனை மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கொழும்பில் பேனா துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(05.09.04)

குமிழ்முனைப் பேனாவை ஒத்த நவீன ரக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த ஒருவரை கொழும்பு குற்றத் தடுப்பு பொலிசார் நேற்று சனிக்கிழமை கைது செய்துள்ளனர். கிரான்ட்பாஸ் பாலத்துறை பகுதியில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். இந்த நவீன ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தக்கூடிய தோட்டாக்களையும் அவரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி றுவான் வெதசிங்க தெரிவித்தார். வன பகுதியில் போரிடும் இராணுவ வீரர்கள் பயன்படுத்தும் மிகப் பெறுமதி வாய்ந்த துப்பாக்கி என இனம் காணப்பட்டுள்ளது. இதே போன்ற ஒரு துப்பாக்கியை இதற்கு முன்னரும் பொலிசார் கைப்பற்றியிருந்ததாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## நோர்வேக்கு எதிராக சிங்கள அமைப்பு சர்வதேச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் இராணுவ உதவிகளையும் வழங்குவதாகக் குற்றம்சாட்டி நோர்வே அனுசரணையாளர்களுக்கெதிராக அவுஸ்திரேலியாவிலுள்ள, சிங்கள இனவாத அமைப்பான `சிறீலங்கா மனித உரிமைகள் அமைப்பு' சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும் சர்வதேச ஒழுங்குவிதிகளை மீறி, நோர்வே அரசு இலங்கைக்குள்ளும் சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கி வருவதாகக் குற்றஞ்சாட்டியே இந்த சிங்கள அமைப்பு வழக்குத் தாக்கல் செய்துள்ளது. எதிர் மனுதாரர்களாக நோர்வே பிரதமர், நோர்வே வெளிவிவகார அமைச்சர், விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து நோர்வேயையும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களையும் வெளியேற்ற வேண்டுமென ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் கோரிக்கை விடுத்து வருகையில், அவுஸ்திரேலியாவிலுள்ள சிங்கள அமைப்பு சர்வதேச நீதிமன்றில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது. அத்துடன் தங்களது இந்தக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்த சிங்கள அமைப்பு இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும், பிரசாரத்தையும் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தாயகக் கல்வி அபிவிருத்தியை தேசியத் தலைவர் முழுமூச்சுடன் முன்னெடுத்து வருகின்றார் – கல்விக் கழகப் பொறுப்பாளர்

(05.09.04)

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமிழர் தாயகக் கல்வி அபிவிருத்தியில், முழுமூச்சுடன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார் என்று தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் தெரிவித்துள்ளார். கடந்த புதன் கிழமை வவுனியா மாவட்ட கனகராயன்குள மகாவித்தியாலய புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிலங்காப் படையினர் வன்னி மண் மீது மேற்கொண்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்கு எதிராகச் சமராடி வித்தாகிய மாவீரர்களின் இரத்தம் சிந்தி மீட்டெடுக்கப்பட்ட இடத்தில், எதிரிகளால் அழிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் புதிய கட்டடத் தொகுதி திறக்கப்படுவது நிறைவுக்குரியது என்று தெரிவித்த வெ.இளங்குமரன் அவர்கள், போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு இரண்டரை ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழர் தாயகப் பகுதிகளில் கல்வி அபிவிருத்திக்கு சிறீலங்கா அரசு எந்தவித உதவிகளையும் செய்யவில்லை என்று தெரிவித்தார்.


Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# "புலிகள் யுத்தத்தில் ஈடுபட்டால் தியாக சிந்தையுடன் செயற்படுங்கள்"

## – யாழ். படை அதிகாரிகளிடம் இராணுவத் தளபதி தெரிவிப்பு –

## நவீன ஆயுதங்களைப் பெற்றுத்தருமாறு படையினர் கோரிக்கை



(05.09.04)

சமாதான முயற்சிகள் சில வேளை முறிவடைந்து விடுதலைப் புலிகள் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட முனைந்தால் முழுப்பலத்துடன் அவர்களை முறியடிக்க தியாக சிந்தனையுடன் செயற்பட திடசங்கற்பம் பூண வேண்டும் என யாழ். மாவட்டத்திற்கான சிறீலங்காவின் சிரேஷ்ட படை அதிகாரிகளிடம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டகொட தெரிவித்துள்ளார். பலாலியில் வெள்ளியன்று மாலை சிரேஷ்ட படை அதிகாரிகளை அழைத்து நடத்திய மாநாட்டில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்.குடாநாட்டிற்கு சென்றிருந்த இராணுவத் தளபதி தீவகம், வலிகாமம், வடமராட்சி, நாகர்கோவில் எழுதுமட்டுவாள், கிளாலி பகுதிகளில் உள்ள இராணுவத் தளங்களிற்கு யாழ்.குடா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் சென்று தள நிலைமைகளை ஆராய்ந்ததுடன் கடந்த காலங்களில் விடுமுறைகள் இன்றியும் விசேட கவனிப்புகள் இல்லாமையாலும் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள படையினரை சந்தித்து அவர்களுக்கு உற்சாகமூட்டும் முயற்சியிலும் ஈடுபட்டார்.

இம்மாநாட்டில் படைத்தளபதி மேலும் கருத்து தெரிவிக்கையில், அரசாங்கம் சமாதான முயற்சிகளில் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறது. இருந்தாலும் இந்த நாட்டை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு படையினரிடமே உள்ளது. இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்த நாட்டின் பாதுகாப்பு படைகளுக்கே உரியது. இந்த நாட்டின் பாதுகாவலர்களாக இருக்கின்ற நீங்கள் எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

இதன் பின்னர் படையினரின் குறை நிறைகளை இராணுவத் தளபதி கேட்டபோது படையினர் தங்களுக்கு நவீனரக ஆயுதங்களை பெற்றுத்தருமாறு இராணுவத் தளபதியிடம் கோரிக்கை விடுத்தனர். விடுதலைப் புலிகள் தற்போது நவீன ரக ஆயுதங்கள் பலவற்றை பெற்றுள்ளதால் இராணுவச் சமநிலையை சீர்செய்யும் வகையில் நவீனரக ஆயுதங்களை பெற்றுத் தாருங்கள் என படையினர் கோரிக்கை விடுத்தனர்.

## யுத்தத்தைத் திணித்தால் புலிகள் அதனை எதிர்கொள்ளத் தயார்

### – சந்திரசேகரன்

(05.09.04)

தமிழ்மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு யுத்தத்தைத் திணித்தால் அதனைச் சந்திக்க தமிழ்மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தயாராகவே உள்ளனர் என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார் என்று, மலையக மக்கள முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் தெரிவித்தார். கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் சந்தித்துப் பேசியதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இந்தியாவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு தமிழ்மக்களின் தற்போதைய நிலை தொடர்பாக விளக்கமளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் மிகத்தெளிவாக உள்ளனர். ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன என்றும் பெரியசாமி சந்திர சேகரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மல்வத்தை பீட மகாநாயக்க தேரரைச் சந்திப்பதற்கு தாங்கள் தயாராயிருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். சமாதானச் செயலகத்தில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனை சந்தித்தபோதே தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார். எனினும், இந்தச் சந்திப்பிற்கான திகதி பற்றி நேற்றைய கிளிநொச்சிச் சந்திப்பில் முடிவு செய்யப்படவில்லை.

புலிகளைச் சந்திப்பதற்கு தான் தயாராகியிருப்பதாக மல்வத்தை பீடாதிபதி தெரிவித்ததையடுத்து இதுபற்றி புலிகளுடன் பேசப் போவதாகத் தெரிவித்த சந்திரசேகரன் இந்தச் சந்திப்புக்கான நிகழ்ச்சிநிரல் குறித்தும் புலிகளுடன் பேசியதாகவும், இந்தச் சந்திப்புக்கு விருப்பம் தெரிவித்த புலிகள், இதற்கான திகதி குறித்து அறிவிக்குமாறு கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியக் கடற்படை தலைமை தளபதி கொழும்பு வருகிறார்!

(05.09.04)

இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக இந்தியக் கடற்படைத் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன. அட்மிரல் அருண் பிரகாஷ் எதிர்வரும் 12ம் திகதி இலங்கைக்கு தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளபோதும், இந்த உத்தியோகபூர்வ விஜயம் குறித்த மேலதிக விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இவர், தனது விஜயத்தில் சிறீலங்காக் கடற்படை மற்றும் படை உயர் அதிகாரிகளையும் முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்தித்து பிராந்திய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து பேச்சு நடத்துவார் என்று கருதப்படுகிறது.

அத்துடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கடற்படைத் தளங்களுக்கும் விஜயம்செய்து பாதுகாப்பு நிலைமைகளை இவர் நேரில் பார்வையிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அட்மிரல் அருண்பிரகாஷ் கடந்த யூலை 31ம் திகதிதான் இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதியாகப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. கடற்படைத் தளபதியான இவர், ஒரு சிறந்த விமானியுமாவார். பாகிஸ்தானுடனான போரில் இவர் போர் விமான ஓட்டியாகப் பங்கேற்றிருந்தார். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் மாதவேந்திரசிங்கும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை கடல் எல்லையில் இந்தியக் கடற்படையினரின் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே, இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதி, இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

### ஜெனீவா மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு பாராட்டு

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற கண்ணிவெடி ஒழிப்புக்கான தேசிய மாநாட்டில் விடுதலைப் புலிகளும் கலந்து கொண்டதற்கு அமைப்பாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். ஜெனீவாவில் இந்த மாநாடு கடந்த வியாழக்கிழமை முழு நாளாக நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் சார்பில் இரு சிரேஷ்ட பெண் போராளிகள் கலந்து கொண்டனர். ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய மாநாட்டின் ஏற்பாட்டாளர், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டதை வெகுவாகப் பாராட்டியதுடன் அவர்களது ஒத்துழைப்பையும் கோரியிருந்தார்.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# ஈழத்தில் கிறிஸ்துவுக்கு முன்னர் தமிழர் வாழ்ந்ததற்கு சான்றாதாரம் கிடைத்துள்ளது

தமிழ்நாட்டில் தமிழர் வாழ்ந்ததற்கான மிகத் தொன்மையான கி.மு. 2ம் நூற்றாண்டைய கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. அதே சமகாலத்தில் யாழ்ப்பாணத்திலும் தமிழர் வாழ்ந்தமைக்கான சிதைந்த பானையோட்டுச் சான்றுகள் பூநகரி முதலிய இடங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. இவ்வாறு அண்மையில் வி.செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை வழங்கும் தமிழியல் ஆராய்ச்சி விருதைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர் ஐராவதம் மகாதேவன் தெரிவித்தார்.

தனது 40 ஆண்டுகால ஆராய்ச்சியின் பின் அவர் ஆங்கிலத்தில் 2003ம் ஆண்டு வெளியிட்ட முந்து தமிழ் கல்வெட்டுகள் (Early Tamil Epigraphy) என்கின்ற நூலுக்காகவே அவர் இவ்விருதைப் பெற்றுக் கொண்டார். பேராசிரியர் மகாதேவனுக்கு விருது வழங்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமை, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் தலைமையில் இடம்பெற்றது.

அவ் விருதைப் பெற்றுக் கொண்டு உரையாற்றிய பேராசிரியர் மகாதேவன் `எத்தனையோ தரமான இலங்கை ஆய்வாளர்களது படைப்புகள் இருக்கவும். தனது படைப்புக்கு விருது வழங்கியுள்ளமை ஈழத்தவரின் பெருந்தன்மையைப் பறைசாற்றுகிறது' என்று தெரிவித்தார். நிகழ்ச்சிக்குத் தலைமையுரையாற்றிய பேராசிரயர் கா. சிவத்தம்பி, `ஹார்வோர்ட் பல்கலைக் கழகம் வெளியிட்டு வரும் கீழைத்தேய பண்பாட்டு நூற் தொடர் வரிசையில் வெளிவந்த முதலாவது தமிழியல் ஆய்வு நூல் பேராசிரியர் மகாதேவனுடையதே' என்று பாராட்டியதோடு `திருக்குறளைக் கூட நாம் தரமாக மொழிபெயர்த்து இன்னமும் உலகத்துக்கு வழங்கவில்லை` என்று குறைப்பட்டுக் கொண்டார். மேலும் `மகாதேவனுடைய கல்வெட்டியல் ஆய்வின் மூலம், இது வரை கிறிஸ்து காலத்திலிருந்து தொடங்கப்பெற்ற தமிழ் இலக்கிய வரலாற்றானது இனி கி.மு. 2ம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் எனவும், இரண்டு நூற்றாண்டு அகலத்தை மேலதிகமாக சங்க காலம் பெற்றுள்ளது' எனவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் விருது பெற்ற பேராசிரியரின் ஆய்வுக் சிறப்புப் பற்றி, சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் வீ.அரசு உரையாற்றியதோடு, விருது வழங்கிய ஈழத் தமிழ் உலகிற்கு தமிழக அறிஞர்கள் சார்பில் நன்றி கூறினார்.

# தலைமையுடன் ஆலோசிக்கக் கேணல் ரமேஷ் வன்னி சென்றார்

(05.09.04) .

கிழக்குப் பகுதி நிலைமை மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடித்தல் என்பன தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் ஆலோசனை நடத்துவதற்காக புலிகளின் மட்டக் களப்பு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் நேற்று முன்தினம் கிளிநொச்சி சென்றுள்ளார். சிறீலங்கா விமானப்படை உலங்குவானூர்தி மூலம் இவர் கொக்கட்டிச்சோலையிலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி சென்றடைந்தார். கேணல் ரமேசுடன் மட்டக்களப்பு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் விடுதலைப் புலிகளின் தளபதிகளான ராம், ஜனார்த்தன் ஆகியோரும் கிளிநொச்சி சென்றடைந்தனர். எதிர்வரும் 7ம் திகதி செவ்வாய்க் கிழமை சிறீலங்கா இராணுவத் தரப்புடனான சந்திப்பில் கேணல் ரமேஷ் பங்கேற்கவுள்ளார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவேண்டிய விடயங்கள் குறித்து புலிகளின் மட்டு- அம்பாறைப் பிரமுகர்கள் தலைமைப் பீடத்துடன் ஆராய்வர் என எதிர் பார்க்கப்படுகிறது.



## போர் நிறுத்தம் சீர்குலையும் ஆபத்து நிலையைத் தாண்டிவிட்டோம்

**– போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் –**

(05.09.04)

மோதல் நிறுத்தத்துக்கு சிறிதளவு காலப் பகுதியில் நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மீண்டும் யுத்தத்துக்குச் செல்வதென்ற கட்டத்தைத் தாண்டிவிட்டதாகவும் அரச படையினரும், விடுதலைப் புலிகளும் சமாதானத் தீர்வு காண வேண்டுமென்பதில் உறுதியாக இருப்பதாகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்ட் பியூறு ஹொவ்டே கடந்த புதன் கிழமை தெரிவித்துள்ளார்.

கிழக்கில் இடம்பெற்று வரும் படுகொலைச் சம்பவங்கள் யுத்த நிறுத்தத்துக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தினாலும், புலிகளும் இராணுவத்தினரும் சமாதானத்தையே விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார். ஆனால், இதற்கு சிலகாலம் எடுக்கும். பேச்சுவார்த்தை மேசைக்கு அவர்களைக் கொண்டு வருவதற்கு சில நடவடிக்கைகளை இப்போது எடுக்க வேண்டியுள்ளது என்று, கொழும்பிலுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்திலிருந்து சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பியூறு ஹொவ்டே தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, சகல தரப்பினர் மத்தியிலிருந்தும், கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு தொடர்பாகக் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருப்பது குறித்து கருத்துத் தெரிவித்த பியூறு ஹொவ்டே, சில சமயம் இவை அரசியல் நோக்கம் கொண்டவையாக இருக்கலாம். ஆனால், இத்தகைய நடவடிக்கைகளை அவர்கள் விட்டுவிட வேண்டும். அந்த நெருக்குதலிலிருந்து விடுபட பங்களிப்பு வழங்குவதற்கு நாங்களும் தயாராக இருக்கின்றோம் என்றும் பியூறு ஹொவ்டே கூறியுள்ளார்.

## புலிகளுடன் பேசுவதற்கு முன் சர்வ கட்சி மாநாட்டுக்குத் திட்டம்

(05.09.04)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் சர்வ கட்சி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இந்தச் சர்வகட்சி மாநாட்டுக்கு ஆதரவைப் பெறும் வகையில், விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண மல்வத்த மகாநாயகர் திப்பட்டுவே சிறீ சுமங்கள தேரோவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்த அரங்கில் இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட மகாநாயக்க தேரர் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மத்தியில் ஒருமித்த இணக்கத்தை ஏற்படுத்தி, அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு தாம் தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தார். நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த எண்ணத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது ஆரோக்கியமான செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவப் புலனாய்வுப்பிரிவு முக்கியஸ்தர் கொலை மனைவியும் மைத்துனியும் கைது

(05.09.04)

கொழும்பு பொரலஸ்கமுவ, பெப்பிலியானவில் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தரான திசைவீரசிங்கம் துஷாந்தகுமாரின் (சுரேஷ்) கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அவரின் மனைவியும் மைத்துனியும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 28ம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் பொரலஸ்கமுவ பெப்பிலியான பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் இராணுவ புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தரான சுரேஷ் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இச் சம்பவம் இடம்பெற்ற போது, அவரின் மைத்துனி உடனிருந்தார் மனைவி மட்டக்களப்பிற்கு சென்றிருந்தார். இக் கொலை தொடர்பாக விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த புலனாய்வுப் பொலிசாரும் பொரலஸ்கமுவ பொலிசாரும் இப் பெண்ணிடம் வாக்குமூலங்களை பதிவு செய்து கொண்டதுடன் குறுக்கு விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தனர். தனித்தனியாக இவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட வாக்குமூலங்களும் விசாரணைப் பதிவுகளும் பரஸ்பரம் மாறுபட்டவையாக இருந்ததுடன் இருவரின் நடவடிக்கைகளும் சந்தேகத்திற்கிடமாக காணப்பட்டன.

இதனையடுத்து கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்த சுரேஷின் மைத்துனியான கவிதா என்றழைக்கப்படும் கீதாஞ்சலி (22) பொலிசாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு பாவக்குறிச்சேனை சென்றிருந்த அவரின் மனைவி சிவசோதி (27) கொழும்பிற்கு பொலிசாரினால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டார். இந்த இரண்டு பெண்களுக்கும் இக் கொலைச் சம்பவத்துடன் தொடர்பு இருப்பதாக கருதப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, எதிர்வரும் 15ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.




சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# இதயசுத்தி வேண்டும்

சிங்கள மக்கள் மத்தியிலேயே சந்திரிகா அரசின் ஆயுட் காலம் குறித்து சந்தேகம் எழுந்துள்ள நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அந்த அரசிற்கு முண்டுகொடுக்க முனைவதுபோல அதன் அறிக்கைகள் புலப் படுத்துகின்றன. 'வாய்புளித்ததோ அல்லது மாங்காய் புளித்ததோ' என்ற வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின், அரசுக்கு ஆதரவு வழங்குவதான நிலைப்பாட்டில் முன்னுக்குப் பின் முர ணான நோக்கங்கள் புலப்படுகின்றன.

ஆண்டாண்டு காலமாகவே சிறீலங்காவின் பெருந்தோட்டப் பயிற்செய்கை என வளம்கொளிக்கும் தேயிலைத் தோட்டத் தொழிற்துறையில் தமது இரத்தத்தை உரமாக்கி உழைப்பினை வழங்கும் மலையக தமிழ்ச் சகோதரர்களின் வாழ்வும் வளமும் இன்னமும் அவர்களின் குறுகிய தகர லயன் காம்பிறாவுகளுக்குள் அடங்கிய நிலையில் தமது அரசியல் சுய இலாபங்களுக்காக அந்த மக்களின் துயரங்களைப் புறந்தள்ளி பேரினவாத அரசுகளுக்கு தொடர்ந்தும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவுவழங்க முன்வருவதானது உண்மையிலேயே கவலைக் குரியது.

மேம்போக்காக அறிக்கைகளில் தமிழ்த் தேசியத்திற்கு ஆத ரவு தெரிவிப்பதுபோல காட்டிக்கொள்ளும் இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ் இன்னமும் சரியான பாதையை இனங்கண்டு கொள்ள முடியாமல் தவிக்கின்றதா? அல்லது அந்தப் பாதை யைத் தெரிந்தும் அதைத் தெரியாததுபோல பாசாங்கு பண்ணிக் கொள்கின்றதா என்பதிலும் குழப்பமாகவே இருக்கிறது. ஓரிரு பிரதியமைச்சர் பதவிகளுக்காக சந்திரிகாவுடன் பேரம்பேசி அர சுக்கு ஆதரவு வழங்குவது என்ற நிலையை தொழிலாளர் காங் கிரஸ் எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இந்த நிலைப்பாட்டைக்கூட அது இன்னும் தெளிவுபடுத்தவில்லை. வழுவல் நொழுவலான நிலைப்பாட்டினையே அது தொடர்ந்தும் புலப்படுத்துகிறது.

தமிழீழத் தேசியப் போராட்டம் என்பது தமிழ்த் தேசியம் இந்த உலகில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான ஒரு போராட்டம் என்பது வெள்ளிடைமலையான விடயம். இந்தப் போராட்டத் திற்காக அது அனுபவித்த, அனுபவித்து வருகின்ற இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல. சர்வதேச ரீதியில்கூட எமது போராட்டத்தின் தார்மீகம் ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் இந்தவேளையில் இலங் கைத் தீவின் ஒரு பகுதியில் இருக்கும் எமது மலையகச் சகோ தரர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அடிக்கடி கூறிக்கொள் ளும் தொழிலாளர் காங்கிரஸ் ஏன் இன்னமும் தேசியம் என்ற கோட்டிற்கு அப்பால் நின்று பேரினவாதம் போடும் சலுகைக ளுக்கு விலைபோக முயல்கிறதோ தெரியவில்லை. இது தொட ரும் ஒரு கவலைக்குரிய விடயம். இவ்வாறான முரண்பட்ட கொள்கைகள் கூட மலையக மக்களின் ஒற்றுமையினை பிரித் தாள்வதற்கு சிங்களப் பேரினவாதம் செய்யும் சதியோ என்று கூட ஒருகணம் ஐயப்படவேண்டியிருக்கிறது. ஆனால் இவ்வாறான சதிகளை மதியினால் வெல்லவேண்டிய கடப்பாடு இன்று தொழிலாளர் காங்கிரசிற்கு இருக்கிறது என்பதை அதன் தலை மைத்துவம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதே எமது விருப் பமாகும்.

வேண்டுமானால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளிப் படையாகவே சந்திரிகா மீதான விசுவாசத்தைக் காட்டிக்கொள் ளலாம். கவிழ்ந்து விழப்போகும் அரசிற்கு முண்டும் கொடுத் துக்கொள்ளலாம். ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் அதனுள் புதைந்துள்ள 'அரசியல்' அதற்கு இடம்கொடுக்கலாம். ஆனால் அதைவிடுத்து சிறுபிள்ளைகள் விளையாடும் 'டக்கு-டிக்கு-டொஸ்' விளையாட்டை அது காட்டத்தேவையில்லை. ஏனெனில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது என்ற விடயத்தில் சந்திரிகா அரசு தமிழ்த் தேசியத்திற்குப் போக்குக்காட்ட முயலும்பொழுது அந்தப் போக்குக்காட்டலுடன் இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் பொருந்திக்கொள்ள முயல்வது விசனத்திற்குரியது. இனி மேலாவது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தான் விடும் அறிக்கைகளிலும், செயற்பாட்டிலும் தமிழ்த்தேசியம் நேசிக்கும் இதயசுத்தித் தன்மையை பேணிக்கொள்ளவது நலம்தரும்.

# சிறீலங்காவின் அரசு தலைமை முடிவெடுக்க வேண்டிய இறுதித் தருணம்

சிங்களப் பிரதேசங்களில் வாழும் மக்கள் வன்னி யிலுள்ளவர்களை சந்திக்க நேரும் போதெல்லாம் இப்போது அடிக்கடி கேட்கும் கேள்வி மீண்டும் போர் வரப்போகிறதா என்பதுதான்.

சமாதான முன்னெடுப்புக்கள் முடங்கல் நிலையில் நிற்க, முரண்பாடுகளும், முறுகல் நிலைமையும் தொடர கிழக்கில் அரச படைகளினால் ஒரு நிழல் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்க உள்ளாட்டு மக்கள் மீண்டும் போர் எற்பட்டு விடுமோவென அச்சம் கொண்டுள்ளமை உண்மைதான்.

ஆனால், இலங்கையின் சிங்களப் பிரதேசங்களில் மக்கள் குறிப்பாக சிங்களவர்கள் மேற்படி கேள்வியை இப்போது கேட்பதற்கு சமாதான முன்னெடுப்பில் தோன்றியுள்ள சிக்கல்கள் மட்டும் காரணமல்ல. சமீப நாட்களாக சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பொருட்கள் மீதான விலை அதிகரிப்புக்கள் தான் முக்கியமான காரணம்.

போர் காலங்களில் இருந்ததைப்போல சில மாபெரும் தவறைப்பற்றி இப்போது சிந்திக்க ஆரம் பித்து விட்டனர்.

கடந்த இருபது வருடகாலப் போரினால் தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள உயிர், உடைமை அழிப்புக் கள் கணிப்பிட முடியாதவை. யுத்த நிறுத்த ஒப்பந்தத் திற்குப் பின்னர் அந்த மக்களுக்கான நிவாரணம் யானைப்பசிக்கு சோளப்பொரி போன்றதானக் கூட அமையவில்லை. ஆனால், தெற்கில் 2003ம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 5.5 ஆகவும் 2004ம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் 6.5 ஆகவும் உயர் வடைந்துள்ளது. தென்னிலங்கை மக்கள் வெடிகுண்டு சத்தங்களின்றி வாழ்கிறார்கள்.

இப்போது இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் நலிவடைய ஆரம்பித்துள்ளது. மீண்டும் ஒரு போர் ஏற்படுமானால் இந்நாட்டில் அதிக பாதிப்பினை அடை யப்போவது சிங்கள மக்கள் தான் என அரசியல் பொருளாதார நோக்கர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

கடந்த இருபது வருடங்களில் நடைபெற்ற போரில் கூட

**விடுதலைப் புலிகளை வலிந்து போருக்கிழுத்து அதனைச் சாட்டாகக் கூறி கொள்ளலாம் என்கிற தந்திரோபாயமும் புலிகளின் உறுதியான பொறுமை காரணமாக அடிபட்டுப் போய்விட்டது. மேற்குலகை ஓரங்கட்டிவிட்டு இந்தியாவைத் துணைக்கழைத்து எதனையும் சிறீலங்கா அரசால் சாதிக்க முடியாது. 450 கோடி டொலர்களை இந்தியா தானே முழுமையாக சிறீலங்காவிற்கு கையளித்தால் சில சமயம் அது சாத்தியப்படலாம்.**

வகையில் அதையும் விட அதிகமாக அத்தியாவசியப் பொருட்கள் மீதான விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக் கப்பட்ட வண்ணமேயுள்ளன. எரிபொருட்கள் மீதான விலை அதிகரிப்பு, அதனால் ஏற்பட்டுள்ள போக்கு வரத்து கட்டண உயர்வு, பால்மா உட்பட பல அத்தி யாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக் கப்பட்டமை இலங்கை வாழ் சாதாரண அடிமட்ட மக்கள் வாழ்வில் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தி யுள்ளது. கடந்த இரண்டரை வருடங்கள் தங்கள் வாணிப முயற்சிகளில் சுறுசுறுப்பாக இயங்கிய தென்னிலங்கை வர்த்தகர்கள் தற்போது மகிழ்ச்சிகரமாக இல்லை.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி ஆகியவற்றின் இனவாத பரப்புரைகளை நம்பி அவர்களுக்கு வாக் களித்த சிங்கள மக்கள் ஏமாற்றத்தின் விளிம்பிற்கு சென்றுகொண்டிருக்கின்றனர். குறிப்பாக ஜே.வி.பி. யினரின் கவர்ச்சியான பரப்புரைச் செயற்பாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் தற்போது கேள்விக்குறியாகி யுள்ளது. ஜே.வி.பியின் கவர்ச்சி வண்ணங்கள் கரைய ஆரம்பித்து விட்டன.

அரசின் பங்காளிகளாக வருமுன்னர் ஜே.வி.பியின் பரப்புரைச் செயற்பாடுகள் மிகச் சாதாரண சிங்கள வர்களையும் கவரக்கூடியதாகவே அமைந்திருந்தன. சனநெருக்கடி மிக்க கொழும்பு பகுதிகளிலும் ஏனைய நகரங்களிலும் ஜே.வி.பினர் உண்டியல் குலுக்கி சில் லறைக் காசுகளை மக்களிடம் சேகரிக்கும் கட்சிகளைக் காணமுடிந்தது. ஜே.வி.பிக்கு பல வழிகளில் நிதியுத விகள் வந்து கொண்டிருந்த போதும் அவர்கள் தமது கட்சித் தேவைக்காக அடிமட்ட மக்களிடமிருந்தே சில்லறைக் காசுகளை வேண்டி நிற்பது போன்றதொரு பரப்புரையை மேற்கொண்டிருந்தனர். கால்நடையாக வீடு வீடாகச் சென்று அரசியல் பரப்புரை என்ற பெய ரில் இனவாதக் கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தி யில் விதைத்து வந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்க ளாகவும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் உள்ள தமது உறுப்பினர்களின் சம்பளத்தில் ஒரு தொகை கட்சிக்கு வழங்கப்படும். சொகுசு வாகனங்களை தமது அமைச்சு வேலைகளுக்கு பாவிப்பதில்லை. சாதாரண உந்துருளிகளையே தமது கடமைகளை மேற்கொள் வோம் என்றெல்லாம் மக்களுக்கு கூறிவரும் ஜே.வி. பியினர் சமீபத்தில் தமது அமைச்சினால் மேற்கொள் ளப்படவுள்ள பத்தாயிரம் குளங்களைப் பனரமைப்பு செய்வதற்கான ஆரம்ப நிகழ்வுக்காக இரண்டு கோடி ரூபாக்களை அள்ளியிரைத்துள்ளனர். இச்சம்பவம் ஜே.வி.பியினுடைய முகமூடியைக் கிழித்தெறிந்துள் ளது. ஆளும் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பங்காளிகளான ஜே.வி.பிக்கு நாடாளுமன்ற தேர்தலிலும், மாகாண சபைத் தேர்தலிலும் அதிகள வில் ஆதரவளித்து சிங்களவர்கள் தாங்கள் செய்த

சிங்களவர்கள் அதிகம் பாதிப்புறவில்லை. ஆனால், இனியொரு போர் தொடங்குமானால் அது தொடங்கி ஆறு மாதங்களிலேயே மக்கள் பட்டினி நிலைக்கு ஆளாக வேண்டிவரும். சோமாலியா, சூடான் போன்று போரின் விளைவால் மக்கள் பிச்சைக்காரர்களாக வேண்டிவரும். போர் தொடங்குமானால் இராணுவ விபரீதங்களை விட அதிகமாக பொரளாதார பாதிப் புகளையே நாடு எதிர்நோக்கும் இவ்வாறு ஆய்வாளர் கள் கூறுகின்றனர்.


இன்று சரிந்து போயுள்ள பொருளாதாரத்தை நிமிர் த்தி நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால், உலக நாடுகளின் உடனடி உதவிகள் அவசியம். உதவி வழங்கும் நாடுகளினால் உறுதியளிக்கப்பட்ட 450 கோடி டொலர்கள் இலங்கையில் சமாதானம் நிலை பெற்றா லேயே வழங்கப்படும். சமாதான முன்னெடுப்புக்கள் இழுபறியாகிப் போயுள்ள இந்த சந்தர்ப்பத்தில், இவ் வுதவிகள் வேறுபக்கம் திரும்பக்கூடிய சாத்தியங்கள் உண்டென நிதியுதவி செய்யும் நாடுகள் அடிக்கடி எச்சரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சிறீலங்காவின் அரசுத் தலைவி திருமதி சந்திரிகா குமாரதுங்க ஒரு முடிவிற்கு வரவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஜே.வி.பியின் வாய்ச்சவாடல் சிங்கள மக்கள் மத்தியில் நெடு நாட் களுக்கு நிலைக்கப் போவதில்லை. யதார்த்தத்திற்கு அப்பால் நின்று சிந்திப்பதே செயற்பட முனைவதோ சாத்தியமாகப் போவதில்லை. தமிழ் மக்கள் நிம்மதி யாகவும் சுதந்திரமாகவும் வாழ்கின்ற சூழலில் தான் சிங்கள தமிழ் மக்கள் யுத்தத்திற்குள்ளும் வறுமைக்குள் ளும் வாழ சிக்கலாம் என்கிற காலம் கடந்து சென்று விட்டது. சிறீலங்கா என்கிற நாட்டின் பொருளாதாரம் நிமிரவேண்டுமானால் போரற்ற, உண்மையான சமா தானம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளை வலிந்து போருக்கிழுத்து அதனைச் சாட்டாகக் கூறி கொள்ளலாம் என்கிற தந்திரோபாயமும் புலிகளின் உறுதியான பொறுமை காரணமாக அடிபட்டுப் போய்விட்டது. மேற்குலகை ஓரங்கட்டிவிட்டு இந்தியாவைத் துணைக்கழைத்து எதனையும் சிறீலங்கா அரசால் சாதிக்க முடியாது. 450 கோடி டொலர்களை இந்தியா தானே முழுமையாக சிறீலங்காவிற்கு கையளித்தால் சில சமயம் அது சாத்தியப்படலாம்.

சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் முக்கிய மான சில முடிவுகளை துணிச்சலான சில முடிவுகளை சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற் கொள்ள வேண்டிய இறுதித் தருணங்கள் இப்போது நெருங்கிக் கொண்டு வருகின்றன.

- விவேக்

# கத்தி முனையில் பாணை கொள்ளையடித்தவர்கள்!



சிறீலங்காவின் தென்னிலங்யையின் பெரும் பகுதிகளில் தண்ணீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மெடிரிகிரிய பகுதியில் தண்ணீருக்காகக் காத்திருக்கும் தென்னிலங்கைப் பெண்கள்.

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் கத்தி முனையில் இரண்டு இறாத்தல் பாண் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறிய செய்தி ஏதோ ஒரு ஊடகத்தால் மட்டும் கண்டு கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டது. மற்றயவர்கள் இது குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், இதன் பின்னே மறைந்திருக்கின்ற உண்மை மிகப் பயங்கரமானது. அது உணர்த்துகின்ற விடயம் இன்றைய சிறீலங்காவின் அடித்தட்டு மக்களின் வாழ்நிலையைப் படம் பிடிக்கப் போதுமான சான்றாகும். அன்றாடம் உழைத்து வாழ்கின்ற மக்களின் நிலை இன்றைய பொருளாதாரச் சூழலில் திண்டாட்டமாகிவிட்டது. நித்தம் நித்தம் மாறிக்கொண்டிருக்கின்ற ஏறிக் கொண்டிருக்கின்ற அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் விலைவாசியினால் அவர்கள் மலைத்துப் போய் விட்டார்கள்.

அடித்தட்டு மக்களின் நிலை இதுவென்றால், மாதாந்தம் சம்பளம் பெறுகின்ற மத்தியதர வர்க்க மக்களின் வாழ்க்கைப் பிரச்சனையோ சொல்லுந்தரமன்று. தமது வருமானத்துக்கேற்ப ஒவ்வொரு செலவுக்கும் இவ்வளவு தொகை என ஒதுக்கி அதற்குள் வாழ்ந்து பழகிய இவர்களுக்கு செலவுகளை மட்டிடவே முடியாதபடிக்கு விலைவாசிகள் அதுவும் அத்தியாவசியப் பொருட்களினதும், சேவைகளினதும் விலைவாசிகள் நினைத்தவுடன் பெருமளவுக்கு உயர்ந்து செல்வதால் இவர்கள் பெருந்துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

இதன் விளைவாக சம்பள அதிகரிப்பை அரசிடம் இவர்கள் கோருகின்றார்கள். வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்ற அரசின் பதில் மக்களை மிகவும் கோபப்படுத்திவிட்டது. இதனால் தான் அரச ஊழியர்களின் பல்வேறு தொழிற் சங்கங்களும் வரவு செலவுத் திட்டம் வரும் வரை எம்மால் விலைவாசி உயர்வதை தாங்க முடியாது. எனவே இடைக்காலக் கொடுப்பனவாக 3000 ரூபாவை அரசு வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. தவறின் வேலைநிறுத்தம் உள்ளிட்ட தொழிங்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அவை கொடி காட்டியுள்ளனர்.

எதிர்க்கட்சிகள் ஊழியர்களின் இந்த மனக்குமுறலை விசிறிவிட்டு பெரும் தொழிற்சங்க போராட்டமாக

**ஏனெனில் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் என்ற தங்கத் தட்டிலே தான் இலங்கைக்கான வெளிநாட்டுதவி என்ற பொற்கிளி இருக்கிறது. அதனை அடைவது ஒன்றே நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழி.**

வளர்த்தெடுக்க முற்படுகின்றன. இதற்காக அவை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல தந்திரமாகச் செயற்படுகின்றன. ஜே.வி.பிக் காரர்களைப் போல ஆவேசமாகக் களத்தில் குதிக்காமல் பையப் பையக் காரியத்தில் இறங்குகின்றன எதிர்க்கட்சிகள். குறிப்பாக ஐ.தே.கட்சி. ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலத்தில் பிரதி நிதி அமைச்சராக இருந்தவர் பந்துல குணவர்த்தன. இவர் மக்களுக்குக் கசப்பாக இருக்கக்கூடிய பொரளாதாரத் தகவல்களையே பத்திரிகையாளர்கள் மாநாடுகளில் வெளியிடுவார். அரசாங்கம் சந்திக்கும் நெருக்கடிகளையும், அதன் விளைவாக அரசாங்கத்தால் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளில் எந்தளவுக்கு இறங்க முடியும் என்பதையும் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கும் பாங்கு பந்துலவுடையது. ஆகா ஓகோ, ஆனை தருவோம் பூனை தருவோம் என்ற பாணியில் பந்துல பேசுவதில்லை. அல்லது அப்படி பேச சிறீலங்காவின் பொருளாதார நிலைமை இவரை அனுமதிக்கவில்லையென தெரியாது.

ஏறக்குறைய இவரது பாணியிலேயே இன்றைய நிதியமைச்சரும் பேசத் தொடங்கியிருக்கிறார். கலாநிதி சரத் அமுறுகம தேர்தலுக்கு முன்னர் வாய்ச் சவடாலில் அனுராவுக்கும் சவால் விடுக்கக்கூடியவராகவும் விளங்கினார். ஆனால் அவரது கட்சி ஆட்சி பீடமேறிய அவருக்கு நிதியமைச்சு வழங்கப்பட்டுவிட்ட பின்னர் அவரது சுருதி குறைந்து தான் விட்டது. அண்மை நாட்களில் அவரது அறிவிப்புக்கள் மக்களை கிலி செய்யுமளவுக்குப் பயங்கரமானதாகவும் அமைந்துவிட்டன. அந்த வகையில் பந்துலவையும் மிஞ்சிவிட்டார் அமுறுகம.

இந்த அமுறுகம அண்மையில் பஞ்சமுத தத்துவமொன்றை அருளியிருக்கிறார். சிறீலங்காவின் பொருளாதாரத்தை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கும் இந்த பஞ்சமுதங்கள் குறித்து அவர் வெகு கட்டாயமாக கருத்துக்களை முன் வைத்தார். பெற்றோலியக் கூட்டுத்தாபனம், போக்குவரத்துச் சபை, புகையிரத சேவை, முதலீட்டுச் சபை, மின்சார சபை என்பன இலங்கையின் பொருளாதாரத்தை உறிஞ்சிக் குடிக்கும் பிசாசுகளாக மாறிவிட்டன. இந்த நிறுவனங்களின் ஊழல், மோசடி, நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்து போய்

# சிறீலங்காவின் பொருளாதாரம் எதுவரை தாக்குப்பிடிக்கும்?

கிடக்கின்றன என்பதே அமுறுகமவின் பஞ்சமுத தத்துவம்.

இந்தப் பூதங்களை வழிக்குக் கொண்டுவர அவற்றின் கோரப் பசியை அடக்க என்னதான் செய்யப் போகிறார் ஆமுறுகம? வழமையாகவே இப்படியான வியாதியுள்ள அரசு நிறுவனங்களைத் தனியாருக்கு விற்றுவிடுவது தான் 1977ற்குப் பின்னர் சிறீலங்காவின் நடைமுறையிலுள்ள சிகிச்சை முறையாகும். ஆனால் இந்த சிகிச்சை முறையினை முற்றாகவே எதிர்க்கும் ஜே.வி.பியினரின், அச்சுறுத்தலையும் மீறி பூதங்களைக் கட்டியாளக்கூடியவர்களுக்கு கையளித்துவிடப் போகிறது அரசு. இதன் மூலம் தனது சுமையை இறக்கி வைத்துவிட துடிக்கிறது அது. ஆனால் இந்தச் சுமை இறக்கப்படப் போவது அப்பாவிப் பொது மக்கள் மீது தான் என்பதே கசப்பான யதார்த்தம். ஏனெனில் பூதங்களை கையேற்கும் தனியார் நிறவனங்கள உடனடியாகவே கட்டணங்களையும், விலைகளையும் உயர்த்தி விடுவார்கள் என்பதை ஊகித்துக் கொள்வதற்கு கடந்த கால நிகழ்வுகள் எம்மை அறிவூட்டியுள்ளன.

அது ஒரு புறமிருக்கட்டும். இந்தப் பூதங்களின் கையளிப்பு உருவாகப்போகும் நெருக்கடிகளை, அரசியல் நெருக்கடிகளை சந்திரிகா அம்மையார் எப்படிச் சமாளிக்கப் போகிறார்? ஜே.வி.பியின் நெருக்குதலையும் அரசிலிருந்து வெளியேறிவிடப் போவதான அச்சுறுத்தலையும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்?

இதற்குத் தான் ஐ.தே.கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றினை த் தாபிக்கும் மாற்றுயுத்தியை அம்மையார் வகுத்திருக்கிறார். இதற்கு அடிகோலு முகமாக வெகுவிரைவில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசவிருக்கிறார் அம்மையார்.

இந்தப் பேச்சுக்ளில் முன்னேற்றம் ஏற்படுமாயின் ஜே.வி.பியினருக்கு வெட்டுக்காட்டி விட்டு தன் வழியே செல்லத் தயாராகிவிட்டார். சந்திரிகா அந்தளவுக்கு ஜே.வி.பியினர் கடிவாளம் பிடிக்க முற்பட்ட ஜே.வி.பியை காய்வெட்டி, அவர்களது கொட்டத்தை ஒட்ட நறுக்குவது அம்மையாரின் இலக்குகளில் ஒன்று. இதற்கு தமது நேரடி எதிரியான அல்லது போட்டியாளரான ஐ.தே.கட்சியுடன் கைகோர்க்கத் தயாராகி விட்டார் அம்மையார்.

இந்தக் கைகோர்ப்பின் பின்னர் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகக் காட்டி கொள்வதில் அம்மையாரின் முழுக்கவனமும் நிச்சயம் திரும்புமென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் என்ற தங்கத் தட்டிலே தான் இலங்கைக்கான வெளிநாட்டுதவி என்ற பொற்கிளி இருக்கிறது. அதனை அடைவது ஒன்றே நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழி. அந்த வழியை அடைவது என்ற அவசரத் தேவை சந்திரிகா சமாதானப் பேச்சுக்களை நோக்கி நிச்சியம் நகரத்தான் போகிறார்.
இலண்டனிலிருந்து பாரிஸ் ஊடாகக் கொழும்பு திரும்பிய பின்னர் அவர் வெளியிட்ட கருத்துக்களிலும் இதையே கொடி காட்டியிருக்கிறார். யுத்தம் வரவே வராது என்ற அவரது கூற்றின் உள்ளர்த்தம் சமாதானப் பேச்சு ஆரம்பமாகப் போகிறது. எனவே உதவிகளை விடுவியுங்கள் என்ற உதவி வழங்கும் நாடுகளுக்கான செய்தியே.

ஆனால் இந்த உதவி வரும் வரைக்கும் உதவி கிடைத்து நாட்டின் பொருளாதாரச் சிக்கல்களுக்கு ஏதாவது தீர்வுகளைச் காணும் வரைக்கும் நாட்டு மக்கள் என்ன செய்யப்போகிறார்கள்? இரண்டு பாணை கத்தி முனையில் கொள்ளையடித்தவர்கள் அதுவரை காத்திருப்பார்களா?

**– பு. சத்தியமூர்த்தி –**




சிங்கப்பூரில் உங்கள் இல்லம்
01-22 Belilios lane, off serangoon road, 219962 Singapore
கட்டணங்கள் s$40ல் இருந்து. குளிரூட்டப்பட்ட சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்காப்புப்பெட்டி, இணைந்துள்ள குளியல் அறை வசதிகள் உள்ளன.
கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி
திருமணச் சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல். விமான நிலையத்திலிருந்து ஏற்றிச்செல்லல். உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்படும்.
முன்கூட்டியே தொலைபேசியூடாகப் பதிவுசெய்வதற்கு: 65 : 63 96 55 00
அல்லது Email: newkinn@singnet.com.sg

CEYLON INN
'தமிழில் பேசுவோம் தாய் மொழியை வளர்ப்போம்'

# சிறீலங்கா அரசுக்குள் தோன்றியுள்ள பனிப்போர்

**ஜே.வி.பி என்ற தரப்பினரிடையே தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்ற மனக்கசப்புகள் தான் தற்போது ஐக்கிய தேசியக்கட்சிக்கு பிரதான அரசியல் வேலைத்திட்டங்களாக அமைந்துள்ளது. இந்நிலையில் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள் என்ற சர்வதேச அழுத்தங்கள் நோர்வேயின் முயற்சிகள் எல்லாமே தற்போதைய நிலையில் கானல் நீர்தான்.**

சிறீலங்காவின் தென்பகுதி அரசியலில் சமீபகாலமாக புதிய புதிய பிரச்சினைகள் உருவெடுத்து வருகின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குள் ஏற்கனவே பிரச்சினைகள் இருந்து வந்தன. தற்போது அதனையும் தாண்டி முன்னணியின் பிரதான பங்காளிக்கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. அதேவேளை சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையே போட்டிகள் அதிகரித்துள்ளன. அதேநேரம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஐக்கிய தேசிய முன்னணி ஜனாதிபதியை காரசாரமாக விமர்சிக்கின்றது. இந்த முரண்பாடுகள் குழப்பங்களினால் இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது, புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர்ந்து அமுல்படுத்தவேண்டிய அவசியமான நடவடிக்கைகள் எல்லாமே கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன.

ஏற்பாட்டாளரான நோர்வேயுடன் சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் ஒப்பாசாரத்திற்கு பேசுகின்றார்களே தவிர, நல்ல நோக்கத்தோடு யதார்த்தமாக சிந்தித்து செயற்படுவதாக இல்லை. அரசாங்கமும் பிரதான எதிர்க்கட்சியும் மற்றும் அரசாங்கத்திற்குள் இருக்கின்ற பங்காளிக்கட்சிகளும் தமக்கிடையேயான முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கான அல்லது அதிகாரங்களை கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றார்களே தவிர இனப்பிரச்சினை விடயத்தில் அவர்கள் கவனம் திரும்பியதாக இல்லை. கடந்த ஒருமாத காலமாக ஜனாதிபதி புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் குறித்த ஏற்பாடுகள் எதனையும் செய்ததாக தெரியவரவில்லை. கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்

**– கொழும்பிலிருந்து ஊரோடி**

பிரட்ஸ்கார் மற்றும் பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரிபன் இவான் ஆகியோர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு பல தடவை முயன்றும் அது கைகூடவில்லை. தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலண்டனுக்கு செல்ல முற்பட்ட வேளையில் கூட ஜனாதிபதியை சந்திக்க நோர்வேத் தூதுவர் முயற்சி எடுத்தும் அது பயனளிக்கவில்லை.

அதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்சவை தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கார் சந்திக்கச் சென்றபோது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக தனக்கு உத்தியோகபூர்வமான அதிகாரங்கள் எதுவும் இல்லையென பிரதமர் கூறியதாக அறியமுடிகின்றது. இவர்கள் இவ்வாறு தவிப்பதற்கு காரணம் ஒன்று இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க இவர்கள் உடன்படாமை, மற்றையது தமக்குள்ளே இருக்கின்ற முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நேரங்களை செலவிடுகின்றனர். இந்த இரு காரணங்களும் நாட்டின் தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கைகளை ஒத்திப்போடவைக்கின்றன. இவர்கள் முரண்பாடுகளை விலாவாரியாக ஆராய்வதாக இருந்தால் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கும் பிரதமர் மகிந்த ராஜபக்சவிற்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற பனிப்போர், அதாவது சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவியை அடுத்து யார் பொறுப்பேற்பது அல்லது அடுத்து ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்காவை நிறுத்துவதா? அல்லது மகிந்த ராஜபக்சவை நிறுத்துவதா? என்ற தீவிரமான போட்டி நிலவுகின்றது.

இந்த விடயம்? தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்காவிற்கும் பிரதமர் மகிந்த ராஜபக்சவிற்கும் இடையே அவ்வப்போது வாய்த்தர்க்கமும் ஏற்பட்டிருக்கின்றது. அதேவேளை சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஒரு பகுதியினர் மகிந்த ராஜபக்சவை ஓரம்கட்டுவதற்கும் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையில் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். அதேபோன்று பிரதமர் மகிந்த ராஜபக்சவிற்கும் ஆதரவாக ஒரு குழு செயற்படுகின்றது. கட்சிக்கான தலைமைக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மகிந்த ராஜபக்ச கலந்துகொண்ட போதும் நாட்டப்பட்ட அடிக்கல்லில் அவரது பெயர் பொறிக்கப்படாமைக்கு அனுரா பண்டாரநாயக்காவே காரணம் என கட்சியின் சில முக்கிய உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். அதற்கு ஜனாதிபதியும் உடந்தை என்றும் கட்சி ஆதரவாளர்கள் சிலர் கருதுகின்றனர். அதேவேளை ஜனாதிபதி இல்லாத வேளை கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவிட வேண்டும் என்ற பிரதமர் மகிந்தாவின் முயற்சியை சிதறடிப்பதற்காகவே நாட்டப்பட்ட கல்லில் அவர் பெயரை அகற்றியதாக ஜனாதிபதிக்கு ஆதரவான கட்சி ஆதரவாளர்கள் சிலர் கூறுகின்றனர். இவ்வாறு சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் முரண்பாடுகள், குழப்பங்கள் நிலவிக்கொண்டிருக்கும் அதேநேரம் அவற்றைப் பயன்படுத்தி அந்த கட்சியை முற்று முழுதாக ஓரம்கட்டி அதற்குப் பதிலாக இரண்டாவது தேசியக்கட்சியாக தங்களை வளர்த்துக்கொள்வதற்கு ஜே.வி.பி முனைப்புக் கொண்டுள்ளது.

சிறீலங்கா சுதந்திரக்கட்சியையும் உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் இருந்து கொண்டு கறையான் அரிப்பது போன்று சிறீலங்கா சுதந்திரக்கட்சியை ஜே.வி.பி மெதுமெதுவாக விழுங்கி வருகின்றது. தங்களை ஓரங்கட்டுவதற்கு ஜே.வி.பி எடுக்கின்ற நடவடிக்கைகள் நன்றாக தெரிந்த நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ச விழிப்பாகவே இருக்கின்றார் போல் தெரிகின்றது. ஆனால் ஜனாதிபதியும் அனுரா பண்டாரநாயக்காவும் கட்சியின்? ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரும் ஜே.வி.பியின் அவ்வாறான சதி முயற்சிகளை தெரிந்தும் தெரியாதது போன்று செயற்படுகின்றனர். காரணம் மகிந்த ராஜபக்சவை ஓரங்கட்டுவதே அவர்களின் பிரதான இலக்கு. இவ்வாறு சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ளும் இருக்கின்ற பரஸ்பர முரண்பாடுகள் அல்லது மனக்கசப்புக்களை தமக்கு சாதகமாக பயன்படுத்த ஐக்கிய தேசியக்கட்சி முற்படுகின்றது.

அரசாங்கத்திற்குள் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியாத சில விடயங்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி முன்னுரிமை கொடுக்கின்றது. பிரதானமாக பிரதமர் மகிந்த ராஜபக்சவையும் ஜனாதிபதி சந்திரிக்காவையும் ஒருவருக்கொருவர் சீண்டிவிடும் வேலைகள் ஜே.வி.பியையும் மகிந்த ராஜபக்சவையும் நேரடியாக பகைத்துக்கொள்ள வைக்கும் நடவடிக்கைகள் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த விடயத்தில் ஜே.வி.பி உடன்படாத இடைக்கால நிர்வாக சபைக்கு ஆதரவாகப் பேசி அரசாங்கத்திற்குள்ளும் குழப்பங்களை விளைவித்தல் போன்ற பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை இந்த ஐக்கிய தேசியக்கட்சி செய்து வருகின்றது. மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் ஒரே நோக்கத்திற்காகவே ஐக்கிய தேசியக்கட்சி அவ்வாறு செயற்படுகின்றது என்பது உண்மை. புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி அவ்வப்போது குரல் எழுப்புவது தமிழ் மக்களின் நன்மைக்காக அல்ல.

அரசாங்கத்திற்குள் இருக்கக் கூடிய பகைமை உணர்வுகளை அதாவது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் மற்றும் ஜே.வி.பி என்ற தரப்பினரிடையே தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்ற மனக்கசப்புகள் தான் தற்போது ஐக்கிய தேசியக்கட்சிக்கு பிரதான அரசியல் வேலைத்திட்டங்களாக அமைந்துள்ளது. இந்நிலையில் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள் என்ற சர்வதேச அழுத்தங்கள் நோர்வேயின் முயற்சிகள் எல்லாமே தற்போதைய நிலையில் கானல் நீர்தான். சிறீலங்காவின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைவதற்கும் இந்தக் குழப்பங்களே காரணம். விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, அரசியல் யதார்த்தம், பல்லின சமுதாயம் என்ற கோட்பாட்டை அங்கீகரித்தல் என்ற மனப்பக்குவம் சிறீலங்காவின் தென்பகுதி தலைமைகளுக்கு ஏற்படும் வரை இந்தநிலை தொடரும்.

## அம்மா விளையாட்டு



# "வன்முறையாளர்களின் ஆயுதங்களைக் களைய சூடானிய அரசு தவறியுள்ளது"

– ஐ.நா. குற்றச்சாட்டு –



வன்முறைகள் நிகழும் சூடானின் தார்பூர் பகுதி குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஐ.நா.மன்றம், தார்பூரில் வன்முறையை முடிவுக்கு கொண்டுவருவதில் சூடானிய அரசு குறைவான அளவே முன்னேற்றம் கண்டுள்ளது என்றும், வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் என்று கூறப்படும் அரசு ஆதரவு ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக்களைய சூடானிய அரசு தவறியுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

தார்பூரில் உள்ள சர்வதேச கண்காணிப்பு படையை விரைவாகவும், பெரிய அளவிலும் விரிவுபடுத்தவேண்டிய அவசியம் இருப்பதாக அவ்வறிக்கை கூறுகிறது. பொதுமக்கள் உயிருக்கு இன்றளவும் ஆபத்து இருக்கிறது என்கிற உதவியமைப்புகளின் கூற்றை உறுதிசெய்வதாக இவ்வறிக்கை அமைந்துள்ளது. சூடானிய அரசு நடவடிக்கை எடுப்பதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபை விதித்திருந்த முப்பது நாள் காலக்கெடு ஏற்கனவே முடிந்து விட்டதென்றாலும் சூடானிய அரசு மீது தண்டனைத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்று இவ்வறிக்கை பரிந்துரை செய்யவில்லை. இனி இந்த அறிக்கை பாதுகாப்பு சபையில் அடுத்தகட்ட பரிசீலனை செய்யப்படும்.

இதுஇவ்வாறிருக்க, அரச ஆதரவு ஆயுதக் குழுவினரால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு, மற்றும் பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ள தார்பூர் பிராந்தியத்துக்கு ஆயிரக்கணக்கான சர்வதேச படையினரை அனுப்பும் திட்டத்துக்கு சூடான் அரசு எச்சரிக்கையுடன் பதிலளித்துள்ளது. சர்வதேச சமாதானப்படை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிய சூடானின் வெளியுறவு அமைச்சர் முஸ்தபா ஒஸ்மான் இஸ்மாயில், ஆபிரிக்க ஒன்றியத்தில் இருந்து மேலதிக கண்காணிப்பாளர்களை நிறுத்துவது குறித்து பேச தான் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

சூடான் அரசாங்கம் தனது சொந்த மக்களை பாதுகாக்க தவறிவிட்டது என்றும் தற்போது அது சர்வதேச உதவியை ஏற்க வேண்டும் என்றும் கூறிய சூடானுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு தூதுவர் ஜான் புறொங்க் அவர்களின் கூற்றுக்கு பதிலளிக்கு முகமாகவே இஸ்மாயில் இவ்வாறு கூறினார்.

# மீண்டும் காவிரிப் பிரச்சனை!

தமிழ்நாடு - கர்நாடக மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சனையை தீர்க்க 13 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கர்நாடக அரசு கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்படுவதை தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி உட்பட தமிழக தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

நடுவர் மன்றத்தில் கர்நாடகாவுக்கு நியாயம் கிடைக்காது என்று கூறி, அது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தை நாட அனைத்துக் கட்சிகளின் கருத்தை கர்நாடகா அரசு கேட்டிருப்பது, தனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக ஜெயலலிதா கூறியுள்ளார். நடுவர் மன்றத்தை மாற்றியமைக்கக் கோருவது அதன் தீர்ப்பை தாமதிக்கச் செய்வதற்கான யுக்தி என்று கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார். இவ்வாறு மாற்றியமைக்க முனைந்தால் அதனை எவ்வாறாயினும் தடுத்து நிறுத்துவோம் என தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

# மாணவியை வல்லுறவு புரிந்து கொலைசெய்த வங்கதேச காவல் துறையினருக்கு தூக்கு

வங்கதேசத்தில் பதிமூன்று வயது மாணவியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததாக குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்த முன்னாள் காவற்துறையினர் இருவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. தலைநகர் தாக்காவுக்கு வடக்கிலுள்ள ரங்பூர் சிறையில் இருவரும் தூக்கிலிடப்பட்டனர். வங்கதேசத்தில் மரண தண்டனையை எதிர்கொண்ட முதல் காவற்துறையினர் இவர்கள்தான்.

ஒன்பது வருடங்களுக்கு முன்பு, யஸ்மின் என்ற பெயர் கொண்ட மாணவி கடத்தப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, கழுத்து நெறித்து கொலை செய்யப்பட்டிருந்தாள். இச்சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூன்றாவது காவற்துறையினர் கருணைமனு அனுப்பியதனால் இன்னும் காவலில் வைக்கப்பட்டுள்ளார். வங்கதேச அதிபர் இவருடைய கடைசி நேர கருணை மனுவை பரிசீலித்துவருகிறார்.

# "லெபனான் தேர்தலில் தலையிடவேண்டாம்"

- சிரியாவுக்கு ஐ.நா.சபை அறிவுரை -



ஜனாதிபதி எமிலே லாகுட்

இஸ்ரேல் அருகே உள்ள நாடு லெபனான். அந்த நாட்டு அரசியலில் சிரியா ஆதிக்கம் அதிகம். உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது அதற்கு உதவுவதற்காக 17 ஆயிரம் சிரியா துருப்புகள் லெபனானில் தங்கி உள்ளன. லெபனானில், சிரியா ஆதரவு பெற்ற எமிலே லாகுட் ஜனாதிபதியாக இருந்து வருகிறார். அவரது 6 ஆண்டு ஆட்சிக்காலம் வருகிற நவம்பர் மாதத்துடன் முடிவு அடைகிறது. இதை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்க லெபனான் நாடாளுமன்றம் சட்டத்திருத்தம் கொண்டுவர இருக்கிறது. இதன் மீது லெபனானின் 128 உறுப்பினர் கொண்ட நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடக்கிறது.

இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்பு சபையில், லெபனான் ஜனாதிபதி தேர்தலில் சிரியா தலையிடக்கூடாது என்றும், லெபனானில் உள்ள சிரியா இராணுவம் திரும்பப் பெறவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 9 நாடுகள் வாக்களித்தன. மொத்தம் உள்ள 15 உறுப்பினர்களில் 6 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்த தீர்மானத்தை அமெரிக்காவும், பிரான்சும் கொண்டு வந்தன. "சிரியா துருப்புகள் எங்கள் நாட்டு அழைப்பின் பேரிலேயே எங்கள் நாட்டுக்கு வந்தன" என்று லெபனான் அதிகாரி முகமது ஈசா கூறினார். "லெபனானில் இஸ்ரேல் இராணுவம் இன்னும் முகாமிட்டு இருக்கும் நிலையில் சிரியா இராணுவம் வெளியேறத் தேவை இல்லை" என்றும் அவர் கூறினார்.

# வைகோ மீதான பொடா வழக்கு : தமிழக அரசின் மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு



பொடா சட்டத்தின் கீழ் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ மற்றும் அவரது கட்சியினர் 8 பேர் மீது போடப்பட்ட வழக்கை திரும்பப்பெற்றுக் கொள்ளுவதாக தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை பொடா சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. மதுரை திருமங்கலம் அருகே 2002ம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்து பேசியதாக வைகோவும் அவரது கட்சியினர் 8 பேரும் கைது செய்யப்பட்டனர்.

பிணையில் செல்ல மறுத்ததால் 575 நாட்கள் வைகோ சிறையில் இருந்து, பின்னர் தேர்தல் பணிகளுக்காக பிணையில் வெளியே வந்தார்.


தடை செய்யப்பட்ட அமைப்புக்கு ஆதரவாக பேசுவது பொடா சட்டத்தை மீறுவதாக ஆகாது, என்று கூறிய போடா மறு ஆய்வுக் குழு, ஆகவே வழக்கை திரும்பப்பெறுமாறு தமிழக அரசுக்கு பரிந்துரை செய்தது. இதனையடுத்து வழக்கை வாபஸ் பெறுவதாக தமிழக அரசு மனுச் செய்தது. அந்த மனுவையே தற்போது பொடா சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இந்த முடிவையிட்டு தான் ஆச்சரியம் அடையவில்லை என்றும், என்றாவது ஒரு நாள் நியாயம் வெல்லும் என்றும் வைகோ கூறியுள்ளார். ஈழத் தமிழருக்கான தனது ஆதரவுப் போராட்டம் தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அத்வானி கைது செய்யப்பட்டு விடுதலை

இந்தியாவின் முக்கிய எதிர் கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் முக்கிய தலைவரும் இந்தியாவின் முன்னாள் துணைப் பிரதமருமான எல்.கே.அத்வானி, உமா பாரதி கைது தொடர்பாக பெங்களூர் நகரில் ஆர்ப்பாட்டம் செய்தபோது கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டார். 1994ல் கர்நாடகாவில் ஹுப்ளி நகரில் நடந்த அரசியல் ஆர்ப்பாட்டத்தில் பேசி கொலை முயற்சியையும் கலகத்தையும் தூண்டினார் என்று குற்றஞ் சுமத்திய கர்நாடக நீதிமன்றம் உமா பாரதியை சென்ற வாரம் 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைத்தது. இதனை எதிர்த்தே ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

# நூற்றாண்டின் சிறந்த மனிதர் கமலஹாசன்

-கோவை கல்லூரி மாணவர்கள்-



நடிகர் கமலஹாசனுக்கு `இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர்' விருதை, கோவையை சேர்ந்த கல்லூரி மாணவ- மாணவிகள் வழங்குகிறார்கள். கோவையில் உள்ள ஜி. ஆர்.தாமோதரன் அறிவியல் கல்லூரி யின் 10வது ஆண்டு விழா, திங்கட்கிழமை நடைபெறுகிறது. விழாவில் நடிகர் கமலஹாசன் கலந்து கொள்கிறார். அதன் பிறகு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கமலஹாசனின் திரையுலக சேவை, சமூக சேவை, மனித நேயம் ஆகியவைகளை பாராட்டி, `இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர்' என்ற விருதை அவருக்கு வழங்குகிறார்கள். கல்லூரி மாணவ-மாணவிகள் சார்பில் இந்த விருது வழங்கப் படுகிறது.


# ஈராக்கில் கடத்தப்பட்ட 3 இந்திய பணயக் கைதிகளும் விடுதலை



ஈராக்கில் கடந்த யூலை மாதம் கடத்தப்பட்டு பணயம் வைக்கப் பட்ட மூன்று இந்திய வாகனச் சாரதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குவைத்தை சேர்ந்த கே.ஜி.எல் போக்குவரத்து நிறுவனத்துக்கு பணியாற்றிய 3 இந்தியர்களும், 3 கென்யா நாட்டவர்களும், 1 எகிப்து நாட்டவரும் கடந்த யூலை மாதம் கிளர்ச்சிக்காரர்களால் பிடித்து செல்லப்பட்டனர். விடுவிக்கப்பட்ட இந்தியர்கள் மூவரும் உடனடியாக இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்கு புதுடில்லி விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

# "அமெரிக்க மக்களை காப்பாற்றுவதற்காகவே போர்"

- புஷ் அறிவிப்பு -



ஈராக் மக்களை சதாம் பிடியில் இருந்து காப்பாற்றுவதற்காகவே ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டதாக தெரிவித்திருந்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், இப்போது அமெரிக்க மக்களை பாதுகாப்பதற்காகவே ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்ததாக தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற குடியரசுக் கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், பெருமைக்காகவோ, அதிகாரத்துக்காகவோ நாங்கள் ஈராக்கிலும், ஆப்கானிலும் போர் செய்யவில்லை. அமெரிக்க மக்களின் உயிரைக் காப்பாற்றத்தான் போர் செய்கிறோம். இதில் நாம் வெற்றி பெறுவோம். பாதுகாப்பான உலகத்தை நாம் உருவாக்குவோம். ஜனநாயகக்கட்சி வேட்பாளர் கெர்ரி வரியை உயர்த்துவார். தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பலவீனமானவர் என்பதை அவர் நிரூபிப்பார். பாலஸ்தீனியர்களுக்கு ஜனநாயகமும், சீர்திருத்தமும் அவர்கள் தொட்டுவிடும் தூரத்தில் உள்ளது, என்றும் தனதுரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஈராக்கில் யுத்தம் நடத்தி வருவதற்காக புஷ்சுக்கு கண்டனம் தெரிவித்து, நியூயோர்க் நகரில் சவப்பெட்டி ஊர்வலம் நடந்தது. குடியரசுக் கட்சி மாநாடு நியூயோர்க் நகரில் தொடங்குவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு புஷ்சின் ஈராக் கொள்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து `சவப்பெட்டி' ஊர்வலம் நடத்தப்பட்டது.

இலட்சக்கணக்கான போர் எதிர்ப்பாளர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். 4 இலட்சம் பேர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டதாக இந்த ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்த `அமைதி மற்றும் நீதிக்கான ஐக்கிய அமைப்பு' என்ற குழு கூறி உள்ளது.

ஈராக்கில் கொல்லப்பட்ட ஒவ்வொரு அமெரிக்க வீரரையும் நினைவு கூரும் வகையில் மாதிரி சவப்பெட்டிகள் ஆயிரம் இந்த ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. சவப்பெட்டிகள் மீது அமெரிக்க தேசியக் கொடி போர்த்தப்பட்டு இருந்தது. சினிமா நடிகர் மைக்கேல் மூர், ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு பந்தயத்தில் இடம் பெற்று இருந்த ஜெஸ்சிஜாக்சன் ஆகியோர் ஊர்வலத்துக்கு தலைமை தாங்கினர். ஈராக் மீது தேவையில்லாமல் போர் தொடுத்ததாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

# `பொடா` விரைவில் விலக்கப்படும்

- மன்மோகன் சிங் -

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் `பொடா`வை இரத்து செய்ய விரைவில் அவசரச் சட்டம் கொண்டு வரப்படும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார். சென்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பொடாவை இரத்து செய்யும் மசோதாவை கொண்டுவர எண்ணியிருந்தும் நாடாளுமன்றம் சரியாக நடக்காததால் கொண்டுவர முடியவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

இதனிடையே, ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவுக்கு எதிரான பொடா வழக்கை வாபஸ் பெற தமிழக அரசு மனு கொடுத்திருந்தும், சிறப்பு நீதிமன்றம் மனுவை ஏற்க மறுத்திருப்பதன் மூலம் தமிழக அரசின் நாடகம் வெளிப்பட்டு இருக்கிறது என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

ஒரு பக்கம் வைகோ மீதான வழக்கை வாபஸ் பெற மனு கொடுத்துவிட்டு மறுபக்கம் பொடா விலக்கப்படுவதை எதிர்க்குமாறு மற்ற மாநில முதல்வர்களுக்கு ஜெயலலிதா கடிதம் எழுதிய செயல் இந்த நாடகத்தின் அங்கம் என்று கருணாநிதி கூறினார்.


# சேது சமுத்திரத் திட்டத்துக்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் அடுத்த ஆண்டு பணிகள் ஆரம்பம்

சேது சமுத்திரத் திட்டத்தை 2000 கோடி ரூபாய் செலவில் நடத்துவதற்கு இந்திய மத்திய அரசு முறையாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரங்களுக்கான குழு அதற்கு ஒப்புதல் அளித்ததாக மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இந்த திட்டத்தை இந்திய கப்பல் போக்குவரத்து கழகமும், தூத்துக்குடி துறைமுகமும் சேர்ந்து நடைமுறைப்படுத்தும்.

சென்னை, எண்ணூர், விசாகப் பட்டினம் மற்றும் பாராதீப் துறைமுகங்களும் இதற்கான ஆரம்பகட்டத் தேவைக்கான நிதியை அளிக்கவுள்ளன. சேது சமுத்திரக் கழகம் என்ற பெயரில் இதற்கான சிறப்பு செயல்பாட்டு நிறுவனம் ஒன்றும் ஏற்படுத்தப்படும். இதேவேளை, சேது சமுத்திரத்திட்டம் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திர திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது தமிழகத்திற்கு மகிழ்ச்சிக்குறிய பொன்னாள் என்று பிரதமர் மன்மோகன் சிங்குடன், தொலைபேசியில் பேசியபோது வைகோ பாராட்டினார். தமிழர்களின் நூற்றாண்டு கனவான சேதுக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றவும், அதற்கான பணிகளைத் தொடங்கவும் `சேது சமுத்திரக் கழகம் லிமிடெட்' என்ற அமைப்பை உருவாக்கி உத்தரவிட்டதற்காக தங்களுக்கும், தங்கள் அமைச்சரவைக்கும் தமிழக மக்களின் சார்பில் உளமார்ந்த நன்றி" என்று வைகோ கூறினார். ``இந்த நாள் தமிழகத்திற்கு மகிழ்ச்சிக்குரிய பொன்னாள். தமிழகமே உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறது" என்று வைகோ கூறினார்.

சேது சமுத்திரத்திட்டம், இலங்கையைப்பாதிக்கும் எனவும்கடல் கொந்தளிப்புகளை ஏற்படுத்தி, கரையோரப் பிரதேசங்களை கடலில் மூழ்கடிக்கும் எனவும் ஆய்வாளர்கள் எச்சரிக்கைவிடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.




IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 ஈரோ |
| சென்ன பட்டுரா | 30X500 | 1.50 ஈரோ |

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports Tel: 0049 -24625557

# உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?

## தலைமுடி தொடர்பான வேறேதும் பிரச்சினைகளா ?

## இன்றே உபயோகியுங்கள் NATURINA®

**இது ஓர் புதுமையான, இயற்கை மூலிகைகளைக்கொண்ட ஓர் துரித நிவாரணி !**

* Naturina வின் புதிய தயாரிப்புக்கள். முன்னரைவிட உயர்ந்த தரத்தில் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன.
* தலைமுடிகளைப் பராமரிப்பதில் கடந்த 5 வருடங்களாக ஐரோப்பாவின் முதல்தர தயாரிப்பாக விளங்குவது Naturina தயாரிப்புக்களே!
* தலைமுடி உதிர்வு, முடி மெல்லியதாக மாறுதல், முடியில் ஏற்படும் அழுக்கு, பொடுகு போன்றவை அறவே நீக்கி தலைமுடியை நன்றாக வளரச்செய்கிறது.
* முற்றிலும் இயற்கையானது!
* பக்கவிளைவுகளற்றது.
* வேறுபட்ட வடிவங்களில் - மாறாத தரத்தில் உங்கள் தலைமுடிகளை பராமரிக்கச் சிறந்த ஓர் நிவாரணி - Naturina




**குறிப்பு:** ஐரோப்பாவில் வாழும் யாவரும் *Naturina* தயாரிப்புக்களை விற்பனை செய்ய முடியும். நீங்கள் *Naturina* தயாரிப்புக்களை விற்க விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**Intercare Handels GmbH**

In der Fuchshoehle 4, 59069- Hamm- Germany
Tel: 0049 1805 915910 + 0049 2385 92080
Fax: 0049 1805 915920 + 0049 2385 920821
UK Order line 08 703501707
Internet: www.naturina.de

**Naturina vital & beautiful**

* *Naturina வின் புத்தம்புதிய அறிமுகம்!*
* உங்களது முகத்தில் அல்லது தோலில் கரும்புள்ளிகள் ஏதும் காணப்படுகின்றனவா?
* *இன்றே Naturina pigment Bleachinng emulsion ஐ உபயோகியுங்கள்!*
* இயற்கையான மூலிகைகளைக் கொண்டது, பக்க விளைவுகள் அற்றது!
* கரும்புள்ளிகள், சுருக்கங்கள் என்பவற்றை இல்லாமற் செய்து முகத்தை அழகுறச் செய்ய ஓர் சிறந்த நிவாரணி.




**தற்போது! விசேட கழிவுகளும், பரிசில்களும் வழங்கப்படுகின்றன!!**

---

பிரெஞ்சு சந்தாதாரர்களுக்கானது

~~75 euro~~
52 euro*

தனிஇதழ் ~~1.50~~ 1 euro

30%

## ஈழமுரசு ஐரோப்பா

POOBALAM WEEKLY

**செப்டம்பர் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது**

சந்தாதாரர்களுக்கு 30% விசேட கழிவு!

சந்தாவை புதுப்பிப்பவர்களுக்கும்
புதிய சந்தாதாரர்களாக இணைபவர்களுக்கும்
இவ்வாய்ப்பு வழங்கப்படுகிறது!

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்து வாசகர்களுக்கு நல்வாய்ப்புப் பரிசுகள்!!

இத்திட்டத்தின் கீழ் இணைந்த வாசகர்களின் சந்தா எண்கள் செப்டெம்பர் 2004 முதல வாரத்தில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு, 5 நல்வாய்ப்பாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்!!!

சந்தாதாரராயின் சந்தா இலக்கம் F ....................
பெயர் ....................
முகவரி ....................
தொலைபேசி இல ....................
தொலைநகல் இல ....................
கைத்தொலைபேசி ....................
Email ....................

(தாங்கள் காசோலைகள்/காசுக்கட்டளைகளை Poobalam S.A.R.L. என்ற பெயரில் அனுப்பி வைக்கவும்)

Poobalam S.A.R.L. 22 Rue Perdonnet, 75010 Paris.
www.poobalam.com email- poobalam@free.fr

Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16 RCS Paris B 452 164 817 (2004B03079)

* இத்திட்டம் பிரான்சுச் சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமானது

---

கடல் உணவு வகைகளின் சுரங்கம்

# ஆராழி

## ARALI

உங்களுக்குத் தேவையான அனைத்து கடல் உணவு வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்

தாயகக் கடலின் சுவையுணவு சுமந்து புலம் பெயர்ந்து வந்ததோ இந்த ஆராழி!

**D.K.S.R. Asian Suppermarkt**
Lostex Plad 8E
Svendborg
5700 Denmark
004562216773

**Tiefkuhl Feinkost**
Kanal Str 27
67655 Kaisers lautern
00496313609655
00491776035859
00491797157501

**Top Fisch Markt**
26.Rue Derdonnet
75010 Paris
0033144720107
Mobil -0033660290550

**Asia Trade Center-Gmbh**
Sumpf Str 24
6300 ZUG (CH)
0041417404830
0041764183553 Aschok

**Norwood Mini Market**
31.Station Road
South Norwood
London
SE.25.5AH
Tel. 00442087718585
Mobil 00447958529816 - 00447795386837




# தோல்வியில் முடிவடைந்த பணய நாடகம்

## மாணவர்கள் உட்பட 350ற்கும் மேற்பட்டவர்கள் பலி

ரஷ்யாவில் மீண்டும் ஒரு பணய நாடகம் தோல்வியில் முடிவடைந்திருக்கிறது. இந்த நடவடிக்கையில் 155 வரையான பாடசாலை மாணவர்கள் உட்பட 350 வரையனோர் பலியாகியுள்ளனர். அத்துடன் இதுவரை 180 பேர்வரை காணாமல் போயுள்ளனர். கடந்தவாரம் இடம்பெற்ற இச்சம்பவம் உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த முதலாம் திகதி கோடை விடுமுறை முடிந்து ரஷ்யாவில் உள்ள பாடசாலைகள் மீள ஆரம்பித்தன. அன்றைய தினம் ரஷ்யா - செச்சினிய எல்லைப் புறத்தில், ரஷ்யாவின் பெஸ்லான் மாகாணத்திலுள்ள உள்ள பாடசாலைக்குள் நுழைந்த செச்சினிய தெமுராஸ அமைப்பைச் சேர்ந்த பெண்கள் உட்பட தீவிரவாதிகள், பாடசாலையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், அங்கிருந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றொர்களை பணயக் கைதிகளாக்கினர். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இதன்போது பணயமாக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

ரஷ்ய பாதுகாப்பு படையினர் தங்களது முற்றுகையை பலப்பிரயோகம் செய்து முடிவுக்குக் கொண்டுவர முயன்றால் தங்களது பணயக்கைதிகளைக் கொல்லப்போவதாக அச்சுறுத்தியிருந்த நிலையில் தீவிரவாதிகளும் ரஷ்ய அதிகாரிக்களுக்கும் இடையே மூன்று



நாட்களாக பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்றுவந்தன. இதன்போது, ஒஷடியாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள செச்சினிய போரளிகளை விடுதலை செய்யவேண்டும், செச்சினியாவில் இருந்து ரஷ்யப்படைகள் விலகிக்கொள்ளவேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை அத் தீவிரவாதிகள் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில், மூன்றாவது நாளான 3ம் திகதி வெள்ளிக்கழமை காலை 9.05 மணியளவில் பாடசாலையின் உடற்பயிற்சி கூடத்திற்குள் வெடிகுண்டுச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் கேட்டதையடுத்து, பணயக் கைதிகளை மீட்க ரஷ்ய கொமாண்டோப் படையினர் அதிரடித் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பாடசாலைக்குள் நுழைந்த தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை இடம்பெற்றதுடன், பணய நாடகம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

## உலக நாடுகளும் தலைவர்களும் கண்டனம்

இதற்கிடையே, இச்சம்பவத்தை, ஒரு காட்டுமிராண்டித்தனமான, பயங்கரவாத நடவடிக்கை என்று அமெரிக்கா கண்டனம் செய்துள்ளது. அமெரிக்கா, ரஷ்யாவுக்கு ஆதரவாக இருப்பதாக, அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையிலிருந்து



வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் வெளியிட்டுள்ள செய்தியில், ``தீவிரவாதிகளின் செயல் எந்த அளவுக்கு செல்லும் என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு இது. இந்த துயரமான நேரத்தில் ரஷ்ய மக்களுடன் சேர்ந்து இந்த இக்கட்டான நிலைமையை சமாளிக்க பிரார்த்திக்கிறோம்" என்று கூறி இருக்கிறார். இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேர் தீவிரவாதிகளின் மனிதாபிமானமற்ற இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்து இருக்கிறார். இங்கிலாந்து ராணி 2வது எலிசபெத், ரஷ்ய அதிபர் புதினுக்கு இரங்கல் செய்தி அனுப்பி இருக்கிறார்.

ஜெர்மனி அதிபர் ஜெரார்ட் ஷிரோடர், பாகிஸ்தான் அதிபர் முஷரப், சீன வெளியுறவு செய்தி தொடர்பாளர் காங்குவான், பிரான்ஸ், இஸ்ரேல், ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் நாட்டு பிரதிநிதிகளும் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர். அரபு நாட்டு தலைவர்கள் மற்றும் மத குருமார்களும் ரஷிய சம்பவத்தை வன்மையாக கண்டித்து உள்ளனர். பலியான குழநஞதைகளின் குடும்பத்தினரின் துயரங்களைப் பகிர்ந்து கொண்ட உலகத் தலைவர்கள் தீவிரவாதிகளுக்கு எதிராக கடும் கண்டனக் கணைகளை தொடுத்துள்ளனர்.

ரஷிய சம்பவத்துக்கு காரணமான தீவிரவாதிகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ள இந்திய பிரதமர் மன்மோகன்சிங், அதிபர் புதினுக்கு கடிதம் எழுதி இருக்கிறார். அதில் நிராயுதபாணிகளான பணய கைதிகள் பலியானது துரதிர்ஷ்டவசமானது என்று தனது துயரத்தை வெளிப்படுத்தியதுடன், மிக இக்கட்டான நேரத்தில் செயல்பட்டே தீரவேண்டிய கட்டாயத்தில் இருந்த இராணுவத்தினரின் நடவடிக்கையையும் பாராட்டி உள்ளார்.

## உடல்கள் அடக்கம்



தீவிரவாதிகளின் தாக்குதலில் பலியான பெரும்பாலானவர்களின் உடல்கள் இன்றும் (06.04.2004 திங்கட்கிழமை) நாளையும் அடக்கம் செய்யப்படுகின்றன. எனவே இந்த 2 நாட்களும் தேசிய துக்கதினமாக கடைபிடிக்கப்படும் என்று அதிபர் புடின் அறிவித்து உள்ளார். அவர் தொலைக்காட்சியில் பேசுகையில் இராணுவம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்றும் இனி இந்த விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் நாட்டின் ஒருமைப்பாடு வலுப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

தீவிரவாதிகள் வைத்த கண்ணி வெடிகள் முழுவதும் அகற்றப்பட்ட பிறகு, அஞ்சலி செலுத்துவதற்காக பாடசாலை கட்டடம் நேற்று திறக்கப்பட்டது. தாக்குதலில் பலியான மாணவ - மாணவிகளில் பெற்றோரும் மற்றும் உறவினர்களும் பாடசாலைக்கு சென்று மலர்க் கொத்துகளை வைத்து இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். தீவிரவாதிகளின் பிடியில் இருந்தபோது குடிக்க தண்ணீர் கிடைக்காமல் பல குழந்தைகள் சிறுநீரை குடித்த அவலம் நேர்ந்தது. இதனால் சிலர் தண்ணீர் போத்தல்களை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். அந்த பாடசாலை நினைவுச் சின்னம் ஆக்கப்படும் என்றும் வேறு இடத்தில் புதிய பாடசாலை கட்டப்படும் என்றும் வடக்கு ஏசட்டியான் மாகாண அரசு அறிவித்துள்ளது.

## மாணவர்களின் உணர்வலைகள்...!

❐ உயிர் தப்பிய அசாமத் கிசோயேவ் என்ற 14 வயது மாணவன் கூறியதாவது, தீவிரவாதிகள் முதலில் எங்களை நன்றாகத்தான் நடத்தினார்கள். குடிக்க தண்ணீர் கொடுத்தனர். ஆனால் பின்னர் நாயைப்போல் மிகவும் மோசமாக நடத்தினார்கள். காற்றோட்டம் இல்லாத சிறிய அறையில் காற்றோட்டம் இல்லாததால் வெப்பத்தில் நாங்கள் தவித்தோம். புழுக்கம் தாங்க முடியாததால் ஆடைகளை களைந்து விட்டு 3 நாட்கள் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருந்தோம். நூற்றுக்கணக்கான பேர் இருந்தாலும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ள முடியவில்லை. குடிக்க தண்ணீர் தராததால் தாகம் வாட்டியது. தாகத்தை போக்குவதற்காக எங்கள் சிறுநீரையே நாங்கள் குடித்தோம். இயற்கை உபாதையை கழிக்கக் கூட செல்ல முடியாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருந்தோம். தீவிரவாதிகள் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்ததும் 20 பேரை சுட்டுக்கொன்றுவிட்டனர். அவர்களுடைய உடல்கள் அருகில் உள்ள ஒரு அறையில் கிடந்ததை பார்க்க முடிந்தது. எங்களை அடைத்து வைத்திருந்த உடற்பயிற்சிக் கூட அறையின் 2 பக்கமும் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை கட்டி இருந்தனர். இவ்வாறு அந்த மாணவன் கூறினான்.

❐ பெகோயேவ் (14) என்ற மற்றொரு மாணவன் கூறியதாவது, உள்ளே நுழைந்ததும் தீவிரவாதிகள் கத்தி கூச்சல் போட்டனர். இந்த இடத்தைவிட்டு நாங்கள் வெளியேற மாட்டோம். உங்களுடன் சேர்ந்து சாவதற்காகத்தான் நாங்கள் இங்கு வந்து இருக்கிறோம். எனவே இறைவனை பிரார்த்தித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் கண்மூடித்தனமாக சுட்டதில் குண்டுகள் தலைக்கு மேலே பறந்து சென்றன. 10 வயது சிறுவன் ஒருவன் குண்டு பாய்ந்து இரத்த வெள்ளத்தில் சாய்ந்ததை பார்த்ததும் பயத்தில் அலறினோம். நான் உயிர் பிழைத்தது அதிர்ஷ்டம்தான். எனது வகுப்பு தோழன்கள் 2 பேரும் உயிர் பிழைத்து விட்டனர். மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. அவர்களை தேடி வருகிறேன். இனி அந்த பள்ளிக்கூடத்தின் பக்கமே போகமாட்டேன். இவ்வாறு மாணவன் பெகோயேவ் பதட்டத்துடன் கூறினான்.

## வெளியேற மறுத்த ஆசிரியை சுட்டுக்கொலை

``எனது மகன் மிகவும் சிறியவன். அவனை காணவில்லை. தன்னைப்பற்றிய விவரங்களை கூட அவனுக்கு தெரியாது. அவன் என்ன ஆனானோ என்று தெரியவில்லை" என்று ஆலபர்ட் அதிகாயேவ் என்பவர் கண்ணீருடன் கூறினார். சில பெற்றோர் தங்கள் குழந்தைகளின் புகைப்படத்துடன் மருத்துவமனைக்கு வந்து அதைக் காட்டி தங்கள் குழந்தை அங்கு இருக்கிறதா? என்று விசாரிக்கிறார்கள். பணய கைதிகளாக பிடித்த மாணவர்களை சிறிய உடற்பயிற்சிக் கூட அறையில் தீவிரவாதிகள் அடைத்து வைத்து இருந்ததால் அவர்கள் இடவசதியும், காற்று வசதியும் இல்லாமல் பெரிதும் அவதிப்பட்டனர்.



தீவிரவாதிகள் படுகொலையை தொடங்கும் முன், குண்டுகளை வெடிக்கை வைத்து குழந்தைகளை கொன்று விடாதீர்கள் என்று உடற்பயிற்சி ஆசிரியர் யான்னிஸ் கனிதிஸ் (74) அவர்களை கெஞ்சியதாகவும் இதனால் ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் அவரை சுட்டுக் கொன்றதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. பள்ளிக்கூடத்தை முற்றுகையிட்டதும், வயதானவர் என்பதால் யான்னிஸ் கனிதிஸ்சை வெளியே தப்பிச் சென்று விடுமாறு தீவிரவாதிகள் கூறி இருக்கிறார்கள். அதற்கு அவர், மாணவ - மாணவிகளை விட்டுவிட்டு தான் மட்டும் தப்பிப்போக மாட்டேன்" என்று கூறியிருக்கின்றார்.

# மல்வத்தை மடாதிபதிக்கு வரலாறு தெரியாதா, மறதியா?

`விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பி தேர்தல்களில் போட்டியிட வேண்டும்' என்று மல்வத்த பௌத்த பீடத்தின் புதிய மடாதிபதி வண. திப்பொட்டுவாவே ஸ்ரீசுமங்கலதேரோ கூறியிருக்கிறார்.

இலங்கை சுதந்திரமடைந்த 1948-ஆம் ஆண்டிலிருந்து ஜனநாயக நீரோட்டத்தில்தான் தமிழ் மக்களும் நீச்சலடிக்கின்றனர்.

தமிழ் மக்களின் தாயகமான வடக்குக் கிழக்கிலிருந்து நாடாளுமன்றத்துக்கு 1983ஆம் ஆண்டுவரை தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் எதைச் சாதிக்க முடிந்தது?

கட்சி அரசியலில் தேசிய ஒற்றுமையைப் பேணிப்பாதுகாப்பதில் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பே தமிழ்த் தலைவர்கள் சிங்களப்பெரும்பான்மைத் தலைவர்களுடன் ஒத்துழைத்தனர். நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் சம்பந்தமாகத் தமிழ்த் தலைவர்கள் சிங்களத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். உடன்படிக்கைகளும் செய்து கொண்டனர். இவையாவும் சிங்களத் தலைவர்களினால் உதாசீனம் செய்யப்பட்டன.

இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவதற்காக பிரிட்டிஷ் அரசு அரசியல் சீர்திருத்தம் கொண்டுவந்த சமயத்தில் நியமிக்கப்பட்ட சோல்பிரி ஆணைக்குழுவிடம் கடந்தகால அனுபவத்தில் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு விடுவார்கள் என்று கருதி நாடாளுமன்றத்தில் சிங்களவர்களுக்கும் சிறுபான்மை இனத்தவர்க்கும் சம பலப் பிரதிநிதித்துவம் (ஐம்பதுக்கைம்பது என்று சிங்களவரால் வர்ணிக்கப்பட்டது) கோரி ஜி.ஜி.பொன்னம்பலம் பல மணிநேரம் வாதாடினார். இது ஏற்கப்படவில்லை. இதனால் நேரில் கோரிக்கை வைப்பதற்காக ஜி.ஜி. இலண்டன் சென்றார். இதே சமயம் இலங்கையிலிருந்த மற்றைய தமிழ்த் தலைவர்களுடன் டி.எஸ். சேனநாயகா பேச்சு நடத்தி வாக்குறுதியளித்து புதிய அரசியலமைப்புக்குச் சம்மதம் பெற்றார். சுந்தரலிங்கம், சிற்றம்பலம், நல்லை நடேசபிள்ளை ஆகியோர் டி.எஸ். சேனநாயகாவின் முதல் மந்திரிசபையில் அமைச்சரானார்கள்.

**ஜனநாயக முறையில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி வாதாடியபோது சிங்கள மக்களின் ஆணையைத்தான் சிங்களப் பெரும்பான்மை நிறைவேற்றியது. தமிழ் மக்களின் ஆணையை சிங்கள ஜனநாயகம் உதாசீனம் செய்தது. ஜனநாயக ஆட்சியில் நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் கொண்டுவந்த எந்தவொரு தனியார் பிரேரணையாவது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா?**

1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்ற முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்திலேயே மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறிப்பதற்கான மசோதாக்கள் கொண்டுவரப்பட்டன. இந்த மசோதாக்கள் அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டபோதே சுந்தரலிங்கம் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

மலையக மக்களின் உரிமைகளைப் பறிக்கும் மசோதா கொண்டுவரப்பட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து எஸ். ஜே. வி செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், டொக்டர் நாகநாதன் ஆகியோர் விலகி இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியைத் தொடங்கி தமிழ் மக்களுக்கு எதிரான சட்ட மூலங்களை எதிர்த்தனர்.

இதற்கிடையில் கிழக்கு மாகாணத்தில் உணவில் தன்னிறைவு என்று சொல்லி திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தை டி.எஸ். சேனநாயகா தொடங்கினார். கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் அபகரிக்கப்பட்டு அவை சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டுச் சிங்களக் கிராமங்களாயின. இதை எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் எழுப்பிய குரல் அமுக்கப்பட்டது.


1956ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கா இருபத்திநாலு மணிநேரத்தில் சிங்களத்தை அரியாசனத்தில் ஏற்றுவதாகத் தேர்தலில் வாக்குறுதியளித்து சிங்களம் மட்டும் மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தார். இதே சமயம் இதே தேர்தலில் சிங்களத்துக்கும் தமிழருக்கும் சம அந்தஸ்து தொடர்ந்திருக்கவேண்டுமென்று கோரி இடதுசாரிக் கட்சிகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் சுயேச்சைகளும் (முஸ்லிம் உட்பட) கோரி சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்த்துவாதாடி எதிராக வாக்குமளித்தனர். நாடாளுமன்றத்தின் உள்ளே வாதாட்டம் நடத்துவதுடன் வெளியே காந்திய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்துவதாக செல்வநாயகம் தலைமையில் தமிழ் அரசுக்கட்சி அறிவித்தது. இதன்படி சிங்களம் மட்டும் மசோதா நாடாளுமன்றத்தில் 1956 ஜூன் மாதம் ஐந்தாம் திகதி சமர்ப்பிக்கப்பட்டபோது நாடாளுமன்றப் படிக்கட்டுகளின் அன்றைய நாடாளுமன்றக் கூட்டம் முடிவடையும்வரை உண்ணாவிரதமிருந்து பிரார்த்திக்கப்போவதாகத் தெரிவித்து தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிராயுதபாணிகளாக நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கி நடந்து சென்றனர். இவர்கள் நாடாளுமன்றத்தை உடைக்கச் செல்வதாக சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுக் கிலியை ஏற்படுத்தினர். அரசினர் ஆதரவுடன் காலிமுகத்திடலில் கூடிய காடையர்கள் உண்ணாவிரதமிருக்கச் சென்ற தமிழரசு தலைவர்களையும் தொண்டர்களையும் தாக்கி மண்டையை உடைத்தனர்.

1956-இல் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையர்கள் தொடங்கிய தாக்குதல்களும் கொலைகளும் இலங்கை ஜனநாயகத்தில் ஆட்சியிலிருந்தவர்களின் ஆதரவுடனும் ஆசியுடனும் 1983 ஆம் ஆண்டுவரை தமிழ் இன அழிப்பாகவே தொடர்ந்தது.

ஜனநாயக முறையில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி வாதாடியபோது சிங்கள மக்களின் ஆணையைத்தான் சிங்களப் பெரும்பான்மை நிறைவேற்றியது. தமிழ் மக்களின் ஆணையை சிங்கள ஜனநாயகம் உதாசீனம் செய்தது.

ஜனநாயக ஆட்சியில் நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் கொண்டுவந்த எந்தவொரு தனியார் பிரேரணையாவது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா?

1956-ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டுவரை டட்லி சேனநாயகாவின் தேசிய அரசுக்கு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி ஒத்துழைப்பளித்தது. அதிகாரப்பரவலாக்கலுக்காக பண்டா செல்வா ஒப்பந்தத்தைப் பின்பற்றி மாவட்டசபைகள் அமைப்பதற்கு டட்லி ஒப்புக்கொண்டபடி மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவருவதற்காக மு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். நான்கு வருடங்களுக்கு மேலாக அமைச்சராக இருந்த திருச்செல்வம் மாவட்டசபை மசோதாவை தயாரித்திருந்த போதிலும் நாடாளுமன்றத்தில் கொண்டுவரமுடியாமல் போய்விட்டது!



1956ஆம் ஆண்டிலிருந்து இலங்கை ஜனநாயகத்தில் நாடாளுமன்றத்தில் தமிழ்ப்பிரதிநிதிகள் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானார்களேயொழிய தமிழ் மக்களுக்காக தமிழ்த் தலைவர்கள் ஆக்ரோஷமாக வாதாடினார்களே தவிர வேறு எதையும் சாதிக்க முடிந்ததில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை ஜனநாயக முறையில் நாடாளுமன்றத்தில் வாதாடிப் பெறமுடியுமென்ற நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்தனர். சாத்வீகப் போராட்டத்தினாலும் சிங்கள மக்களின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்ப முடியவில்லை. சாத்வீகப் போராட்டங்கள் சிங்கள ஜனநாயகத்தில் தமிழ் இன அழிப்புக்கே வழிவகுத்தது.

இந்நிலையில்தான் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் திரண்டெழுந்த வீரவேங்கைகள் ஆயுதப் போராட்டத்தில் வெற்றிமேல் வெற்றியீட்டி இன்று பேச்சுவார்த்தைக்குத் தயார், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்போம் என்று சிங்களத்தலைவர்களைப் பேச வைத்திருக்கிறது.

இந்த அரசியல் வரலாறு மல்வத்தை பீடத்தின் புதிய மடாதிபதிக்குத் தெரியாமலிருக்க முடியாது.

எல்லோரும் சொல்வது போல் விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்துக்கு வருமாறு மகாநாயக்கா யோசனை சொல்கிறார். இவர் மட்டுமல்ல உள்ளூர்ச் சிங்களத் தலைவர் கூட விடுதலைப் புலிகள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஜனநாயக நீரோட்டத்துக்கு வருமாறு புத்திசொல்கின்றனர்.

இலங்கையில் ஜனநாயகம் படும்பாட்டை அமெரிக்கா போன்ற ஆயுதவியாபாரிகளும் ஊழல் பெருச்சாளிகளும் ஆக்கிரமிப்பாளர்களும்தான் பாராட்டவேண்டும்.

முதலில் இலங்கையில் தமிழ் மக்கள் (முஸ்லிம்களும் தமிழர்களே) பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தங்கள் தாயக பூமியில் வாழ்வதற்கு வழிவகுத்துக்கொண்ட பின்னர் ஜனநாயகம் பற்றி யோசிக்கலாம்!

**எஸ்.எம்.ஜி**

மங்கையர் மனம் கவரும் அசல் 22கரட் தங்க நகைத் தெரிவுகளுக்கு
KMS JEWELLERS
6, Rue Perdonnet
75010 Paris
Métro : La Chapelle
கே.எம்.ஜுவெலர்ஸ்
Tél : 01 44 72 08 02 - Fax : 01 44 72 04 78 - Port : 06 61 86 08 02

# குருநகர் – பூநகரி மீனவரிடையேயான முரண்பாட்டை தோற்றுவிக்கும் முயற்சி

## கடற்புலிகளின் தலையீட்டையடுத்து சுமூகமாக தீர்ந்தது

யாழ்ப்பாணம் குடா கடல் பகுதியில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது தொடர்பில் குருநகர் மற்றும் பூநகரி மீனவர்களிடையே நிலவி வந்த தொழிற் பிணக்கு கடற்புலிகளின் தலையீட்டையடுத்து சுமுகமாக முடிவிற்கு வந்துள்ளது. இவ்விரு பகுதி மீனவர்களிற்கும் இடையே 2003ம் ஆண்டு இணங்கிக் கொள்ளப்பட்ட உடன்பாட்டிற்கு எதிரான வகையில் கடந்த வாரம் குருநகரில் இருந்து வந்த இழுவைப் படகொன்று கரையோரத்தில் இழுவைத் தொழில் செய்ய முற்பட்டபோது, இரு பகுதி மீனவர்களிற்கு இடையேயும் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து போராளிகளிடம் பாலாவி மீனவர்கள் முறையிட்டனர். அதன் பின் கடற்புலிப் போராளி ஒருவரை அழைத்தவாறு அத்துமீறலில் ஈடுபட்ட இழுவைப் படகை நோக்கி படகில் மீனவர்கள் சென்றனர். அவ்வேளை, இழுவைப் படகினை நிறுத்தக் கேட்கப்பட்டபோது, அவர் படகினை நிறுத்த மறுத்துச் சென்றார்.

இதன் போது படகை நிறுத்த எச்சரிக்கைக்காக போராளி வேட்டைத் தீர்த்த வேளை தவறுதலாக இழுவைப்படகு மீன்பிடித் தொழிலாளி ஒருவரின் காலைத் தாக்கியது. அத்துடன் படகின் எரிபொருள் கொள்கலனில் ரவை பட்டு அது தீப்பிடித்தது. உடனடியாக பாலாவி மீனவர்கள் தீயை அணைத்து காயம் அடைந்தவரைக் காப்பாற்றினர். இதில் காயம் அடைந்தவர் நடந்த சம்பவத்தின் உண்மைத் தன்மையினையும் தம் தரப்புத் தவறையும் ஒப்புக் கொண்டார். இந்நிலையில் இருபகுதி மீனவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை கடற்புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பளை பொது மண்டபத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் சுமார் 500 மீனவர்களும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கடற்புலிகளின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான மாஸ்ரர், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி அருண் ஆகியோர் கலந்து கொண்டனர். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்ற இச்சந்திப்பில், அடுத்து வரும் 3 மாத காலத்தினுள் இப்பகுதியில் இழுவைப் படகு மூலமான மீன்பிடி முற்றாக நிறுத்தப்படுமென முடிவெடுக்கப்பட்டதாகவும் அதுவரை இப்பகுதியில் இழுவைப் படகு மூலமான மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கான வலயங்கள் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இரு பகுதி மீனவர்களுக்குமிடையே எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் தேச விரோத சக்திகளும் இணைந்து தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பிணக்குகளை ஏற்படுத்த முனைவதாக அங்கு கலந்து கொண்ட கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்தார். அவர் அங்கு ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே தருகின்றோம்.

**“எங்களுடைய போராட்டம் தேசிய ரீதியாக வென்றெடுக்கிறதுக்கு எல்லாரும் பக்கபலமாக இருக்கவேண்டும்” - மீனவர்கள் மத்தியில் கேணல் சூசை தெரிவிப்பு**

உங்களுக்குத் தெரியும், ஒட்டுமொத்தமாக உலகத்தினுடைய பார்வையும் யாழ்ப்பாணக் குடாநாடு மீதுதான். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டதற்குப் பிறகு, வருகின்ற எல்லா இராணுவ அதிகாரிகளும் சரி, ஆலோசனை வழங்க வருகின்றவர்களும் சரி குறிப்பாகக் குடாநாட்டுக்குத் தான் வருகினம். குடாநாட்டுக்கு வந்து குடாநாட்டு இராணுவ முகாமினைத் தான் பார்க்கினம். அமெரிக்காவிலை இருந்து வருகின்ற அதிகாரியாக இருந்தாலும் சரி, இந்தியாவில் இருந்து வருகின்றவர்களானாலும் சரி குடாநாட்டு இராணுவ நிலைகளுக்குத் தான் வருகினம்.

ஒட்டுமொத்த தென்னிலங்கையில் உள்ள தலைமைத்துவங்களின் எல்லாப் படைப்பிரிவினதும் வேகமும் வந்து குவிக்கப்படுகின்ற இடம் குடாநாடுதான். குடாநாடு வீழ்ந்தால் நாங்கள் தமிழீழத்தை அடைந்ததற்குச் சரி. குடாநாட்டின் வீழ்ச்சிக்கு பக்கபலமாக இருக்கப்போவது கடல். குடாநாட்டை வீழ்த்துவதற்கு மிக இலகுவான வழி கடல். சண்டையை முடிவுக்கு கொண்டுவருகின்ற நேரம், யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு ஒருமாதம் முன்பு, முல்லைத்தீவில் எங்களுடைய எரிபொருள் ஏற்றிவந்த படகொன்று கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டது. அதற்குரிய பதில் நடவடிக்கையாக, பின்னேரம் ஐந்தரை மணிக்கு மாமுனையிலை இருந்து வெளிக்கிட்டனாங்கள், இரவு ஆறேமுக்கால் ஏழு சொச்சத்திற்கு இடையில் இன்புருட்டகடு உயர எதிரியின் எரிபொருள் ஏற்றிவந்த கப்பலைத் தாக்கிப்போட்டம். தாக்கிப்போட்டு எட்டரை ஒன்பது மணிக்கிடையிலேயே தளையடிக்கு வந்துவிட்டம். எந்தவிதத்தான பாதிப்பினையும் நாங்கள் சந்திக்கவில்லை. ஆகவே, யாழ்ப்பாணத்தினுடைய வீழ்ச்சி என்றிது, கடலிலைதான் தங்கியிருக்கு.

இந்த விடுதலைப் போராட்டத்திலை கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் நீங்கள் தான். ஆனால் யாழ்ப்பாணத்தினுடைய வீழ்ச்சியும் கடலாலைதான் தங்கியிருக்கு. ஆனபடியால் உங்களுக்குள் இருக்கிற கசப்புகள், உங்களுக்குள் எந்தவிதமான விருப்பு வெறுப்புகளுக்கும் இடம்கொடுத் திருக்குமானால், அது எங்களுடைய இலக்கை நாங்கள் அடைகிறதுக்கு பெரும் தடையாக இருக்கும். எங்களைப் பொறுத்தவரை இந்த விடுதலைப் போராட்டத்திற்காக தலைவரின் கீழே அணிதிரண்டு நிற்கின்றோம். பிரபாகரனுக்கு முதல் யாரும் எந்தவொரு இராணுவத்தையும் வெற்றிகொண்டு வரலாறு படைத்ததாக வரலாற்றில் இல்லை. இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக, வெள்ளையர்களுக்கு எதிராக போராடி இருந்தாலும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை.

இன்றைக்கு நீங்கள் வன்னி, வன்னி, வன்னி... என்று குறிப்பிட்டுச் சொல்லிக்கொண்டிருக்கிறியள். வன்னிதான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்ரை மிகப் பிரதான தளம். அதை மறுப்பதற்கு இல்லை. இந்த விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தது, உருவாக்கியது தலைவர். அவருடைய சொந்த இடம் வல்வெட்டித்துறை. 1995ம் ஆண்டுக்கு முதல், நாங்கள் யாழ்ப்பாணத்தை எங்களுடைய தலைமையகமாக வைத்திருந்தனாங்கள். உங்களுக்குத் தெரியும் அந்தத் தளத்தை நாங்கள் எப்படிக் கையைவிட்டனாங்கள் என்று. அந்தத் தளத்தை கைவிடுறதுக்கு முன்னர், 1200 போராளிகளோடு பால்ராஜ்சோடும் தளபதிகளோடும் நிற்கேக்கை எதிரி சொன்னவன், ஒன்று சரணடையவேணும் அல்லது குருநகர் கடலுக்குள்ளை விழுந்து சாகவேணும் என்று, 95ம் ஆண்டு சொன்னவன். ஆனால் உங்களுக்குத் தெரியும், உங்களுடைய கண்ணுக்கு முன்னாலை 90ம் ஆண்டு மண்டதீவிலை 45 போராளிகள் நீங்கள் குறிப்பிடுக்கின்ற அந்த இரண்டு ஆற்றையும் கடந்து வர முடியாமல் செத்தவர்கள். ஆனால், 95ம் ஆண்டு குடாநாடு ஆக்கிரமிக்கப் படேக்குள்ளை அந்த 1200 பேரும் குடாக்கடல் நீரேரிக்கு ஊடாக இங்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டவர்கள். இன்றைக்கு சேர்க்கப்பட்டபடியால் தான் வரலாறு இருக்குது.

இராணுவ ரீதியாக எங்களுடைய முழுக் கட்டமைப்புகளும் யாழ்ப்பாணத்துக்குள்ளை இருக்கேக்கை எங்களாலை யாழ்ப்பாணத்தை தக்கவைக்க முடியேலை. வந்திருந்தது மணலாற்றுக் காடு. அந்த மணலாற்றுக் காட்டுக்குள்ளைதான் நூற்றிச்சொச்சப் பேராக சுருங்கிய நிலையில் மீள் கட்டியெழுப்பி இன்றைக்கு ஒரு தேசிய இராணுவமாக, ஒரு நாட்டிற்கு இருக்க வேண்டிய கடற்படையாக எழுந்திருக்கின்றம் என்று சொன்னால் இந்த வன்னியைத் தலைமையகமாக வைத்திருக்கிறபடியால்தான்.

இன்றைக்கு கருணா மட்டக்களப்பு பிரதேசவாத்தை கருத்தாக வைத்தான். யாழ்ப்பாணத்திற்குள் இருக்கேக்கை எங்களுக்கு சர்வதேசக் கடற்பரப்போட எந்தவிதமான தொடர்புகளும் இருக்கேலை. என்றைக்கு யாழ்ப்பாணத்தை கைவிட்டு இங்கு வந்தோமோ அதற்குப் பிறகுதான் சர்வதேச ரீதியாக எங்களுடைய தொடர்புகளைப் பேணி போராட்டத்தை வேகமாக முன்னெடுக்க முடிந்தது.

இன்றைக்கு மட்டக்களப்பு விடுவிக்கப்படுகின்றது என்று சொன்னால், இன்று கடற்புலியிலை இருக்கிறவன் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி என்று பார்க்கப்படவில்லை. கடற்புலி என்றுதான் பார்க்கப்படுகிறது. இந்தச் சம்பவத்திற்கு முதல், நான் அந்தப் போராளியைச் சந்தித்து கேட்டனான் நீ எந்த இடம் என்று. அப்பதான் அவன் சொல்கிறான் கோண்டாவில் என்று.

ஆனபடியால், இந்தக் குறியீடுகளால்... யாழ்ப்பாணம், மன்னார், வன்னி என்று ஒரு ஊருகளைச் சொல்லி உங்களை நீங்கள் தாழ்த்திக்கொள்கிறது எங்களுடைய போராட்டத்திற்கு இடையூறாகத்தான் இருக்கும்.

எங்களுடைய போராட்டம் தேசிய ரீதியாக வென்றெடுக்கிறதுக்கு எல்லாரும் பக்கபலமாக இருக்கவேண்டும். இந்தத் தேசியம் வெல்லக்கூடாது என்பதற்காக துணைபோகிறதுக்கு கடைசிவரைக்கும் துணை நிற்காதீர்கள். கடல் கட்டியெழுப்பப்பட்டதால் தான் இந்தப் போராட்டம் வேகமாக முன்னோக்கி போய்க் கொண்டிருந்தது. கடலிலை எந்தப்பக்கமாக இருந்தாலும் அது யாழ்ப்பாணத்தின்ற கரையாக இருந்தாலும் சரி, முல்லைத்தீவின்ரை கரையாக இருந்தாலும் சரி, மன்னாரின்ரை கரையாக இருந்தாலும் சரி கடற்புலிகளும் மக்களும் இரண்டறக் கலந்து செயற்படுவதன் மூலம்தான் எங்களுடைய இலக்கை வெல்லமுடியும். இதை வடிவாக எல்லாரும் மனதிலை தெளிவாக வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் எங்களுடைய வரலாற்றிலை அடிக்கேக்கை திருப்பி அடிக்காமல் வளர்ந்தது கிடையாது. அவன் அடித்தால் திருப்பி அடித்திருக்கிறம். அது எந்த நடவடிக்கையாக இருந்தாலும் சரி. அரசியல் நடவடிக்கையாக இருந்தாலும் சரி இராணுவ நடவடிக்கையாக இருந்தாலும் சரி.

ஆனையிறவை நாங்கள் வெல்லமுடியாமல் போனதற்கு காரணம் கடல். அன்றைக்கு வெற்றிலைகேணியிலை தரையிறக்கியவன். அதே ஆனையிறவை வெல்லுவதற்காக, நாங்கள் ஒரு தரையிறக்கத்தை செய்துதான் வென்றிருக்கிறம். அன்றைக்கு யாழ்ப்பாணத்தைப் பிடிக்கிறதுக்கு கடற்படையைப்போட்டு அவன் கரையோரங்களுக்கு அடித்துக்கொண்டு வரக்குள்ளை நாங்கள் விலகிக்கொண்டு வந்தோம். அதேபோல வெற்றிலைக்கேணி கரையோரங்களைப் பிடிக்கிறதுக்காக, நாங்கள் எங்கள் படகுகளை கொண்டுவந்து கரைக்கு அடிச்சுத்தான் பிடித்தனாங்கள்.

இந்த வேதனைப்படுத்தக் கூடிய சம்பவங்கள் உண்மையில் மனதை நெருடும். எங்களைப் பொறுத்தவரை இலட்சியத்திலை வெல்லுவம் அல்லது அந்த முயற்சியிலை சாவடைவம். இன்றைக்கு 261 கரும்புலிகளிலை கிட்டத்தட்ட 188 பேர் கடற்கரும்புலிகளாகப் போய் இலக்குகளுக்கு வெடிச்சிருக்கினம். வெடிக்கப்பட்டவர்களும் சரி வெடிக்கிறதுக்காக இருக்கிறவர்களும் சரி இந்தக் குறுகிய பிரதேசக் கருத்துக்களை உள்ளடக்கியவர்கள் அல்ல.

எத்தனையோ அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக மக்களுடைய நடவடிக்கை ரீதியாக எல்லாத்துக்கும் முகம் கொடுத்?தானாங்கள். கண்டிப்பாக எல்லாத்துக்கும் முகம்கொடுக்க முடியும். முகம் கொடுப்பம். இனிமேலும் இவ்வாறு மனதை நெருடக்கூடிய நடவடிக்கையிலை யார் ஈடுபட்டாலும், இன்றைக்கு இங்கு வரேக்கை கூட உங்களை யாராவது தொலைபேசியில் மிரட்டியிருக்கலாம், அல்லது யாராவது சொல்லியிருக்கலாம் அப்படிச் செய்வம், இப்படிச் செய்வம் என்று. நாங்கள் அப்படிச் சொல்லப்போவது கிடையாது. ஏனென்று சொன்னால் நாங்கள் எல்லா நெருக்கடிக்குள்ளையும் இருந்தனாங்கள். இப்ப யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளை பின்புலத்திலை இருந்து அச்சுறுத்துகின்ற அச்சுறுத்தலாளர்களை எல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரு கருத்தை சொல்லுகின்றேன். நாங்கள் எந்தச் சவாலையும் எதிர்கொள்கிறதுக்கு தயாராக இருக்கிறம். மக்களைத் தூண்டிவிட்டு இவ்வாறான குழப்பத்தை கொண்டுவந்தாலும் சரி, இராணுவ ரீதியான அச்சுறுத்தலாக இருந்தாலும் சரி, கடற்படையினரின் அச்சுறுத்தலாக இருந்தாலும் சரி நாங்கள் எதிர்கொள்கிறதுக்குத் தயாராக இருக்கிறம்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)




# புது வசந்தம்

-இ.சிவனேஸ்வரன்-

(சென்ற இதழ்த் தொடர்ச்சி...)

இவ்வேளையில், இவர்களுக்கிடையே காணப்பட்ட காற்றுக்கூட நுழையமுடியாத அந்த நெருக்கத்திற்குள், திரவியனது மனம் கற்பனை வானில் சிறகடித்துப் பறந்ததும் ஏதோ உண்மைதான்.

சாக்கடைப் பூவாய் தான் இருப்பதனால், தம் வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்திருந்தாலும், இந்தப் பூவின் அழகை நீ ரசிக்கமுடியும்!

இதன் மீது பட்டு தவழ்ந்து வரும் தென்றலையும் நீ சுவாசிக்க முடியும்!

ஆனால் அதைப் பறித்தெடுத்து நுகர்ந்து பார்க்கவோ, அல்லது அப்பூவின் ஒவ்வொரு இதழ்களையும் பாசத்தோடு வருடி மகிழ்ந்து கொள்ளும் தகுதியோ உனக்கில்லை என்று, அவனது உள் மனது அறுதியிட்டுக் கூறி ஆதங்கப்பட்டுக்கொள்கிறது.

இத்தகைய மாறுதல்கள் மனதினுள் எழுந்து கொண்டிருந்த வேளையில் தமிழரசி கேட்டாள்...

`திரவியன் நீங்கள் ஏன் இன்னும் திருமண்ம் செய்துகொள்ளவில்லை'

சற்றும் எதிர்பாராத இந்த வினாவுக்கு விடையளிக்க முடியாமல் அவன் தடுமாறியதைக் கண்டு கொண்டதனாலோ என்னவோ..

உங்கள்மீது நான் வைத்திருக்கும் பாசத்தினால்தான் கேட்கிறேன். அம்மாவின் சுகயீனம், இதனால் நீங்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்கள் எல்லாமே எனக்குத் தெரியும். இருந்தாலும் உங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் அல்லவா...? என்று கூறி கலங்கிய தன் கண்களை கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டாள்.,

இதுவரை துன்பத்தை அனுபவித்திராத அவளது உள்ளம். தனக்காக கண்ணீர் சிந்துவதை நினைக்கும் போது, இவனது இதயத்துள் உதிரம் உறைந்து விடுவதைப்போல் இருந்தது.

சிறிது மௌனத்தின் பின் திரவியன் சொன்னான்.

`அம்மாவுக்கு இன்னுமொரு `ரீட்மண்ட' செய்ய வேணுமாம் அதன் பிறகு குணமடைந்து விடுவா என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அதுவரைக்கும் எனது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாதவனாய் இருக்கிறேன்'

அதற்குத் தமிழரசி, என் தந்தை உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். வீட்டில் செல்லப்பிள்ளையாக வளர்ந்த அத்தை, காதல் திருமணம் செய்து கொண்டதனால், அவரை தாங்கள் ஒதுக்கி வைத்து வேடிக்கை பார்த்ததையும், பின்பு பெற்றவர்களது மரணச் சடங்குகளில்கூடக் கலந்துகொள்ள விடாமல் தடுத்து நிறுத்தியதால், சமுதாயத்தில் தனக்கு ஏற்பட்ட இழுக்கை தன் செல்வாக்கைப் பயன்படுத்தி நிவர்த்தி செய்து கொண்டதையும், அன்று தாங்கள் இட்ட சாபத்தினால் தானோ... என்னவோ! இன்று அவர் அமங்கலியாய் ஆனதும், மனநிலை பாதிக்கப்பட்டு அவஸ்தைப்படுவதும் என எண்ணி தனது முரட்டுப் பிடிவாதத்தில் இருந்து விடுபட்டு திருந்தி வாழ நினைக்கும் எனது தந்தை தினமும் கவலைப்படுகிறார். என அவள் கூறி முடிப்பதற்குள் இடைமறித்த திரவியன். இத்தகைய இரக்க சுபாவம் உள்ளவருக்கு இங்கு வந்து இத்தனை நாட்களாகியும் தன் தங்கையைப் பார்க்க வேண்டும் என்று ஏன் தோன்றவில்லை? என்று கேட்டான்.

தமிழரசி, நீங்கள் கூறுவதில் நியாயம் இருக்கிறது. தான் தூக்கி வளர்த்த தன் பாசமிகு தங்கையை இந்தக் கோலத்தில் பார்ப்பதற்கு மன வலிமை இல்லாத காரணத்தினால்தான், அப்பா உங்கள் குடிசைக்கு வரவில்லை. ஆயினும் அத்தை படும் வேதனைகளை நினைத்து, அவரது உள்ளம் தினமும் துன்பத்தால் துவண்டுபோய் விடுவது எனக்கல்லவா தெரியும்.

அதுமட்டுமல்ல, இன்று நம் நாட்டில் நிலவும் அமைதிச் சூழலைப் பயன்படுத்தி அப்பா இங்கு வந்தது, அவருக்குச் சொந்தமான காணிகளையும் புலவுகளையும் விற்றுப்போட்டு நிம்மதியாக வெளிநாட்டில் `செற்றில்' ஆகிவிடவேண்டும் என்ற அம்மாவின் நப்பாசையினால்தான் என்றவள், தன் தாய் ஒரு பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவரென்றும், அத்தோடு வெளிநாட்டில் கிடைக்கின்ற சுகபோகங்களினால், இவரது மனதினுள் ஏற்பட்ட வரட்டுக் கவுரவம் வர்க்கத்திற்குள் வகைபிரிந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கியதால், தன் தந்தையின் மனதில் தோன்றிய மாற்றங்கள் மன உளைச்சல்களை ஏற்படுத்தியதென்றும் கூறி முடித்தாள்.

"அப்படியானால், நல்லது செய்ய நினைக்கும் அப்பாவை அம்மாவின் அதிகாரம் தடுத்து நிறுத்துகிறது. அப்படித்தானே" என்றான்.

அதற்கு அவளது மௌனம் உண்மையை உள்ளம் ஏற்றுக்கொண்டதைப்போல் அவனுக்குணர்த்தியது.


அப்போது மாலையும் மெதுவாக மங்கிவரத் தொடங்கியதால், அன்றைய சந்திப்புக்கு இத்தோடு முத்தாய்ப்பு வைக்க திரவியனது மனம் இணங்கியதால் விடைபெற்றுக் கொள்ளவதற்காய் எழுந்து கொண்டபோது,

`முக்கியமான இன்னுமொன்று பாக்கியிருக்கிறது' என்றாள் தமிழரசி.

ஆச்சரியத்துடன் அவளை உற்று நோக்கினான்.

ஒரு வித சோகம் அவளது முகத்திரையில் தெளிவாய் தெரிந்தது.

உமிழ் நீரை மென்று விழுங்கிவிட்டு, விவாகரத்து பெற்றுவிட்டு, தனிமையில் வாழும் தன் சகோதரனது மகனுக்கு தன்னை இரண்டாம்



தாரமாக்குவதற்கு தன் தாய் முயற்சி செய்கிறார் என்றும், அப்பாவின் வார்த்தைகளிற்கு மதிப்பளிக்காத அம்மாவின் பிடிவாதத்திற்கு தனது வாழ்வும் பலியாகிவிடுமோ எனப் பயமாக இருக்கிறது. என்று கூறி, கண் இமைகளில் தேங்கி நின்ற கண்ணீர்த் துளிகளைக் கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டவள் திரவியனை பரிவுடன் பார்த்தாள்.

தன் மீது விசுவாசமாய் உள்ள ஓர் இதயம் தணல் பட்டுத் தவிப்பதை நினைக்கையில் அவனது இதயத்தை கூரிய ஆயுதம் சல்லடை போட்டுத் துளைப்பதைப்போல் இருந்தது.

அந்தவேளையில் பதிலுக்காய் அப்படியானால், உனது அழகு, படிப்பு, அந்தஸ்து இவைகளுக்குச் சற்றும் பொருத்தமில்லாத என்னை நீ மணந்துகொள்ள விரும்புகிறாயா...? எனக் கேட்கவேண்டும்போல் அவனுக்கிருந்தது. ஆனால் வார்த்தைகள் தொண்டைக் குழியோடு சங்கமமாகிக்கொண்டன.

மாலைச் சூரியனும் தீப்பிளம்பாய் மாறி கடலுக்குள் வீழ்வதைப்போல் அடிவானத்தில் வர்ணஜாலம் காட்டிக்கொண்டிருக்க, மழையும் மெதுவாக தூறல் போட ஆரம்பிக்க, அவர்களும் அவ்விடத்தில் இருந்து விடைபெற்றுக்கொண்டனர்.

ஆனால் திரவியன் தமிழரசியிடம் கேட்க நினைத்ததை, சில நாட்களின் பின்பு பங்கஜம் பாட்டி தகப்பன் தனபாலிடம் கேட்டதாகவும், அதற்கு அவர்

என்னதான் இரத்த சம்பந்தம் இருந்தாலும், தங்கச்சியின்ர மகன் படிக்காதவன் அதிலும் ஏழ்மையில் வாழ்ந்து பழக்கப்பட்டவன். அதுமட்டுமல்ல வயிற்றுப் பிழைப்புக்கு ஓவியங்களை நம்பிவாழும் அவனுக்கு, ஐரோப்பிய நாட்டு கடும் குளிரிலும் பசுமையான நினைவுகளோடு தனது இளமைப் பருவத்தை கழித்துக்கொண்டிருக்கும் என் மகளை, இந்தப் பையனை மணந்து கொள்கிறாயா எனக் கேட்பது, தெரிந்தும் பிள்ளையை சாக்கடையில் தள்ளுவதற்கு சமமானது. இப்படி ஓர் காரியம் நடந்தால் இவர்களது பிற்கால வாழ்விலும் பல பின் விழைவுகள் ஏற்படும். தமிழரசி வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கோபுரம்! அந்தக் கோபுரத்தை திரவியன் போன்றவர்கள் வெளியில் நின்று பார்த்து ரசிக்கத்தான் முடியுமே தவிர, அங்கு குடியேறி வாழ நினைப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோல் அமையும்.

இதை என்னால் ஜீரணித்துப் பார்க்கவே முடியாதிருக்கும்போது, தமிழரசி கேள்விப்பட்டால் நிச்சயம் அவளால் தாங்கிக்கொள்ள முடியாது என்பது மட்டும் உறுதி. என்று சொன்னதாகவும்,

இதற்குத் தான், பக்கத்து வீட்டுப்பாட்டி எனக் கூறி திரவியன் என்னிடம் ஓடிவந்த போதெல்லாம் அந்த பிஞ்சு உள்ளத்தின் பாசத்தைத்தான் அப்போது, என்னால் புரிந்துகொள்ள முடிந்ததே அன்றி, அவனைப் படிக்கவைத்து ஓர் மேதையாக்க வேண்டும் என்ற நினைப்பு இந்தக் கிழட்டு உள்ளத்திற்கு தோன்றாததற்கும் பல காரணங்கள் உண்டு.

எனது கணவரின் இழப்பு, அதிலும், ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாய் வாழும் எனது பிள்ளைகள் தகப்பனின் இறுதிக் கிரியைகளில் கூட கலந்து கொள்ள முடியாமல் போன துர்ப்பாக்கியம், இவைகளினால் நொந்து போயிருந்த எனக்கு, திரவியன் என்மீது காட்டிய இரக்கம் ஆறுதலைத் தந்தது. என் மனவேதனைகளிற்கு அருமருந்தாய் அமைந்த அவனது பிஞ்சு மொழிகள் என் இதயத்தில் ஆழமாய் பதிந்துவிட்டதனால், அன்று முதல் தந்தையை இழந்து தவித்து நின்ற அவனையும், எனது பிள்ளைகளில் ஒன்றாய் நினைத்து பாசத்தைப் பகிர்ந்துகொள்ளத் தொடங்கினேன்.

இன்றைக்கோ, நாளைக்கோ நான் செத்துப் போயிட்டாலும், எனக்கு கொள்ளிபோடப் போறதும் அவன்தான்! ஏனென்றால் வெளிநாடுகளில் வாழும் என் பிள்ளைகள் இங்கு வந்து எனது இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கில்லை!

காரணம்: அந்நிய நாடுகளில் அகதிகளாய் வாழும் பிள்ளைகளை தந்தையின் இறுதிக் கடனில் கூடக் கலந்துகொள்ள விடாமல் தடுத்துவிட்ட அந்நாட்டுச் சட்டங்கள் தாய்க்கு மட்டும் விதிவிலக்கா என்ன....?

அதனால்தான் என்னிடமுள்ள சொத்துக்களை, நிலம் புலவுகள் உட்பட திரவியனிற்கு உயில் எழுதிவிட்டேன்.

ஆனால் இவ்வளவு வீராப்புடன் கதைக்கும் நீ... மாளிகையில் வாழ்ந்துகொண்டு, உன் செல்லப்பிள்ளையை அதுவும் சித்தம் இழந்த தாயுடன் மண்குடிசையில் வசிக்கவிட்டிருக்கிறாயே இது நியாயமா.... நீதியும் நேர்மையும் நிறைந்த உன் நல்ல உள்ளத்தை இது புண்படுத்தவில்லையா...? என நீ கேட்கலாம்!

இதையும் நான் ஒருமுறை திரவியனிடம் கேட்டேன். அவன் சுய உழைப்பின் மூலம் முன்னுக்கு வர ஆசைப்பட்டான். ஆகையினால் அதற்குத் தடையாக நான் இருக்க விரும்பவில்லை. பக்கத்துணையாய் மட்டும் இருந்தேன். இன்று ஓர் ஓவியனாய் ஊர்ச்சனங்களது உள்ளங்களில் பதிந்திருக்கிறான்.

அதுமட்டுமல்ல, தனது வருமானத்தில் சிறிது சிறிதாய் சேமித்து வைத்திருந்த பணத்தில்தான் இன்று தன் தாயை தனியார் மருத்துவ மனையில் அனுமதித்திருக்கிறான். குப்பையிலே போட்டாலும் குண்டுமணி மங்காது. அதுபோல், குடிசையிலே வாழ்ந்தாலும், நேர்மையும் நெடுஞ்சுறுதியும் நிச்சயம் அவனுக்கு நல்வழி காட்டும். இனியும் அவனைப் பார்த்து ஏழை பிச்சைக்காரன் என நீ.. கூறினால் அது உன் அறியாமை!

தொடரும்....




# கதை முற்றம்

## நோவாத சம்பாத்தியம்

`என்னருமைத் தந்தையே, எப்படிச் செல்வத்தைச் சேர்க்க முடியும் என்று தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்' பேராசை பிடித்த ஒரு இளைஞன் தன் தந்தையைப் பார்த்துக் கேட்டான். `அது ஒரு மகிமை வாய்ந்த தொழில். செல்வத்தைச் சம்பாதிப்பதற்கு ஒருவன், தன்னுடைய நாட்டிற்குச் சேவை செய்வதில் இராப்பகலாக, பொது இலட்சியத்திற்காக உழைப்பதில், தனது ஆற்றல் முழுவதையும் அவன் அர்ப்பணிக்க வேண்டும்'என்று தந்தை சொன்னார். `ஆ,அது சலிப்பைத் தருகின்ற ஒரு வாழ்க்கை. நான் படாடோபமற்ற ஒரு வழியைத்தான் விரும்புகிறேன். நீங்கள் கூறுவது நிச்சயமாய் ஒரு சிக்கலான வழிமுறை. அது அவமானகரமாது. மிகவும் கடுமையாக உழைக்காமல் செல்வந்தனாவேன்' என்று இளைஞன் கூறினான். `நன்று. அப்போ மூடனாயிருந்து வென்ற அநேகரை எனக்குத் தெரியும்' எனறு சொன்னார் தந்தை.

## புகழ்ச்சி

ஒரு செல்வந்தனும் ஒரு வறியவனும் கூடிக்கதைத்துக்கொண்டிருந் தார்கள். `என்னிடம் நாறு அவுன்சு தங்கம் இருக்கின்றது. அதில் இருபது அவுன்சு தங்கத்தை நான் உனக்குத் தந்தால் நீ என்னைப் புகழ்வாயா? என்று செல்வந்தன் ஏழையைக் கேட்டான்.

`உனது தங்கம் சரியாகப்பங்கீடு செய்யப்படாமலிருக்கும் போழுது உன்னை நான் எப்படி புகழ முடியும்?'

`சரி அப்படியென்றால், என்னிடமுள்ள தங்கத்தில் அரைவாசிப் பங்கை நான் உனக்குத்தந்தால் என்னைப் புகழ்வாயா?'

`அப்பொழுது நாங்கள் இரண்டு பேரும் சரி சமமானநிலையிலுள் ளவர்களாக இருப்போம். ஆகவே நான் உன்னை ஏன் புகழ வேண்டும்?'

செல்வந்தன் கேட்டான், `என்னிடமுள்ள எல்லாத்தங்கக் கட்டிகளையும் உனக்குத்தந்தால் என்னை நீ புகழ்வாயா?'

`உன்னுடைய எல்லாத்தங்கக் கட்டிகளும் என்னிடமிருந்தால் நான் செல்வந்தனாகி விடுவேன். அப்பொழுது நான் உன்னைப் புகழ வேண்டிய அவசியம் ஏற்படாதே'என்று ஏழை கூறினான்.

செல்வந்தன் "திரு திரு" என முழித்தான்.

# கவிதை முற்றம்

## கதிரவன்

கதிரவன் காலையில்
எழுகிறான்
மலர்களை மலரச்
செய்கிறான்
இருள் தனை அழிக்கிறான்
இன்பம் தனைப்
படைக்கிறான்

காலைப் பொழுதைக்
காட்டுகிறான்
கடின உழைப்பை
ஊட்டுகிறான்

சேவலை கூவிடச்
செய்கிறான்
செந்நெல் தனை
வளர்கின்றான்

மீண்டும் இருளைத்
தருகிறான்
மீன்களைக் கரைக்கு
அழைக்கிறான்
பிறப்பும், இறப்பும்
அற்றவன்
என்றும் அழிவில்லாதவன்.

-இரா. பாவேந்தர்.

# அறிஞர் வாழ்வில்

அப்போது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தியோடர் ரூஸ்வெல்ற் தன் ஒப்புதல் அறிக் கையைத் தேர்தல் அதிகாரியிடம் தந்து இருந்தார்.

அது ஆயிரத்துத் தொளாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டு. அவர் குடிய ரசுக் கட்சியின் சார்பில் போட்டி யிட்டார். குடியரசுக் கட்சியின் ஆதர வாளர்கள் ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் ரூஸ்வெல்ற் பேச ஏற்பாடாகி இருந்தது.

அவர் குறிப்பிட்ட நேரத்தில் மேடையேறினார். தங்கள் கட்சிக்கு எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் கொள்கைகளையும், அவை தந்த வாக்குறுதிகளையும் அவர் அக்கூட் டத்தில் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

அவர் பேச்சை முடிக்கும் தறுவாயில் கூட்டத்திலிருந்து ஜனநாயக் கட்சியின் ஆதரவாளர் ஒருவர் திடீ ரென எழுந்தார்.

நீங்கள் ஜனநாயகக் கட்சியைக் கண்டித்துப்பேசியது மிகவும் அதிகம். அது உண்மைக்குப் புறம்பானது. இவை எல்லாம் மறுக்கப்பட வேண் டியவை என்று கூறி விட்டு அமைதி யாகக் கேட்டார்-

`மிஸ்டர் ரூஸ்வெல்ட் நீங்களெல் லாம் ஏன் குடியரசுக் கட்சியில் இருக் கிறீர்கள்?'

ரூஸ்வெல்ற் அதற்குப்பதில் சொன்னார்: "என்னுடைய தந்தையும் என் தந்தையின் தந்தையும், அவர்களின் முன்னோர்களும் குடியரசுக்கட்சியில் இருந்ததன் காரணத்தினால்த்தான்!"

"ஓஹோ..." என்ற ஜனநாயகக் கட்சிக் காரர் கேட்டார்:-

"ஒருவேளை உங்கள் தந்தையும் உங் கள் தந்தையின் தந்தையும் குதிரைத் திருடர்களாக இருந்தால், அப்போது நீங்கள் என்னவாக இருப்பீர்கள்?"

ரூஸ்வெல்ற் கோபமடையவில்லை. புன்னகை புரிந்தார்.

"அப்படி என்றால் நான் நிச்சயமாக உங்கள் ஜனநாயகக் கட்சிக் காரனா கத்தான் இருப்பேன்!"




**தியோடர் ரூஸ்வெல்ட்**
பிறப்பு: 27.10. 1858 நியுயோர்க் நகரம்
இறப்பு: 06.01.1919 ஒய்ஸ்டர் பே
அமெரிக்காவின் 26-ஆவது குடியரசுத் தலைவர் (1901-1909)

# தகவல் முற்றம்

## சேற்றில் உறங்கும் மீன்கள்

ஆபிரிக்கா மற்றும் அவுஷ்திரேலியா கண்டங்களில் 'லங்ஃபிக்ஷ்' என்ற மீன் இனம் கோடை காலம் முழுவதும் உறங்கும் ஒரு அபூர்வ பழக்கத்தைக் கொண்டுள்ளது. இவை சேற்றிற்கு அடிப்பகுதியில் மறைந்து கொண்டு உறங்கும். காய்ந்து போன சேற்றை எடுக்கும் போது மண்ணோடு மீனும் சேர்ந்து வரும். மண்ணைத் திரும்பவும் நீரில் கரைக்கும் போது, இம்மீன்கள் விழித்துக் கொண்டு மீண்டும் செயற்படத்தொடங்கும்.

## மறைந்திருப்பது யார்?



புள்ளியிடப்பட்ட பகுதிகளில் மட்டும் வண்ணம் தீட்டுங்கள். மறைந்திருப்பதைக் கண்டுபிடித்துவிடலாம்!

# தகவல் முற்றம்

## வருடங்கள்

1. லூனா வருடம் - 954 நாட்கள்
2. லீப் வருடம் - 366 நாட்கள்.
3. ஜூலியன் வருடம் - 356 1/2 நாட்கள்.
4. கோலார் வருடம் - 365 நாட்கள், 5 மணித்தியாலம், 48 நிமிடம், 8 செக்கன்.
5. சைபில் வருடம் - 368 நாட்கள், 6 மணித்தியாலம், 9 நிமிடம், 8 செக்கன்.
6. அனாமலிஸ்லிக் வருடம் - 365 நாட்கள், 6 மணித்தியாலம் 13 நிமிடம் 19.3 செக்கன்.
7. கிரிகோரியன் வருடம் - 965 நாள், 5 மணித்தியாலம், 49 நிமிடம், 12 செக்கன்.

## தெரிந்துகொள்ள...

உலகில் மிக ஆழமான ஏரி - பைக்கால் ஏரி.
உலகில் மிகப் பெரிய தீபகற்பம் - அரேபிய தீபகற்பம்.
உலகில் மிக நீண்ட குகை - ரெஸ்பூடு, மாமிற்.
உலகில் மிக உயரமான எரிமலை - கொடாபாக்கினி.
உலகில் மிக நீளமான அணை - கௌஸ்டாம்.
உலகில் மிக ஆழமான அகழி - மரியானா.
உலகில் மிக உயரமான நீர்வீழ்ச்சி - நயாகரா.

*– லோ. காந்தரூபி*

சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY
சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004
தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜி ஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்க நகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.
Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

# பலசும் பத்சும்

# அட இதற்கும் மகாநாடா?


உலகில் பச்சை மற்றும் உடலில் ஆபரணங்களை குத்தியவர்களுக்கான 6வது மகாநாடு கடந்த 27ம் திகதி சுவிசின் லுகானோ நகரில் இடம்பெற்றது. உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து வந்து கலந்துகொண்டிருந்தவர்களில் இந்தப் பெண்ணும் ஒருவர். பிரேசில் நாட்டைச் சேர்ந்த எலைன் டாவிட்சன் என்ற மேற்படிப் பெண்ணே உலகிலேயே அதிகளவான ஆபரணங்களை தனது உடலில் குத்தியிருப்பவர் என உலக சாதனை நூலான கின்னஸ் உறுதிப்படுத்தியிருக்கின்றது. இவர் தனது உடல் முழுவதும் மொத்தமாக 1900 ஆபரணங்களை குத்தியிருக்கின்றார், அத்துடன் தனது உடலின் பெரும் பகுதியில் பச்சைகுத்தி வைத்திருக்கின்றார். இதற்குமேலும் பச்சையும் ஆபரணமும் குத்துவதற்கு அவரது உடலில் வேறு இடமில்லைப்போலும்..!





# பால்வடியும் கண்!





கண்களில் கண்ணீர் வழிந்துதான் பார்த்திருப்பீர்கள்... பால் வழிந்து பார்த்ததுண்டா. துருக்கியைச் சேர்ந்த 28 வயதான இக்கோர் ஜில்மாஸ் கண்களால் பால் வடிகின்றது. இதில் ஆச்சரியம் எதுவுமில்லைத்தான். ஏனெனில் இவர் அருந்தும் திரவங்களை கண்களினால் வெளியேற்ற முடியும். ஆனால் கண்களில் இருந்து இவர் பீச்சியடிக்கின்ற திரவம் 9.2 மீற்றர் உயரத்திற்கு எழும்புகின்றது என்பதுதான் இவரது சாதனை. ஏற்கனவே இவ்வாறு கண்களால் சாதனை படைத்த ஒருவர் 8.74 அடி உயரங்களுக்கு அடித்துள்ளார். அவரை இந்தத் துருக்கியர் முறியடித்துள்ளதால் கின்னஸ் நூலில் இவரது பெயர் இடம்பெற்றுள்ளது. கடந்த வாரம் சாதனைக்காக பாலினை கண்களால் பீச்சியடிப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

# நண்டு சாப்பிட்டுச் சாதனை!

அமெரிக்காவில் நடந்த நண்டு சாப்பிடும் போட்டியில் ஒரு பெண் 12 நிமிடத்தில் 38 நண்டுகளை சாப்பிட்டு சாதனை படைத்தார். நண்டு சாப்பிடுவதில் உலக சாதனை படைக்கும் போட்டி அமெரிக்காவில் நடந்தது. இதில் அமெரிக்காவைச் சேர்ந்த சொன்யா தாம் வெற்றி பெற்றார். 12 நிமிடத்தில் 38 நண்டுகளை சாப்பிட்டு முடித்தார். மொத்தம் ஏறத்தாழ நாலைரை கிலோ நிறைகொண்ட நண்டுகளை அவர் சுவைத்துள்ளார். 11 பேர் இந்த போட்டியில் பங்கேற்றனர். இதைவிட அதிகமாக உணவுப்பொருளை ஏற்கும் ஆற்றல் எனது வயிற்றுக்கு உண்டு. ஆனால் நண்டு அல்லாமல் வேறு உணவாக இருந்திருந்தால் இன்னும் அதிகமாக சாப்பிட்டு இருப்பேன் என்றார் சொன்யா கவலையோடு.

# மேடையில் அவிழ்ந்தது ஆடை உலக அழகிக்கு ஏற்பட்ட அவமானம்!




இந்த ஆண்டின் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவுஷ்திரேலிய நாட்டைச் சேர்ந்த ஜெனிபர் ஹக்கின்ஸ், சிட்னியில் நடைபெற்ற ஆடைக் கண்காட்சி (பஷன் ஹோ) நிகழ்வில் மேடையில் ஒயிலாக நடந்துவரும்போது ஆடை அவிழ்ந்து விழுந்ததில் அவமானம் அடைந்துள்ளார்.

ஆடை வடிவமைப்பாளரின் அறிமுக நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டிருந்த இவர், அங்கு வந்திருந்த பார்வையாளர்களை பரவசப்படுத்தவதற்காக புதிய வடிவமைக்கப்பட்ட ஆடையொன்றை அணிந்துகொண்டு மேடையில் நடைபோட்டார். அப்போது (யார் கண்பட்டதோ...) திடீரென ஆடை அவிழ்ந்து விழுந்ததில் கூனிக்குறுகிப்போன உலக அழகி, வீழ்ந்த ஆடையை எடுப்பதற்கும் நேரமின்றி கூனிக்குறுகியபடி மேடையில் இருந்து ஓட்டமெடுத்தார். ஆனாலும் என்ன...? சுற்றியிருந்த நிழற்படப் பிடிப்பாளர்கள் இயலுமான வரைக்கும் சுட்டுத் தள்ளிவிட்டார்கள்.

**Orient Textilien & Schmuck**

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்



# என்னதான் அந்தஸ்து பெற்றாலும் ஒரு அகதி ஜெர்மனியன் அல்லது பிரெஞ்சுக்காரனாக முடியாது!

`நாஷனாலிற்றி (குடியுரிமை) எடுப்பது ஒரு வீடுவாங்குவது' இதுவே இன்று புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களில் சிலருக்கு (ஏன் பலருக்கு என்று கூடச் சொல்லலாம்) ஒரே குறிக்கோளாக இருக்கிறது.

இவர்கள் குடியுரிமை பெற்றதும் தங்களுக்கென்று ஒரு சொந்த வீடு வாங்குவதோடு திருப்திப்படுவதாக இல்லை. அண்ணன் தம்பி மச்சான் என்று இவர்கள் உதவியினால் அல்லது ஆலோசனையில் புலம்பெயர்ந்து வந்திருப்பவர்களின் இருப்பிடங்களுக்கும் சென்று அவர்களையும் எப்படியாவது சொந்தமாக வீடுவாங்கும்படி ஆலோசனை கூறிவருகின்றனர்.

வீட்டுக்கு நீங்கள் கொடுக்கும் வாடகையைக் கணக்குப் பார்த்தால் வீடுவாங்குவது எவ்வளவோ மிச்சம். வங்கியில சுலபமாகப் பணம் கடன் எடுக்கலாம். நீங்கள் இங்கே இருக்கவிருப்பமில்லாமல் நாட்டுக்குத் திரும்ப வேணுமெண்டால் அந்த நேரத்திலை கூடுதல் விலைக்கு வித்திட்டுப் போகலாம் என்றும் இவர்கள் ஆசை வார்த்தை கூறி, `சும்மா' இருப்பவர்களையும் உசுப்பேற்றிவிடுகிறார்கள்.

ஜெர்மனில் பிறீமன் என்ற இடத்தில் வசிக்கும் நமது தமிழீழத் தமிழ் மகன் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் கொட்டித் தீர்த்த ஆதங்கங்களில் மேற் கூறியவை ஒரு சிறு பகுதி!

கடன் பெற்றுக்கொடுப்பதற்கென்றே நிறுவனம் ஒன்று செயற்படுவதாக ஊடகங்களில் தினமும் விளம்பரம் செய்யப்படுகிறது. ஒருவனைக் கடனாளியாக்குவதற்குப் பல வழிகளில் உதவி செய்யச் சிலபேர் தயாராக இருக்கிறார்கள்.

## சீட்டுக்காசும் வட்டிக்காசும்

இவை போதாதென்று கஷ்டப்பட்டு பனியிலும் வெய்யிலிலும் இரவும் பகலும் பாடுபடுகின்றவர்கள் நம் நாட்டிலிருந்து இங்கு சீட்டுக் கட்டும்முறையையும் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். சீட்டுப் பிடிப்பதும் சீட்டுக் கட்டுவதும் ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கும் 'கண்கட்டிவித்தை காட்டி' சீட்டுப்பிடிக்கும் தொழிலும் நடந்துகொண்டு தானிருக்கிறது என்று ஒரு நண்பர் சொன்னார். சீட்டுக்காசு குறித்த திகதியில் கட்டிவிட வேண்டும். தவணைதவறாமல் சீட்டுக்காசை வாங்கிவிடுவார்கள். ஆனால் சீட்டுக் காசைப் பெறுவதற்கு அலையவும் வேண்டும்.

ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் வேலை செய்தால்தான் குடும்பத்தைக் கஷ்டமில்லாமல் நடத்தமுடியும். இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில் நாட்டிலிருந்து அம்மா, அப்பா, அண்ணன் தங்கை உறவுகள் என்று தங்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கும் பணம் கேட்டு அழுதழுது வேண்டிக் கொள்வார்கள். அவர்களுக்கு இங்கிருந்து அனுப்பும் பணம் அங்கே ஆடம்பரத்துக்காக வீணாகச் செலவு செய்யப்படுவதாக இங்கு கிடைக்கும் செய்திகள் சொல்லிமாளா. இங்கு பனிக்குளிரிலும் வெய்யிலிலும் கஷ்டப்பட்டு உழைப்பது அவர்களுக்குத் தெரியாது. இங்கிருந்து யூரோவிலும் ஸ்ரேலிங்பவுணிலும் அனுப்பப்படும் பணம் அங்கு ரூபாயாக மாறும்போது பெரிய தொகையாகக்கிடைக்கிறது. அவர்களுக்கு இது எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தபணம் என்பதை

> இந்த அன்பர் அன்று வாக்களிப்பதற்காக அந்த அலுவலகத்தினுள் நுழைந்தார். உள்ளே சென்றார். அங்கு நின்ற ஒருவர் அதாவது அரச அதிகாரியொருவர் இந்த அன்பரிடம் வந்து மன்னிக்கவும் இன்று ஞாயிற்றுக்கிழமை உங்களுக்குரிய சோஷல் பணத்தை (உதவிப்பணம்) இன்று எடுக்கமுடியாது. போய்விட்டு நாளை திங்கட் கிழமை வாருங்கள் என்று சொன்னாராம்.

அவர்கள் புரிந்துகொள்ள முடிவதில்லை.

## கலியாணப் பேச்சும் சீதனம் கொடுப்பதும்

இவைதவிர இங்குள்ள மாப்பிள்ளைக்கு அங்கு பெண், பார்ப்பார்கள். சீதனமாக அங்குள்ள வீடுவளவு. இங்கு அந்தப் பெண்ணின் சகோதரன் அல்லது தகப்பன் மாப்பிள்ளைக்கு இங்கும் அங்குமாக பெருந்தொகைப் பணத்தை சீதனமாகக் கட்டவேண்டும். அங்கிருந்து இங்கு கலியாணத்துக்கென அனுப்பப்படும் பெண் மாப்பிள்ளையைப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் அவனைக் கட்டித்தான் தீரவேண்டும்.

கலியாணம், புலம்பெயர்ந்த நாடுகளில் கோலாகலமாக நடக்கும். நாட்டில் ஊரில் எப்படி உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அழைப்பு விடுத்து நடக்குமோ. அதேபோல் இங்கும் நடக்கவேண்டும்.

கலியாணச் சடங்கு விமரிசையாக ஊரில் போய் நடக்கும். மேளதாளம், மணவறை, தாலிகூறை, ஐயர் எல்லாம் இங்கே இருக்கிறது. ஒரு கலியானத்துக்கு சில இடங்களில் ஐயருக்குமட்டும் ஐநூறு யூரோ கொடுக்க வேண்டும். இது நம்நாட்டில் குறைந்தது ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பு.

`இங்கு ஒரு கலியாணத்துக்கு வருபவர்களைப் பார்த்திருக்கிறீர்களா?' என்று கேட்டார் நண்பர்.

`இல்லை என்றேன்'

## கல்யாணத்தில் நகை அலங்காரம்

`அந்தக் காட்சியைக் கட்டாயம் பார்க்க வேண்டும்' வசதியுள்ள அம்மன் கோயிலில் ஒரு அம்மனுக்கு எத்தனை நகைகள் போட முடியுமோ போட்டு அலங்கரிப்பார்கள். பட்டுச்சேலை மிக உயர்ந்த ஜரிகைகள் வைத்து நெய்யப்பட்டதாக இருக்கும். இந்த அம்மனுடைய அலங்காரத்தைவிட இங்கு நடைபெறும் கலியாணத்துக்கு வரும் பெண்கள் உள்ள நகைகளையெல்லாம் அணிந்து அலங்காரமாக பவனிவருவார்கள். தங்கமும் வைரமும், வைடூரியமுமாக கலியாணவீடே ஜொலிக்கும் என்றார் நண்பர்.

எங்கள் சடங்கு சம்பிரதாயமெல்லாம் கலியாணத்தில் தவறாமல் நடக்கும். கலியாணம் முடிந்ததும் மாலையில் 2 ஐரோப்பிய முறையில் பெரிய கேக் வெட்டப்படும். பெரியகேக் கொண்டுவந்து மணவறைக்கு முன்பாக வைப்பார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் கேக்கை வெட்டி மாறி மாறி ஒருவர்வாயில் ஒருவர் கேக் துண்டுகளை ஊட்டிவிடுவார்கள். இதே சமயம் `சம்பயின்' என்ற ஒருவகை மதுபானப் போத்தலை உடைத்து, நுரைக்க நுரைக்கத் தெளிப்பார்கள்.

பிரான்ஸ் தலைநகரில் பாரிசிலிருந்து சுமார் ஐம்பது கிலோமீற்றர் தூரத்தில் எனது அயலில் வாழ்ந்த ஒரு இளைஞன் இருக்கிறார். சிறு பையனாகப் பார்த்தபின் பல வருடங்களுக்குப்பின் அவனைச் சந்தித்தேன்.

நான் பாரிசில் வந்திருப்பதை அறிந்து நான் தங்கியிருந்த மற்றொரு அன்பர் வீட்டுக்கு வந்து அந்த இளைஞன் என்னைத் தனது வீட்டுக்குக் கூட்டிச்சென்றான். புலம்பெயர் வாழ்க்கைபற்றி நிறையவே சொன்னான். குறைந்த வயதில் அவன் நிறைந்த அனுபவம் பெற்றிருப்பதை அறிந்தேன்.

தனது மக்களைத் தங்கள் தாய்மொழியிலும் கல்வியூட்டவேண்டும், தங்கள் சமய மரபுகளையும் பின்பற்றவேண்டும். அல்லது பிரஞ்சு மொழியை அவர்கள் தங்கள் தாய் மொழியாக ஏற்று அதேசமயம் கிறிஸ்தவ மதத்தையும் தங்கள் மதமாகப் பின்பற்றவேண்டும். இதில் எந்தவழிக்கு அவர்களைக் காட்டுவது என்ற சபலமும் சலனமும் அவருக்கு ஏற்பட்டது.

இது பற்றித் தமது நெருங்கிய பிரஞ்சு நண்பர் ஒருவரிடம் ஆலோசனை கேட்டாராம். அதற்கு அந்த நண்பர் சொன்ன பதில்

உமது பிள்ளைகள் பிரெஞ்சு மொழியையே தாய்மொழி என்று சொல்லி ஏற்றுக்கொண்டாலும் கிறிஸ்தவ மதத்தையே தங்கள் மதமாக ஏற்றுக்கொண்டாலும். அவர்கள் ஒருபோதும் பிரெஞ்சுக்காரர் ஆகமுடியாது! அவர்கள் தமிழ்பேசத் தெரியாவிட்டாலும் அவர்கள் தமிழர்கள்தான் என்பதை நினைவில் கொண்டு, அவர்களுக்கு வழிகாட்டும் என்று சொன்னாராம்.

இதேசமயம் ஜெர்மனியில் மெஷடே என்ற பகுதியில் ஒஸ்லோ என்ற அழகிய சிற்றூரில் கடந்த சுமார் இருபது ஆண்டுகளாக தமிழீழத் தமிழ் அன்பர் ஒருவர் வாழ்ந்துவருகிறார். அவர் சொந்தமாக ஒரு வீடு கட்டி வாழ்ந்துவருகிறார். மனைவி குழந்தைகளுடன் அப்பகுதியில் ஒரு அந்தஸ்துடன் வாழ்பவர்.

ஜெர்மனியில் கடந்த பொதுத் தேர்தல் சமீபத்தில் நடந்திருந்தது. இத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை இவருக்கும் இருந்தது. அந்தத் தேர்தல் வாக்களிப்புத்தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமை நடந்தது. அரசாங்க அலுவலகம் ஒன்றில்தான் அன்று தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றது.

இந்த அன்பர் அன்று வாக்களிப்பதற்காக அந்த அலுவலகத்தினுள் நுழைந்தார். உள்ளே சென்றார். அங்கு நின்ற ஒருவர் அதாவது அரச அதிகாரியொருவர் இந்த அன்பரிடம் வந்து மன்னிக்கவும் இன்று ஞாயிற்றுக்கிழமை உங்களுக்குரிய சோஷல் பணத்தை (உதவிப்பணம்) இன்று எடுக்கமுடியாது. போய்விட்டு நாளை திங்கட் கிழமை வாருங்கள் என்று சொன்னாராம்.

இவர் என்னதான் குடியுரிமை வாக்குரிமை பெற்றாலும் இவர் அகதிதான். ஜெர்மனியராக முடியாது. இப்படி புலம்பெயர் வாழ்வில் எத்தனை சுவையான, கசப்பான அனுபவங்கள்.

உயர உயரப் பறந்தாலும்
ஊர்க்குருவி ஊர்க்குருவிதான்
இதை மறந்துவிடக்கூடாது.

(இனியும் வரும்)

எஸ்.எம்.கோபாலரத்தினம்



# சந்திரிகாவின் உத்தரவை புறக்கணித்து கட்டட அடிக்கல்லை நாட்டினார் ராஜபக்ச

(05.09.04)

சுதந்திரக் கட்சியின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழாவைப் பின்போடும்படியும், தான் நாடு திரும்பியதும் பெரிய விழாவாக இதை நடாத்தலாம் என்றும் ஜனாதிபதி சந்திரிகா இலண்டனிலிருந்து எழுத்து மூலம் கேட்டுக் கொண்டிருந்தும்கூட, அந்த வேண்டுகோளைப் புறக்கணித்து, அடிக்கல் நாட்டுவிழாவைப் பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது தலைமையில் நடாத்தியுள்ளார். இந்த விழாவில் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொள்வார் என்று பலர் எதிர்பார்த்தபோதும், இலண்டனிலிருந்து பிரான்சுக்கு இரகசியப் பயணமொன்றை ஜனாதிபதி மேற்கொண்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தநிலையில், இக்கட்டட அடிக்கல் நாட்டுவிழாவை, தான் கொழும்பு வரும்வரை பிற்போடும்படி சந்திரிகா கேட்டுக்கொண்டிருந்தபோதிலும், அதைப் புறக்கணித்து, ஜனாதிபதியின் பெயர்பொறித்த நினைவுக் கல்லை, பிரதமர் மகிந்த ராஜபக்ச திறந்து வைத்தார். சந்திரிகா கலந்துகொள்ளவில்லை என்பதால், லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, அநுரா பண்டாரநாயக்க போன்ற முக்கிய அமைச்சர்கள் இந்தவிழாவில் கலந்து கொள்ளவில்லை. கட்டடத்துக்கான அத்திவாரக் கல்லைத் திறந்துவைத்த பிரதமர் மகிந்த ராஜபக்சவை உரை நிகழ்த்தும்படி கேட்டபோது, உரை நிகழ்த்த மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது. இருப்பினும் இங்கு வரவேற்புரை நிகழ்த்திய கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி சந்திரிகாவின் வாழ்த்துக்களையும் தெரிவித்ததாகத் தெரியவருகிறது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணிக்குள்ளும், சுதந்திரக்கட்சிக்குள்ளும் கருத்துமோதல்கள் வலுத்துவருவதை இது சுட்டிக்காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## சித்திரவதையிலிருந்து தப்பிவந்த ஆறு சிறார்கள் ஒப்படைப்பு !

(05.09.04)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் கடந்த வியாழக்கிழமை தமது அலுவலகத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் 6 சிறுவர்ளை ஒப்படைத்தார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் இருந்து தொழிலுக்காக அழைத்துவரப்பட்டு திருகோணமலை கலலறாவு என்னும் இடத்தில் சிங்கள இனத்தவரின் மீன் வாடியில் இவர்கள் தொழிலுக்காக அமர்த்தப்பட்டிருந்தனர்.

அங்கு வாடி நிர்வாகிகளால் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளான இச்சிறுவர்கள் அங்கிருந்து மூன்று தினங்களுக்கு முன்னால் தப்பி ஓடிவந்தனர். காட்டுப்பகுதியில் ஒழிந்திருக்கும் போது விடுதலைப் புலி உறுப்பினர்களால் இவர்கள் அவர்களது முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பலத்த சித்திரவதைகளுக்கு இவர்கள் உள்ளாகியிருந்தனர். தொழிலுக்கு என்று அழைத்து வந்த நபர் மொழி தெரியாத ஓரிடத்தில் எங்களை அமர்த்தியிருந்தார் என்றும் இங்கு பலத்த கடினமான வேலைகளுக்கு தாங்கள் பணிக்கப்பட்டதாகவும் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பயன்படுத்தி தாங்கள் தப்பி வந்ததாகவும் இவர்கள் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தனர்.

இவ்விடயம் உடனடியாக அரசியல் பொறுப்பாளர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சிறுவர்களை கையளிக்கும் போது விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் சிறுவர்களை தொழிலுக்காக அமர்த்துவது தவிர்க்கப்பட வேண்டும். குடும்ப நிலைமை காரணமாக சிறுவர்கள் தொழில் தேடிச் செல்ல வேண்டியுள்ளது. இவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் நீங்கள் இச்சிறுவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அத்துடன் சிறுவர்களை தொழில் செய்ய நிர்ப்பந்திப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## இரவோடிரவாக மாயமான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நினைவுக் கல்

(06.09.04)

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைமையகக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டியது தொடர்பான நினைவுப் படிகல் இரவோடிரவாக மாயமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பத்தரமுல்லையில் கட்டப்படவிருக்கும் சுதந்திரக் கட்சித் தலைமையகக் கட்டடத்துக்கான அடிக்கல்லை கடந்த 2ம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ச நாட்டினார். ஆனால், அடிக்கல் நாட்டியது குறித்த நினைவுப் படிகத்தில் பிரதமரின் பெயர் காணப்படவில்லை. பதிலாக, ஜனாதிபதி சந்திரிகாவின் பெயரே பொறிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சனிக்கிழமை காலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அங்கு சென்று பார்த்தபோது நினைவுப் படிகல் அகற்றப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இது கட்சிச் செயலாளருக்கு உடனடியாக தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டபோதும் அவர் அது குறித்து அலட்டிக் கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கைக்குண்டை வெடிக்கவைத்து காதலியைக்கொன்று, சிப்பாய் தற்கொலை

(06.09.04)

மாவனல்லையில் உள்ள உல்லாச விடுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் குண்டை வெடிக்கச் செய்து காதலியைக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இச்சம்பவம் சனியன்று காலை இடம்பெற்றுள்ளது. இளம் பெண்ணொருவருடன் வந்த இராணுவச் சிப்பாய், மாவனல்லையில் உள்ள உல்லாச விடுதியொன்றில் வாடகைக்கு அறை எடுத்து தங்கியுள்ளார்.

இவர்கள் தங்கியிருந்த அறையில் பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடித்துள்ளது. இதையடுத்து விடுதியில் ஊழியர்கள் அறையைத் திறந்து பார்த்தனர். அங்கு இராணுவச் சிப்பாயும், அவரது காதலியும் உடல் சிதறிக் கிடந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இறந்தவர் கண்டியைச் சேர்ந்த நந்தசேன என்ற இராணுவச் சிப்பாய் என தெரிவிக்கப்பட்டது. இளம் பெண்ணின் விவரங்கள் நேற்று மாலைவரை கிடைக்கவில்லை. பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். காதலர்கள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இந்தக் குண்டுவெடிப்புக்கு காரணமாக விருக்கலாம் என நம்பப்படுகின்றது. அண்மையில் கொழும்பில் சிறீலங்காச் சிப்பாய் ஒருவர் இவ்வாறு காதலியுடன் குண்டை வெடிக்க் வைத்து தற்கொலை செய்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## வல்லைவெளியில் பற்றைக்குள் இருந்து பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு!

(06.09.04)

வல்லைவெளி மயானத்துக்கு சமீபமாக பற்றைக்குள் இருந்து பெண் ஒருவரின் எலும்புக் கூடு நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் முயல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சிலர் எலும்புக்கூட்டைக் கண்டு, விடுதலைப் புலிகளுக்குத் தகவல் கொடுத்தனர். இதையடுத்து வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா சம்பவ இடத்துக்குச் சென்று எலும்புக்கூட்டைப் பார்வையிட்டார். எலும்புக் கூட்டுக்கு அருகில் பெண்கள் அணியும் உள்ளாடை, சிறுவர்கள் அணியும் சப்பாத்துக் காலுறைகள், வெள்ளைச் சட்டை ஆகியன காணப்பட்டன. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

## இ.தொ.கா.வின் முடிவு குறித்து தெளிவாக புரிந்து கொள்ள முடியவில்லை

(06.09.04)

அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு எடுத்துள்ளமை குறித்து தெளிவாக புரிந்து கொள்ள முடியாதுள்ளதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கத்திற்கு சமாதான முயற்சிகளில் உண்மையான அக்கறை இருக்கின்றதா என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியிலும் தோன்றியுள்ளதாகவும் தெரிவித்த அவர், இவ்வாறனதொரு நிலையில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தொழிலாளர் காங்கிரஸ் முன்வந்தமை குறித்து தாம் குழப்பமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். கொழும்பிலிருந்து ஒளிபரப்பாகும் தனியார் தொலைக்காட்சிக்கு, வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் தொழிலாளர் காங்கிரசின் இந்த நிலைப்பாட்டிற்கான காரணம் குறித்து தம்மால் அறிந்துகொள்ள முடியும் என தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மூன்று வாரத்தில் விடுதலைப் புலிகளுடன் பேசி மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளமை தொடர்பாக கருத்து தெரிவித்த தமிழ்ச்செல்வன், சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக முன்னர் கூறியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கம் தவறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளதோடு, அரசாங்கத்தின் செயல்திறன் குறித்து பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனையற்ற முறையில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை கவலையளிப்பதாக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. பேச்சுவார்த்தை இன்று ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. சமாதானப் பேச்சுக்கு முட்டுக்கட்டையாக தமிழருக்கு எதிரான இனவாதத்தினை கக்கிவருகின்றது. மலையக தமிழர்கள், வடகிழக்கு தமிழர்களுக்கெதிராகவே ஜே.வி.பி.யின் நிலைப்பாடு அமைந்துள்ளது. இத்தகைய நிலையில் மலையகத்தில் முக்கிய கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனையற்ற முறையில் ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை எந்தவகையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உதவும் என்ற கேள்வி எழுகின்றது.

## கனடா வாகன விபத்தில் 2 தமிழ் இளைஞர் பலி

(05.09.04)

கனடாவின் ரொறன்றோ நகரில் கடந்த 28ம் திகதி நள்ளிரவு இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இரு தமிழ் இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். ரொறன்ரோவில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் ஸ்காபரோ பகுதியிலேயே இந்த வீதி விபத்து இடம்பெற்றுள்ளது. பலத்த மழை பெய்து கொண்டிருந்த போது, வேகமாகச் சென்ற இவர்களது வாகனம், வீதியை விட்டுவிலகி மற்றொரு வாகனத்துடன் மோதிய போதே, இந்த வாகனத்தின் சாரதியான நகுலேஸ்வரன் கந்தசாமி (24) என்பவரும், அதில் சென்ற பொன்னுத்துரை நேசகுமார் (25) என்பவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இது தொடர்பான விசாரணைகளை ஸ்காபரோ பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.



# காலம் ஆகி வந்த கதை 22

இரவி அருணாசலம்

## என் கண்ணல்லவா நீ – 2

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எழும்பி கைகழுவிவிட்டு நல்ல வாசம் வீசும் நைற்அன்டே சவர்க்காரத்தாலை முகத்தைக் கழுவினன். பூங்காவனத்துக்குப் போகவேணுமெண்டு வேட்டியைக் கட்டி, முழங்கைக்குக் கீழே கையை மடிச்சுவிட்டன். நல்ல வாசம் வீசட்டும் என்று கோயா பவுடரைப் பூசினன். கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் பூங்காவனத்துக்கு அஞ்சுரூபாவுக்கு வாங்கின வெள்ளிச் சங்கிலியைக் கழுத்திலை கொழுவினன். தலைமயிர் சோளகத்துக்குக் குழம்பாதவாறு கையால் அமத்தி அமத்தி கோஷ்டி கேட்டன். கச்சான் உடைத்துத் தின்றாளோ என்னவோ, முன்னால் கச்சான்

உடைச்சுத்தின்னத்தக்க சிறு இடைவெளி விட்டு நந்தினி, கோஷ்டி பார்த்துக்கொண்டிருந்தாள்.

அம்மாள் கோயில் திருவிழாவில் அது ஒன்று நடந்ததுதான். சில பொடியங்கள் சில பெட்டைகளுக்கு கடலைக்கொட்டைச் சரை வாங்கிக் குடுத்தான்கள். சீக், எவ்வளவு வெட்கங்கெட்ட வேலை. பெட்டைகளுக்கு முன்னாலை நடந்தாலே எனக்கு கால் தடக்குப்படுது. கொஞ்சமெண்டால் கால் தடக்குப்பட்டு விழுந்தும் போடுவன். பெட்டைகளுக்கு முன்னாலை சைக்கிள் ஓடினாத்தான் எனக்கு

இப்பிடி ஒண்டும் வாறதில்லை. அதுவும் நேரா ஓடுறனோவும் தெரியாது. பெட்டைகள் நக்கல் அடிச்சுச் சிரிக்குதுகளோ எண்டு முதுகு கூச்சத்திலை நெளியும். இஞ்சை என்னடா எண்டால் இந்த வழியலுகள் கடலைச் சரையே வாங்கிக் குடுக்குதுகள்...

நந்தினிக்கு முன்னாலை எனக்கு அப்பிடி கூச்சம் ஏதும் வந்ததில்லை. தூரத்தில் என்னைக் காணுகிறபோதே எனக்கென்று ஒளித்து வைச்ச சிரிப்பை நந்தினி எடுத்து வைப்பாள். அது வெட்கம் கலந்த மாதிரியும் இருக்கும். அது எனக்கான சிரிப்பு எண்டு தெரியிறது பெரிய வேலையில்லை. கப்பல் வாழைப்பழம் கனிஞ்சு வெடிச்ச சிரிப்பு அது. கன்னம் றோஸ் நிறத்திலை மின்னும்.

அவளுக்கும் ஆரும் கச்சான் சரை குடுத்திருப்பினமோ? அவளுக்கு முன்னாலை கச்சான் கோதுகளைக் காணேல்லை, இருக்காது. அவள் அப்பிடி வாங்கிற சாதியில்லை. எனக்கென்று மட்டும்தான் இந்த வசீகரச் சிரிப்பு சிரிக்கிறாள். மற்றும்படி வெட்கப்பட்டுத் தலை குனிகிறவள். எண்டாலும் அவளுக்கு முன்னாலை ஏன் கொஞ்ச இடம் இருக்கு? கச்சான் உடைக்கத்தானே? உந்த வழியலுகள் யாரும்

கச்சான் வாங்கிக் குடுத்திருப்பினமோ? ஏன் அவள் போய் வாங்கியிருக்கக்கூடாதோ? அல்லது அவளின்ரை பிரென்ட்ஸ் ஆரும் வாங்கியிருப்பினமோ? அருந்ததி, மாலினி எண்டு அவளின்ரை பிரெண்ட்ஸையும் நம்பேலாது. பொடியங்களுக்கு வழியிற நாய்கள்!

அந்த வருசத்து சோளகம் பனையை உசுப்பின காலங்களில், நான் மிகத் துயர்ப்படத்தான் செய்தேன். அது நெஞ்சை அரித்துக்கொண்டேயிருக்கிற வெப்பியாரம். நினைத்து நினைத்தாற்போல் அழுகை வருகிறது. சுவரில் தலை சாய்த்து நிற்கிறேன். மேசை முன் இமை மடியாது இருக்கிறேன். பசியில்லை. கோப்பை வந்தாலும், அதில் அமிர்தமேயிருந்தாலும், கோப்பையில் கைவைக்க மனம் வரேல்லை. நெஞ்சு அரிபட்டுக் கொண்டேயிருக்கிறது. எனக்கெண்டு ஏன் இப்பிடி நடக்குது? ஓமெண்டும் இல்லை, இல்லையெண்டும் இல்லை. எல்லாம் அரைகுறையிலை நிக்குது. நானும் கேக்கேல்லை. கேக்கவும் மாட்டன். கேட்டால், `என்ன ரவி, நான் அப்பிடி ஒண்டும் நைக்கேல்லையே!' எண்டு சொன்னால்.. பிறகு என்னெண்டு அவளின்ரை முகத்திலை முழிக்கிறது? றோட்டிலை என்னெண்டு திரியிறது? சீக், எவ்வளவு பெரிய வெட்கம்!

பனையிலிருந்து ஒரு கண் ஈய்க்கப்பட்ட நொங்கு விழுது. காவோலை விழுது. கொக்கறை, பன்னாடை எல்லாம் விழுது. சோளகம் பனையை உலுப்பி அப்பிடி விழுத்தப் பண்ணுது. வெய்யில் மங்கினாப்பிறகு குளிர் வரத்தான் செய்யுது. தட்டிவான் நிரம்ப கடலைக்காரிகள் போகினம். அனேகமாக எல்லா இடங்களிலும் கோயில் திருவிழாக்கள் நடக்கின்றன. தூரத்து லவுட்ஸ்பீக்கரிலையிருந்து பாட்டு விட்டு விட்டுக் கேட்கிறது. அனேகமாக எல்லாரும் விரதம் பிடித்தபடி இருக்கிறார்கள். தோய்ந்து தலை சிலுப்பிக்கொண்டு திரிகிறார்கள். எல்லோருடைய நெற்றியிலும் விபூதிக்குறி தெரியாவிட்டாலும், சந்தனப்பொட்டு மின்னுகிறது. மாம்பழம் அல்லாட்டில் பிலாப்பழத்தோடை அரிசிமாக் குழல்புட்டு சாப்பிடுறம். றோட்டிலை மீன்காரர்களைக் காணேல்லை. ஐஸ்பழக்காரர்களை, தள்ளுவண்டில்காரர்களைக் காணுறம்.

தள்ளுவண்டில்காரர்களை மறித்து அம்மா பருப்பு வாங்கிறா. ஒன்றும் தானும் துயரைத் தணிக்கச் செய்யவில்லை. எனக்கு மனசு நொந்து, அரித்து, வெப்பியாரப்பட்டுக்கொண்டேயிருந்தது.

நான் அப்போது சுத்தமாக இருக்கத் தொடங்கினேன். ஒழுங்குக்கு வரத் தொடங்கினேன். அடுப்புக் கரியால் பல்லுத் தேய்த்த காலம் போய், உமிக்கரியால் பல்லுத் தேய்த்த காலம் போய், கோபால் பல்பொடியால் பல்லுத் தேய்த்த காலம் போய், நான் பற்பசையும், பிரஷ்சும் வாங்கி பல்லு விளக்கினேன். நைற் அன்டே சவர்க்காரம் வாங்கி, ஒவ்வொருநாளும் காலமை குளிச்சன். வேர்த்தால் பின்னேரமும் குளிச்சன். கிளினிக் ஷாம்பு போத்தல் வாங்கி கிழமைக்கு இரண்டு தரம் தோய்ஞ்சன். தலையிலை எண்ணெய் படாமல் தற்காத்தன். நான் அறியா நேரம் அம்மா என்

தலையிலை எண்ணெய் தப்பினா, ஓடிப்போய் மூன்றுதரம் ஷாம்பு போட்டு முழுகினன். அம்மா `இனிமேல் உனக்கு எண்ணெய்யே வைக்கமாட்டன்' எண்டா. அம்மா அப்பிடிச் சொன்னபோது நிறையக் கவலைப்பட்டேன்தான். ஆனால் அதுதான் நல்லது என்றும் யோசித்தேன். தோய்த்துலர்ந்த ஆடையே எப்போதும் தரித்தேன். ஆயினும் மனசு பிளந்து பிளந்து வலித்தது.

சோளகம் தன் கடைசி உசுப்பலையும் உதிர்த்து விட்டுப் போயிற்று. மழை பெய்யத் தொடங்கிற்றுப்பொழுது. நான் நந்தினி வீட்டு ஒழுங்கையால் சைக்கிளில் போனேன். ஒழுங்கைக் கரையின் கிணற்றடியில் அவள் குறுக்குக் கட்டுக்கட்டி தோய்ந்துகொண்டிருந்தாள். என்னைக் கண்டு அவளுக்கு வெட்கமாக இருந்தது. எனக்கும் வெட்கம் வந்தது. நான் ஏது செய்வதென்றறியாமல் சைக்கிளை வேலிக்குள் விடப்பார்த்தேன். சைக்கிளை மடக்கி வெட்டி ஒழுங்கையில் உருண்டேன். உருண்டுதான் போனேன். கைகால் நடுங்கத் தொடங்கிச்சு. கோணல் மாணலாக சைக்கிள் ஓடிப்போச்சு. நேரே அம்மாளிடம் போனேன். சாரம் கட்டியிருந்ததிலை வெளி மண்டபத்திலை நிண்டு உயரக் கை கூப்பினேன். அம்மாளே என்று இறைஞ்சி அழப்பார்த்தேன். மலை வேம்பு சிலுசிலுத்துக் கிடந்தது. அது வாடைக்காற்றுக்கு. பொழுதுபட்டு இருண்டபிறகு கோயில் வீதியில் நின்ற வெள்ளத்தில் மழை தூறத் தொடங்கியது. சின்னச் சின்னப் பொக்களங்கள் வந்து வெடித்தன. கோயில் லைற் அந்த வெள்ளத்தில் ஆடியது. ஆடி ஆடிக்கொண்டேயிருந்தது.

பிறகு மழை பெய்து பின்னேரங்கள் எனக்கு வற்றிப்போயிற்று. வெளிக்கிடவே முடியவில்லை. முன் யன்னல் திறந்தால் மழை சீறியது. மழை பெய்வதைப் பார்த்தவாறே இருந்தேன். யன்னலுக்குள்ளால் தூவானம் அடிச்சுது. துமி தெறிச்சுது. மேசையில் இருந்த புத்தகங்கள் கொப்பிகள் நனையைப் பார்த்தன. யன்னலைப் பூட்டுகிறதாக நான் இல்லை. புத்தகங்கள் கொப்பிகளை எடுத்துவைத்தேன்.

எடுக்கிறபோது ஒரு கொப்பியில் நந்தினி என்று எழுதியிருந்ததைக் கண்டேன். எப்பொழுது எழுதினேன் என்று தெரியாது. கை அது பாட்டுக்கு தன் வேலையைச் செய்திருந்தது. மழையின் துளிகள் நந்தினியின் முகத்தில பொழிந்து முத்தாகப் பூத்திருந்தன. அவள் முதுகிலும் அந்த முத்துக்கள் இருந்தன. கிணற்றடியில் அதனை நான் கண்டேன். மழை சீற, தூவானம் தெறிக்க, வாடை கொடுக்கிக் குளிர, சுவெற்றர் மாதிரி ரீசேட் போட்டு மழைக்குள் மூழ்கிக்கிடந்தேன் நான்.

நூறுரூபா நோட்டாகக் கிடந்தது. கொடுத்தேன். புதுசாக் கண்ணாடி வாங்க அம்மா தந்த முழுநோட்டு அது. `வாசிக்க ஒண்டும் விளங்குதில்லை. கண்ணாடியை மாத்த வேணும்' என்று அப்பா கனநாள், அடிக்கடி சொல்லியிருந்தார். ஒருநாள் அம்மா `கண்ணாடியை மாத்திறதெண்டால் மாத்தவேண்டியதுதானே? நெடுகவும் புராணம் பாடிக்கொண்டிருக்கிறியள்' என்று புறுபுறுத்து `நான் காசுதாறன். போய் மாத்துங்கோ' என்றா. அப்பிடி அம்மா எல்லாத்துக்கும் அப்பாவுக்கு நெம்புகோல் கொடுக்கவேண்டும். அப்பா யாழ்ப்பாணத்திலை கண்ணாடிக்கு ஓடர் பண்ணினார். நான் சனி ஞாயிறு யாழ்ப்பாணம் ரியூற்றறிக்குப் போனன். அம்மா முருங்கைக்காய் விற்ற காசு தந்து `கண்ணாடியை எடுத்துக்கொண்டு வா' எண்டா.

சனியும், ஞாயிறும் ரியூசன் காலமை ஏழுமணிக்கு தொடங்கி ஒன்பது மணிக்கு முடியும். பிறகு பதினொரு மணிக்கு தொடங்கி ஒரு மணிக்கு முடியும். சரியாக

(தொடர்ச்சி 28ம் பக்கம்...)




சிங்கப்பூரில் உங்கள் இல்லம்

01-22 Belilios lane, off serangoon road, 219962 Singapore

கட்டணங்கள் s$40ல் இருந்து. குளிரூட்டப்பட்ட சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்காப்புப்பெட்டி, இணைந்துள்ள குளியல் அறை வசதிகள் உள்ளன.

கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி

திருமணச் சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல். விமான நிலையத்திலிருந்து ஏற்றிச்செல்லல். உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்படும்.

முன்கூட்டியே தொலைபேசியூடாகப் பதிவுசெய்வதற்கு: 65 : 63 96 55 00

அல்லது Email: newkinn@singnet.com.sg

CEYLON INN

'தமிழில் பேசுவோம் தாய் மொழியை வளர்ப்போம்'

# ttn தமிழ்த் தொலைக்காட்சி இணையம்

**நிகழ்ச்சி நிரல் 09-09-2004 முதல் 15-09-2004 வரை**

| நேரம் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| 07:00 | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 07:03 | புலரும் பூபாளம் | புலரும் பூபாளம் | புலரும் பூபாளம் | புலரும் பூபாளம் | புலரும் பூபாளம் | புலரும் பூபாளம் | புலரும் பூபாளம் |
| 07:30 | யோகாசனம் | யோகாசனம் | அரும்புகள் | அரும்புகள் | யோகாசனம் | யோகாசனம் | யோகாசனம் |
| 08:00 | புத்தம் புதுக்காலை | புத்தம் புதுக்காலை | சைவநிகழ்ச்சி | கிறிஸ்தவ நிகழ்ச்சி | புத்தம் புதுக்காலை | புலரும் பொழுது புலரும் | புத்தம் புதுக்காலை |
| 08:30 | செய்தி நேரம் | செய்தி நேரம் | புத்தம் புதுக்காலை | பழமுதிர்ச்சோலை | புத்தம் புதுக்காலை | செய்தி நேரம் | செய்தி நேரம் |
| 09:00 | புத்தம் புதுக்காலை | புத்தம் புதுக்காலை | புத்தம் புதுக்காலை | ஒளிக்கீற்று | செய்தி நேரம் | புலரும் பொழுது புலரும் | புத்தம் புதுக்காலை |
| 09:30 | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | ஒளிக்கீற்று | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | வணக்கம் ஐரோப்பா | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | இசைச் சிற்பிகள் | ஜன்னலைத் திறந்துவையுங்கள் | சொர்க்கம் வாரம் | வணக்கம் ஐரோப்பா | சித்திரம் பேசுதடி | வெள்ளித்திரை | ஆனையிறவு சமர்க்களம் |
| 11:00 | என்றென்றும் புன்னகை | தாயக வலம் | சொர்க்கம் வாரம் | மடுமாதா திருநாள் | என்றென்றும் புன்னகை | வைத்தியலிங்கம் ஷோ | நல வாழ்வு |
| 11:30 | திரைமுகம் | படலைக்குப் படலை | சொர்க்கம் வாரம் | புதினக்கண்ணாடி | தாயகவலம் | கலிவூட் நேரம் | நையாண்டி மேளம் |
| 12:00 | வானவில் | வானவில் | சொர்க்கம் வாரம் | நாவூற வாயூற | வானவில் | வானவில் | வானவில் |
| 12:30 | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | பார்தேன் பகர்ந்தேன் | முளைளவிடும்பதியன் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் |
| 13:00 | பஞ்சமி | பஞ்சமி | ஹலிவூட் நேரம் | திரைமுகம் | பஞ்சமி | பஞ்சமி | பஞ்சமி |
| 13:30 | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் |
| 14:00 | **அண்ணன் ஒரு கோவில்** | **அதே மனிதன்** | **நான் மகான் அல்ல** | **பகல் நிலா** | **கிழக்கே ஒருகாதல்பாட்டு** | **என்னுயிர்த் தோழன்** | **மனசுக்கேத்த மாப்பிள்ளை** |
| 16:30 | பார்த்தேன் பகர்ந்தேன் | ஒளித்தடம் [குறும்படம்] | வெள்ளித்திரை | திரையிசை வரிசை | நேருக்கு நேர் | புதினக் கண்ணாடி | முளைவிடும் பதியன் |
| 17:00 | மண்ணீள் துளிர்கள் | ஜேர்மன் நேரம் | நலவாழ்வு | ஆனையிறவு சமர்க்களம் | கலைச்சரம் | நினைவலைகள் | சங்கம நேரம் |
| 17:30 | அப்பாவுக்காக | அப்பாவுக்காக | வண்ணச்சிறகடித்து | ஓவியா | அப்பாவுக்காக | அப்பாவுக்காக | அப்பாவுக்காக |
| 18:00 | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | குண்டக்கா மண்டக்கா | படலைக்குப் படலை | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது |
| 18:30 | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | தாயக வலம் | ஒளித்தடம் [குறும்படம்] | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது |
| 19:00 | அவளும் பெண்தானே | அவளும் பெண்தானே | இசைச் சிற்பிகள் | வைத்தியலிங்கம் ஷோ | அவளும் பெண்தானே | அவளும் பெண்தானே | அவளும் பெண்தானே |
| 19:30 | சொர்க்கம் | சொர்க்கம் | கோலிவூட் பார்வை | நட்சத்திரம் | சொர்க்கம் | சொர்க்கம் | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் |
| 20:30 | கோபுரம் | கோபுரம் | ஜலக்கிரீடை | ஜலக்கிரீடை | கோபுரம் | கோபுரம் | கோபுரம் |
| 21:00 | நல்லூர் கொடியேற்றம் | **கன்னி ராசி** | நையாண்டி மேளம் | ஜலக்கிரீடை | நோர்வே நேரம் | இளந்தளிர்கள் | விழிகள் |
| 21:30 | விளையாட்டு | | **மாணஸ்தன்** | **தம்பதிகள்** | **பதிலுக்குப் பதில்** | தாயகவலம் | ஜன்னலைத் திறந்து வையுங்கள் |
| 22:00 | தாயக வெளியீடுகள் | | | | | **அன்னைத் த.காப்போம்** | ஆடுகளம் |
| 22:30 | தாயக வெளியீடுகள் | | | | | செய்திக் கண்ணோட்டம் | ஆடுகளம் |
| 23:00 | சித்திரம் பேசுதடி | | | | | | **திரைக்காவியம்** |
| 23:30 | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | | | | | |

TTN,. 5-7, Rue Emile Zola, 93120 La Courneuve
Tél : 0033 1 48 39 34 29/Fax : 0033 1 48 39 31 36

த ர ணி எ ங் கு ம் வா ழு ம் த மி ழ ரி ன் பி ம் ப ம்


# பாசல் ரவி கடை

**ஆம் இது நிஜம், புதிய டிசைன்களில், அனைத்தும் 70%கழிவில்**



பஞ்சாபி 5-SFRல் இருந்து
டெனிம் 5-SFRல் இருந்து
சேட் 5-SFRல் இருந்து
சாறி 7-SFRல் இருந்து
T-Shirt 1-SFRல் இருந்து
Audio-CD- 1-SFRல் இருந்து
மணிக்கூடு 9-SFRல் இருந்து





**தங்கநகைகள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கல்லு, முத்து, Bombay Design உட்பட ஒன்றுக்குமே கூலி அறவிடப்படமாட்டாது. எடைக்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.**

பாசல் ரவி கடை - *061 / 272 90 30 - 061/272 09 90 - 079/356 22 78*

# விழித்தெழுந்தால் வெற்றி நிச்சயம்!

## தடைக்கற்களே ஏணிப்படிகளாக...

அன்பான சகோதரியே !

வாழ்க்கைப் பாதையில் மேடு பள்ளங்கள், எறியப்படுகின்ற தடைக் கற்கள் எதிர்பாராமல் வரலாம். அதனால் நீங்கள் உங்கள் பாதையை மாற்றிக்கொள்ள வேண்டுமா? ஒவ்வொருவர் வாழ்விலும் துன்பங்கள், துயரங்கள், முட்டுக்கட்டைகள், தடைகள் ஏற்படுகின்றன. ஆனால் இவைபற்றி அலட்டிக்கொள்ளாமல் அவற்றை எமது முன்னேற்றத்தின் பக்கபலமாக ஆக்கிக்கொண்டால், அதுவே வெற்றியை தருவதுடன் எம் பின்னே வரும் சகோதரிகளுக்கு விழிப்பூட்டுவதாகவும் அமையும்.

## சிறிய மலரின் வேண்டுகோள்...

அன்புள்ள அம்மாவுக்கு,

ஒரு வீட்டிலேயே அம்மாவும் பிள்ளையுமாக இருக்கும் போதே நான் உங்களுக்கு கடிதம் எழுதவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நான் நேற்றுப்பட்ட மன அவலத்தை இன்று என் தங்கைபடுவது புரிந்தும் அதை பார்த்துக்கொண்டிருக்க என்னால் முடியவில்லை. அதனாலேயே இதை எழுதுகின்றேன்.

அம்மா..! பெண்ணாகப் பிறந்தவர்கள் பெண்மைக்குரிய வளர்ச்சிப் பாதையில் பூப்படைவதும் ஒரு வளர்ச்சியே. இது புலம் பெயர்வாழ் ஒரு பெண்பிள்ளைக்கு இன்னும் சிறுவயதிலேயே நிகழ்வதை நாம் அநுபவித்தும் இருக்கின்றோம். அம்மா! நான் பூப்படைந்த உடனே மாமா வந்தார். இன்னும் மற்ற உறவுகளும் நண்பர்களும் வந்தார்கள். விருந்தும் பேச்சும் எனது வளர்ச்சிபற்றிய வர்ணிப்புமாய் அன்றைய கொண்டாட்டம் நிறைவானது.

அடுத்து ஒரு நாள் ஐயர் வந்தார். அனுட்டானங்கள் நடந்தன கூடவே சின்னதாய் சோடனைகள் செய்து மணவறையில் இருபத்தைந்துக்கு குறையாத உறவுகளுடன் ஒரு கொண்டாட்டம். அன்று குளியலறைத் தொட்டிக்குள் ஈர உடையுடன் என்னையிருத்தி ஒளிப்படம், நிழற்படம் எடுத்தப்பின் அலங்காரங்களும் செய்தீர்கள். படப்பிடிப்பும் விருந்துமாய் இரண்டாம் கொண்டாட்டம் நிறைவானது. என்னைப் பார்க்க எனக்கே கூச்சமாக இருந்த வேளையில், எத்தனைபேர் என்னை ஈர உடையில் குளியல் அறையில் சந்திக்கும் போது என் உடல்கூசியது, பயம் வந்தது எதுவுமே உங்களுக்கு தெரியாது அம்மா. பின்பு ஒரு விடுமுறை நாளில் இன்னொரு கொண்டாட்டத்துக்கு ஆயத்தமானீர்கள். நான் பூப்படைந்ததை அறிந்தவர், தெரிந்தவர், உற்றார், உறவினர், நண்பர்கள், ஏன் ஒரு நாள் கண்டு அறிமுகம் ஆனவர் என அத்தனைபேருக்கும் அறிவித்து, ஐந்நூறுக்கும் குறையாமல் விருந்தினர்களை அழைத்தீர்கள். என் உருவத்தை வயதுக்கு மீறிய வர்ணிப்பாய் வடிவமைத்தீர்கள். வகையறியாது மனம் வாடிப்போயிருந்த என்னில் எனக்கே வெறுப்பாய் இருந்தது.

ஏன் பூப்படைந்தேன்? என்று எரிச்சலாய் இருந்தது. அம்மா! எங்கள் பண்பாட்டின் படி ஏதும் பரிகாரம் செய்யவேண்டும் என்றால் பவுத்திரமாக வீட்டினுள்ளே பலருக்கு தெரியாமல் செய்திருக்கலாம். ஏன் அம்மா மூன்று தடவைகள் இவ்வளவு செலவு செய்து என் பெண்மை வளர்ச்சியை அம்பலப்படுத்தினிர்கள்..?

அதே நேரம் என்போன்ற எத்தனையோ சிறுமிகள் உண்ண உணவோ சரியான வாழ்வு வசதியோயின்றி இன்றி எம் தாய்நாட்டில் இருப்பதை அறிந்தீர்களா? அறிந்தும் இப்படியான அநியாயச் செலவுகளைக் குறைத்தும் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய நினைத்தீர்களா? நாம் உதவி செய்ய வேணும் அம்மா.

பதினொரு வயது சிறுமிக்கு இவ்வளவு கஸ்டம்..கஸ்டம் கொடுக்கிறோமே என நினைத்துப் பார்த்தீர்களா? இந்த மூன்று கட்ட நிகழ்வுகளில் எத்தனை கூனிக்குறுகிப்போயிருந்தேன். என்னில் நானே வெறுப்புக் கொண்டேன் என்றது எனக்குத்தான் தெரியும்.

இந்த அம்பலங்களை தவிர்க்க முடியாதா அம்மா? இந்தநிலை என் தங்கைக்கு வரவிடமாட்டேன். அவளது உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டும். அத்துடன் அம்மா ஒரு சிறுமி வயதுக்கு வரும் போது அவளது உடல், மனம் சார்ந்த தேவைகள் எதுவோ அதைச்செய்து, அவளது தொடர்ந்த நாட்களை உற்சாகப்படுத்த வேண்டும். பூப்புனித நீராட்டுவிழா பற்றிய வேண்டாத ஆசைகளை சிறுமிகளின் மனதில் ஊட்டுவதை நிறுத்தி பிள்ளைகளின் எதிர்கால நலனுக்கு எது தேவையோ அதை பெற்றோர்கள் செய்ய முன்வர வேண்டும்.

இத்துடன் என் அம்மாவுக்கு எழுதிய முதற் கடிதத்தை நிறைவு செய்கின்றேன்.

அன்புடன்
ஆசை மகள்.

## ஓர் அபலைப்பெண்ணின் உள்ளக்குமுறல்

நான் புலம்பெயர்ந்த நாட்டில் ஒரு சிறிய நகரத்தில் வசித்து வருகின்றேன். எனக்கு திருமணமாகி 2 வருடங்கள் ஆகின்றன. எனக்கு குழந்தைகள் இல்லை. நீங்கள் நினைத்துவிடாதீர்கள் நான் வேலைக்கு செல்கின்றேன், படிக்கின்றேன், அதனால் தான் எனக்கு குழந்தையென்று சிந்திக்க நேரம் இல்லை என்று. நீங்கள் அப்படி நினைத்தால் அது மிகவும் தவறு. எனக்கு குழந்தை என்றால் மிகவும் விருப்பம்.

நான் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவள். பாடசாலை நாட்களில் தோழிகளுடன் சிட்டுக்குருவியாய் சிறகடித்தவள். யாழ்ப்பாணத்தில் பெயர்பெற்ற பாடசாலையில் உயர்தரம் வரை கல்விகற்று பல்கலைக் கழகம் சென்று பட்டப்படிப்பும் படித்தவள் தான். திருமண வயதில் அம்மா அப்பாவின் வெளிநாட்டு ஆசைக்கு பலியாகி ஏற்கனவே வெளிநாட்டில் உழைக்கும் அண்ணனின் இரத்தத்தை பிழிந்து உழைத்த காசு சீதனமாக கைமாற, என்னுடைய கணவரை நான் வாங்கினேன், என்றது என்னுடைய நினைப்புத்தான்.

ஆனால் என் கணவர் நினைக்கின்றார் காசையும் வேண்டி என்னையும் வேண்டியதாக. இன்று நான் நாகரிகமான கைதி. என்னுடைய சுயம் என்றோ ஆழிந்துபோய் விட்டது. எல்லாவற்றுக்கும் என் கணவரை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. தனியே வெளியே செல்லவோ, அல்லது இந்நாட்டு பாசை படிக்கவோ எனக்கு அனுமதியில்லை. என் கணவர் இன்றி என்னால் எதுவுமே செய்ய முடியாது.

அனுமதியும் இல்லை. எங்கள் நகரத்தில் இயங்கும் தமிழ் பாடசா லையில் தமிழ் கற்பிக்வரும்படி எங்களை அணுகினார்கள். மறுத்து விட்டார் என் கணவர்.

நான்கு அறைகளுடன் கூடிய வசதியான சொந்தமாக வேண்டிய வீட்டில் சிறை வைத்துள்ளார் என் கணவர். சுவர்களும் யன்னல்களும் எனக்கு மிகவும் வேண்டிய தோழிகள். ஏனென்றால் நான் மனம் விட்டு பேசுவது அவர்களுடன் தான். இரவு வேலை செய்யும் என் கணவருக்கு பகலில் நித்திரைக்கும், இன்னொரு வேலைக்குமே நேரம் சரியாக உள்ளது. விடுமுறை நாட்களிலும் 'பாட் ரைம்' வேலை. எதாவது விசேடங்களில் மட்டும் தான் நான் தமிழ் பெண்களை காண்பதும் கதைப்பதும். அங்கெல்லாம் நான் கழுத்து முட்ட நகைகள் அணிந்தும் பட்டுபுடவை களுடன் தான் செல்லவேண்டும். நகை அணிவதே பிடிக்காத எனக்கு, இது தண்டணை.

தொலைபேசியும் எல்லா நேரங்களிலும் கதைக்கமுடியாது, நித்திரையை குழப்பும் என்பதற்காக. விலங்குகள் பூட்டிய சிறைப்பறவையாக நான் வாழ்கின்றேன்.

– பூமகள்

## விருப்பு

ஐந்தாம் வகுப்பில்
ஆசிரியர் சொன்னார்,
இரண்டாம் தர பாடசாலைக்கு போ !
அம்மா சொன்னார்,
முதல் தரம்தான் கௌரவமானது
என்று
பதின்மூன்றாம் வகுப்பு முடிய
நான் சொன்னேன் பல்கலைக்கழகம்
என்று
அப்பா சொன்னார் கலியாணம் என்று
அழைப்பிதழ் பிடிச்சிருக்கா ?
அண்ணன் கேட்டான்.
அறுபது பவுண் போதுமா ?
அம்மா கேட்டார்.
மாப்பிளைக்கு பென்ஸ் பிடிக்குமா?
அப்பா கேட்டார்.
மாப்பிள்ளை பிடிச்சிதோ..!
என்னை யாரும்
இன்னம் கேட்கவில்லை.

– முகில்

# நத்தார் தினத்தை முன்னிட்டு

# Financial Consulting Gmbh & Sarah Star Thun

## இணைந்து வளங்கும் சுவிஸ் ஐரோஞ்சகப் பாடல் போட்டி



## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.எச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்



## Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்

Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....

சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.

அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38

- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஐரோஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி 4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி 4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75

Solo Movies GmbH · Aminu Travels · S.K.TRADING GMBH · Sri Sai Enterprise · சிகரம் · Sakthy Jewellery · Ravi Jewellery · Suji Jewellery · AMBAL STORE அம்பாள் ஸ்ரோர்ஸ்

## அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**விமல் விநியோக நிலையம்**
**VIMAL DISTRIBUTION**

1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளலாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
**Photo Bala**
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

## சிறிய விளம்பரங்கள் இப்பகுதியில் எதிர்பார்க்கப் படுகின்றன.

## Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39

## RESTAURANT ROYAL TANDOURI

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

## RESTAURANT ROYALTANDOURI

100 பேருக்குட்பட்ட கொண்டாட்டங்களுக்கு குளிரூட்டப்பட்ட மண்டபம் ஒழுங்கு செய்து தரப்படும்
*Métro: Bellville*
தொடர்புகளுக்கு:
01 43 14 67 49
06 64 00 66 62
06 10 59 37 44

## பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி! உங்கள் பற்களில் பிரச்சினையா?



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52

என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

## EUROCONSULT SARL TRADUCTIONS

## மொழி பெயர்ப்பு நிலையம்

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

## த மி ழ் ம க் க ளி ன் அ றி வு க் க ள ஞ் சி ய மா ய் . . .

# பூபாளம் பொத்தகசாலை

தாயக வெளியீடுகள்,
அரசியல், கவிதை,
அறிவியல், சார்ந்த நூல்களுக்கு.....




## விற்பனையில்...

01) நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் (சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)
02) தமிழ்ப்பெயர்க் கையேடு (மக்கட்பெயர் - 46, 000)

இவற்றுடன் மேலும் பல புத்தகங்கள்......


**22, Rue Perdonnet,
75010 Paris,
France.
Tél: 01 40 05 95 15**



# அழகின் அனுபவம்

கணத்தில் வாழும்போது வாழ்க்கை மாசில்லா வாழ்க்கையாக அமையும். இறந்த காலம் இல்லாமல் வாழ்வது என்பதுதான் மாசின்மை(Ignorance) ஆகும். முடிவுகள் இல்லாமல் வாழ்வது மாசின்மையாகும். அறியாத நிலையில் செயற்படுவது கேடின்மையாகும். இறந்தகாலச் சுமையின் பாரமெதுவும் இல்லாத பேராற்றல் வாய்ந்த அமைதியில் - அசைவின்மையில் வாழுதல்தான் பேரானந்தம். இத்தகைய வாழ்க்கை அனுபவமே ஒரு தனி அழகு.

உதிக்கும் சூரியனில், மின்னும் நட்சத்திரங்களில், மலரும் பூக்களில், பறக்கும் பறவைகளில் அசைந்தாடும் கொப்புகளில், காற்று வீசும் இலைகளில், பொங்கியெழும் அலைகளில் என்று எதிலும் எங்கும் எப்பொழுதும் அழகைக்காண நேரிட்டால் அச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது மிகவும் கவனமாக உற்றுப்பார்க்கவேண்டும். அப்படிச் செய்யும்போது மனத்தின் செயற்பாடில்லாமல், எவ்வித முடிவும் இல்லாமல், வெறுமனே தானாகவே, தன்னியல்பாகவே மனத்தின் உதவி இல்லாமல் செயற்படுகின்றோமா என்பதை அவதானிக்கத் தவறக்கூடாது. நாம் இறந்த காலத்திலிருந்து துண்டிக்கப்படும்போது தானாகவே எதிர்காலத்திலிருந்தும் துண்டிக்கப்படுகின்றோம். ஏனெனில் இறந்தகாலமும் எதிர்காலமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவையாகும். அவை வெவ்வேறானவையல்ல. அவை தனியாகப் பிரிக்கக்கூடியவையும் அல்ல. எதிர்காலத்தில் இறந்தகாலமும், இறந்த காலத்தில் எதிர்காலமும் மறைந்தே இருக்கும்.



மனம் என்னும் நாணயத்தின் இரு பக்கங்கள் தான் இறந்தகாலமும் எதிர்காலமும் ஆகும். அந்த `மனம்' என்ற நாணயத்தை நாம் கீழே போடும் அக்கணமே நாம் யார் என்ற அறிவும், அந்த அறிவால் எம்மைப்பற்றி நிற்கும் எம்மைப் பற்றிய அடையாளங்கள் யாவும், முற்றாக அற்றுப்போகும். அக்கணத்தில் `உள்ளதாயிருத்தலே யான்' என்ற விழிப்புணர்வு ஏற்படும் இக்கணத்தில்தான் உள்ளதாயிருத்தல்கள் இரண்டின் சங்கமம் நிகழ்சின்றது. ஒன்று சிறியது. மற்றது வரம்பற்றது. சின்னதாக இருக்கும் உள்ளதாயிருத்தல் மனிதனுடையதது. மற்றது காலத்தின் வரம்பற்று, அளவிடமுடியாத, என்றுமே உள்ளதாயிருத்தலாகும். இவ்விரண்டின் சங்கமம்தான் அழகின் அனுபவமாகும்.

மாசின்மை தான் உட்பிரவேசிக்கும் கதவாகும். இக்கதவினூடாகவே ஒருவர் அழகுக்குள் பிரவேசிக்கமுடியும். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவர் மாசற்றவராக (ைைெழஉநவெ) இருக்கின்றாரோ அவ்வளவுக்கவ்வளவு அவரது அகத்தின் இருப்பும் அழகாக இருக்கும். ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு அறிவுடையவராக இருக்கின்றாரோ அவ்வளவுக்கவ்வளவு அவரது இருப்பு அசிங்கமானதாய் இருக்கும். அறிவிலிருந்து அறிந்ததிலிருந்து, கொள்கைகளிலிருந்து, நம்பிக்கைகளிலிருந்து, நாம் வகுத்த பிரிவினைகளிலிருந்து, நாம் கண்ட முடிபுகளிலிருந்து செயற்படச் செயற்பட எமது இருப்பையும் அசிங்கப்படுத்திக்கொண்டே இருக்கின்றோம். எமது அழகின் தரிசனத்தின்போது எக்கணம் எமது அறிவானது எம்முள் குறுக்கிடுகிறதோ, அக்கணமே நாம் முழு அழகின் தரிசனத்தையும் இழந்து விடுகின்றோம். எக்கணத்தில் நாம் அறிகின்றோமோ அல்லது நாம் அறிந்திருக்கின்றோமென எண்ணுகின்றோமோ அக்கணமே எங்களுக்கும் உள்ளத்திற்கும் இடையே ஒரு தடையை -வேலியை நாமே உருவாக்கி விடுகின்றோம். அதன் பின்பு அனைத்துமே திரிபுபடுகின்றன. இத்திரிபின் விளைவாக நாங்கள் எங்கள் காதுகளால் கேட்கமாட்டோம். கண்களால் பார்க்கமாட்டோம். இவற்றிற்குப் பதிலாகக் கேட்பனவற்றையும் பார்ப்பனவற்றையும் பற்றி வியாக்கியானங்களும் விளக்கங்களும் கொடுக்கவே முனைவோம். இந்த முனைப்புக்களின் விளைவாக நாங்கள் எங்களது இதயத்தால் அனுபவிக்கவேண்டியவற்றை அனுபவிக்காமல், ஏதோ ஓர் அனுபவத்தை அனுபவிப்பதாக எண்ணிக்கொள்கின்றோம்.

இந்நிலையில், முன்பு நாங்கள் கண்ட சங்கமம் தனது உடனடிச் செயலாற்றும் தன்மையை இழக்கிறது. இதனால் நாங்கள் அப்பால் சென்று விழுகின்றோம். இதுதான் முதற்பாவம். ஆதாமும், ஏவாளும் அறிவுக் கனியைச் சாப்பிட்ட முழுக்கதையுமே இதுதான். விவிலியக் கதைப்படி, அவர்கள் இருவரும் கடவுளால் தடுக்கப்பட்ட - விலக்கப்பட்ட அறிவுக் கனியை உண்ட பின்னர் அதாவது அவர்கள் அறிவைப் பெற்ற பின்னர் சுவர்க்கத்திலிருந்து ஓட்டப்படுகின்றார்கள். அவர்களை சுவர்க்கத்திலிருந்து வெளியேறும்படி ஒருவர் தானும் கட்டளையிடவில்லை. இனிமேலும் தாங்கள் மாசு அற்றவர்கள் அல்ல என்றும், தாங்கள் இருப்பிலிருந்தும் வேறுபட்டவர்கள் என்றும், தாங்கள் `தான்' என்னும் முனைப்பு உடையவர்கள் என்றும் அறிந்தே வெளியேறுகிறார்கள். `அறிதல்' என்பதே அத்தகைய தடையை உருவாக்குகிறது. அத்தகைய தடையாகிய அறிவை வெளியேற்றுவதே மாசற்றமையாகும். சாப்பிட்ட அறிவு மரத்தின் கனி வெளியே வாந்தியெடுத்துத் துப்பப்படவேண்டியது. தியானமும் இதையே செய்கிறது. தியானமானது அறிவை எமது உளவியல் முறைமையிலிருந்து வெளியேற்றுகிறது.

அறிவானது எமது உளவியற் தூய்மையை -மாசின்மையைக் கெடுக்கக்கூடிய பொல்லாத மாசு. எனவே எமது அகத்தூய்மையை, மாசின்மையைக் கெடுக்கக்கூடிய அறிவை நீக்கியே வாழவேண்டும். அதுவே தூய வாழ்க்கையாகும். `எனக்கு ஒன்றுமே தெரியாது' என்ற தெளிவிலேயே அழகை எம்மால் உணரமுடியும். அறிவின் ஆதிக்கத்தில் இருந்து நாம் விடுபடும் போதே முற்றுமுழுதான ஒரு வித்தியாசமான பரிமாணம் கொண்ட பண்பு எங்களுக்குள் உட்பிரவேசிக்கிறது.

இந்நிலையிலேயே நாம் உளவியல் ரீதியாகக் கணத்துக்குக் கணம் செத்துச் செத்து, மீண்டும் மீண்டும் குழந்தையாகப் பிறக்கின்றோம். இதுவே மறுபிறப்பு. இதுவே உயிர்த்தெழுதல். அறியப்படாத மாசற்ற தன்மையைக் கொண்ட அக்கணத்தில், காண்பானும் காணும் பொருளும் என்ற வித்தியாசம் மறைந்து போகிறது. இந்நிலையில் யாம் பார்ப்பனவிலிருந்தும் கேட்பனவிலிருந்தும் வேறுபடமாட்டோம்.

****




கந்தையா நவரேந்திரன்



## எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

# லெப் - வில்லவன்

காற்றில் அசைந்தாடும் தென்னந்தோப்பும், பல வழியில் பயன்தரும் பனைமரங்களும். கண்களை கொள்ளை கொள்ளும் அழகு நிறைந்த வயல் வெளிகளும், பளீச்சிடும் மணற்பரப்புக்களும் நிறைந்த யாழ்ப்பாண மண்ணிலே அமைந்த ஊரே அல்லாரை. இவ்வூரிலே சண்முகராசா அழகம்மா தம்பதிகளின் இரண்டாவது செல்வமகனாக 1974ம் ஆண்டு அன்று அவதரித்தான் ஜெகசீலன். இவனை எல்லோரும் செல்லமாக சீலன் என்று அழைத்தார்கள். மழலைப்பருவம் முடிந்து இவன் மாணவப் பருவமடைய, காலம் உருண்டோடியது. மிகவும் சுறுசுறுப்புடைய இவன் தனது கல்வியை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தான். படிப்பிலும், விளையாட்டிலும் கெட்டிக்காரனாக திகழ்ந்தான். தமிழ் மாணவர்கள் கல்வியை தொடர முடியாமலும், சுதந்திர மனிதர்களாய் வாழமுடியாமலும் சிறீலங்கா அராஜகப்படைகள் எம்மின தலைமுறையை அழித்துக்கொண்டிருந்த அந்தக்காலத்தில்தான் சீலன் தன் குடும்பத்தில் எவ்வளவு நேசம் வைத்திருந்தானோ அதைவிடப்பலமடங்கு தாய் மண்ணின் மேல் பாசத்தை வைத்து நேசித்தான். எதிரிகளின் கொடுமையால் எம் உறவுகள் சிந்திய குருதியில் தமிழ் ஈழமண் சிவந்தது கண்டு சினங்கொண்ட புலியாக சீறியெழுந்தான். சீலன். ஊர்வாழ உயிர்பூச்சொரியும் வீர புருஷர்கள் வரிசையில் இவனும் அணிவகுத்து கரிகாலன் குழந்தையாய் களம் நோக்கி விரைந்திட பயிற்சிப் பாசறை புகுந்தான்.

பொறி கக்கும் விழியுடன் புறப்பட்ட சீலன் புலிவேங்கையாக வில்லவன் என்றும் புதுப்பெயர் சூடி விடுதலைப் பரணியெழுத பயிற்சிகள் பெற்றான். அன்னை மண் காக்க விளைந்த வில்லவன் பயிற்சியைக் கூட மகிழ்வோடு பெற்றான். தோழர்களோடு அன்பாக பழகி அன்னையின் தேசம் காக்க அயராது உழைத்தான். பயிற்சியை முடித்து எதிரியின் பாசறை செல்ல வில்லவன் அன்று தலைவரின் கட்டளைக்காக காத்துக்கிடந்தான் வழிமேல் விழிவைத்து. எதிரியின் வரவுக்காய் காத்திருந்தவனுக்கு கட்டளை கிடைத்தது. எதிரிகளை களத்திலே சந்தித்து விடுதலைப் புலிகளின் வீரத்தைக் காட்டினான்.

வில்லவன் என்றாலே அவனுக்கு நிகர் அவனே. வெயில் மழை இவன் அன்புத் தோழர்கள். இயற்கையின் கொடையை இரசிப்பது முதல், அதன் சுகத்தில் நனைவது கூட இவனுக்குப் பிரியம்... தனது கையிலே தவழும் சுடுகுழலை உயிரை விடவும் உயர்வாய் நேசித்தான். மாவீரர் தந்திட்ட மகத்தான விடுதலைக் கவசம் என்பான். ஆயுதத்தை அன்போடு காத்து எதிரிகளுக்கு எம் வீரம் கற்பித்தான் வில்லவன். வவுனியா நகரிலே றம்பைக்குள ஊரிலே எதிரியின் கொடுமையை அழித்து எம்மினம் காத்திட செங்கோலோச்சினான், செந்தமிழ் வீரனாய் வில்லவன். விடுதலைப்போரிலே பௌத்த வழி வந்த வல்லாதிக்கப்படைகளை அழித்து எம் மண்காத்திட தொடுத்திட்ட போரிலே, வெற்றிகள் பெற்றுதந்து சாதனை படைத்திட்ட சத்திய சீலனனான். தர்மத்தின் வழி வந்த தர்ம சீலனாய் உலகம் போற்றும் எம்மீழ மாவீரர் வரிசையிலே லெப் வில்லவனாய் 29.03.95 அன்று விழிமூடிக் கொண்டான்.

தமிழீழ விடிவிளக்காய் தாய்நிலத்து காவலனாய் விழி மூடிக்கொண்ட வில்லவனே எங்கள் சுந்தரத் தமிழீழத்தின் சுதந்திர வாழ்விற்காய் கண்ணைக்காக்கும் இமை மடல் போல் மக்களைக் காக்கும் புலிமறவர் சேனையாய் உன் கனவு சுமந்து விடுதலைப் புலிகள் தமிழீழம் விடிகின்ற திசை நோக்கி விரைகின்ற வேளையிலே, உன் உடன் பிறப்பும் அதில் ஒருத்தி, உறங்காத வீராங்கனையாய்... உன் எண்ணம் நிறைவேற்ற நிம்மதியாய் நீ உறங்கு தமிழீழ தொட்டிலிலே.

- ஈழமலர் (தலைமைச்செயலகப் போராளி)



## புத்திசிகாமணி பதில்கள்

## ? கிழக்கில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள் பாவா, யோகா ஆகியோர் கொல்லப்பட்ட பின்னரும் புலிகள் உச்சப் பொறுமையைக் கடைப்பிடிப்பது ஏன்?

க. திருச்செல்வம் – பொபினி, பிரான்ஸ்.

**! விடுதலைப்புலிகள் உச்சப் பொறுமையைக் கடைப்பிடித்து வருவதன் மூலமும் அரசுக்கெதிராக ஒரு உச்ச உளவியல் போரை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம்.**

? சீனாவில் நடைபெறவிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டுக்கு இம்முறை இலங்கையில் இருந்து ஜே.வி.பி.க்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது குறித்து உங்கள் கருத்தென்ன?

கு. தவபாலசிங்கம் – பாரிஸ், பிரான்ஸ்.

! எதிர்காலத்தில் இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் அமரக்கூடிய ஒரு வலுவான சக்தியாக ஜே.வி.பியை சீனா கம்யூனிஸ்ட் அரசு இனங்கண்டிருக்கலாம். அந்தவகையில் எதிர்கால நலன் கருதி இந்த அழைப்பை சீனா ஜே.வி.பி.க்கு விடுத்திருக்கலாம்.

? அண்மையில் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் சின்ன பாலா என்பவரின் இறுதிக் கிரியையில் அரசினதும் ஜே.வி.பி.யினதும் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு அச்சம்பவத்தைக் கண்டித்ததுடன் ஜனாதிபதி சந்திரிகாவும் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளாரே. இவருக்கு இந்த முக்கியத்துவம் ஏன்?

க. சிவராஜசிங்கம் – பாரிஸ், பிரான்ஸ்.

! அரசினது செல்லப்பிள்ளையான ஈ.பி.டி.பியின் உறுப்பினராக அவர் இருந்தமை ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இதேவேளை இலங்கையின் மூத்த தமிழ் ஊடகவியலாளராக இருந்த ஜி.நடேசன் நடுவீதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டபோது இந்த அரசாங்கமும் அதன் ஒட்டுண்ணிகளும் மௌனம் காத்தார்களே ஏன். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு தங்களால் துருப்புச் சீட்டுகளாக பாவிக்கப்படும் இத்தகையோரின் மரணங்கள் மட்டும்தான் இவர்களுக்கெல்லாம் கசப்பாக இருக்கிறதா?

? தங்களுடைய பொறுமையைச் சோதிக்க வேண்டாம் என புதிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இரட்னசிறி விக்கிரமநாயக்க விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது குறித்து உங்கள் கருத்தென்ன?

த.சிவகணேசன் – பாரிஸ், பிரான்ஸ்.

! அத்துலத் முதலி தொடங்கி அநுருத்த ரத்வத்தை வரை சிறீலங்காவின் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்கள் எல்லாம் விடுக்காத எச்சரிக்கைகளா என்ன? அந்தப் பாதுகாப்பு அமைச்சுக் கதிரையில் அமர்ந்தாலே படையினரை உசுப்பிவிட தமிழ் மக்களை நோக்கி எச்சரிக்கைகள் விடுவதும் சவால்கள் விடுவதும் இவர்களின் வேடிக்கையான வாடிக்கையாய் போய்விட்டது.

? ஜனாதிபதி சந்திரிகா தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை நேரில் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளாரே...?

க.சஞ்சயன் – சூரிச், சுவிஸ்.

! தற்போதைய சூழலில், முதுகெலும்பில்லாத ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் அநாகரிகமான ஆசை இது என்று சொல்லலாம்.

? சிறீலங்காவின் புலனாய்வுத்துறையும் கைக்கூலிகளும் இணைந்து மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட புலிகளின் மூத்த உறுப்பினர் பாவாவின் இழப்பு அம்பாறை தமிழ் மக்களுக்கு பேரிழப்பல்லவா?

க.கனகேந்திரன் –பாரிஸ், பிரான்ஸ்.

! நிச்சயமாக! அம்பாறை மாவட்ட தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவருமே பாவாவின் இழப்பால் அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளனர். 18 வருடங்களுக்கு மேலாக விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து வந்த பாவா, அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒரு உறவுப்பாலமாக இருந்து அரும்பணியாற்றியவர். அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் தலைவர் இவரின் மரணத்திற்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளதுடன் பெரும்பாலான முஸ்லிம் மக்களும் இவருக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அனைவரின் மனங்களிலும் நிறைந்துவிட்ட இந்த இரண்டு மாமனிதர்களின் உயிர்களைத்தான் கொலையாளர்கள் பறிக்க முடியும். அவர்களின் இலட்சியங்களை எவராலுமே அழித்துவிட முடியாது.

? தமிழ்மொழி மிக அழகாகவும், ஆழமாகவும் இருப்பதாக சிறீலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே?

த. ரட்ணசிங்கம் – பாரிஸ், பிரான்ஸ்.

! இதைத் தெரிந்துகொள்ள பிரதமருக்கு இவ்வளவு காலம் எடுத்துள்ளதா?
கொழும்பு சாகிராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுதான் பிரதமர் தமிழ் மொழியைப் புகழ்ந்திருந்தார். அது அவருடைய இதயத்திலிருந்து வந்ததா என்பதை அவரது எதிர்கால நடவடிக்கைகள்தான் வெளிப்படுத்தும்.

? வடகிழக்கில் சடுதியாக நடைபெற்றிருக்கும் இராணுவ அதிகாரிகள், தளபதிகளின் மாற்றங்களும் நிலைமைகளும் எதனை வெளிப்படுத்துகின்றன?

த.கமலநாதன் – பொண்டி, பிரான்ஸ்.

! அரசு, திரைமறைவில் ஒரு யுத்த முன்எடுப்பிற்கான அனைத்துத் தயாரிப்புகளிலும் ஈடுபட்டு வருகிறது என்பதையே இந்த இராணுவ இடமாற்றங்கள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் சிறீலங்காவின் புலனாய்வுத்துறையின் தொடர்ச்சியான செயற்பாடுகள் அவர்கள் முன்கூட்டியே போரை தொடங்கிவிட்டார்கள் என்பதைத்தான் புலப்படுத்துகின்றன.

? சிறீலங்காவில் தற்போது நடைமுறையில் இருக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழித்து பழைய தேர்தல் முறையைக் கொண்டுவருவதற்கான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றினை நடாத்துவதற்கு அரசு ஆலோசித்து வருவதாக சொல்லப்படுகிறதே?

காந்தகுமார் – பாசல், சுவிஸ்

! எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான். ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் அதிகாரமுடையவராக திகழ்வதற்கு தற்போது இருக்கின்ற ஒரேவழி தேர்தல் முறையை மாற்றியமைப்பதுதான். ஆனால், அது எவ்வளவிற்கு சாத்தியமானது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. தனது அதிகாரத்தை பயன்படுத்தி சர்வசன வாக்கெடுப்பொன்றை தனது பதவிக்காலத்திற்குள் நடாத்தி முடிக்க ஜனாதிபதி சந்திரிகா முயல்வதற்கான சாத்தியங்கள் "நிறையவே" உண்டு.

# மரண அறிவித்தல்





**மறைவு**

**05.09.2004**

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஜேர்மனி(Lauterecken)ல் வசித்து வந்தவருமாகிய கனகசபை மகேந்திரராஜா 05.09.2004 ஞாயிறு அன்று ஜேர்மனியில் காலமானார்.அன்னார் காலஞ்சென்ற கனகசபை தங்கம்மா(கனடா) ஆகியோரின் அன்பு மகனும் காலம்சென்றவர்களான சிவசம்பு புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் கமலறஞ்சினியின் அன்புக் கணவரும் துஷிந்தா, நிஷிந்தாவின் பாசமிகு தந்தையும் கனகரத்தினம் நாகம்மா(ஜேர்மனி), நல்லையா தையல்முத்து, சண்முகநாதன் இந்திராணி, சபாரத்தினம் மனோன்மணி ஆகியோரின் பெறாமகனும காலம்சென்ற சண்முகநாதன் அன்னம்மா (இலங்கை), நீலாம்பாள் இலகுப்பிள்ளை, நாகமுத்து பொன்னையா, கனகம்மா பொன்னம்பலம், நாயகப்பிள்ளை ஐயாத்துரை ஆகியோரின் மருமகனும் செல்வராஜா (சுவிஸ்), செல்வராணி (கனடா), சிறிகாந்தன் (சுவிஸ்), பத்மா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும புஸ்பராணி (இலங்கை), சிவநேசன் (பிரான்ஸ்), கந்தசாமி (இலங்கை), சிறிசேகரன் (ஜேர்மனி), மனுமேலா (சுவிஸ்), அன்னைமேரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் மனோகரன்(பிரான்ஸ்), இந்திரகலா (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), தர்மினி(இலங்கை) சதீஸ்கரன் (ஜேர்மனி), வசீகரன் (ஜேர்மனி), பாஸ்கரன் (இலங்கை) ஆகியோரின் மச்சானும் சுந்தரலிங்கம் (இலங்கை), பிறேமசாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் சகலரும், அகிலன் (இலங்கை), சுதர்சன் (இலண்டன்), சர்மிளா, சற்சொரூபன் (இலங்கை) ஆகியோரின் சிறியதந்தையும், பிளாவியா, சப்பிறினா, மிக்கேல்(சுவிஸ்) ஆகியோரின் பெரியதந்தையும ஜெகதீசன், சயந்தன்(கனடா), யவிதா, பிரதிகா,சர்மினி கர்சன் (பிரான்ஸ்) மயூரன், கார்த்திகா, நிர்ஷிகா, பிரஷாந்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 08.09.2004 அன்று 2 மணிக்கு Friedhof ல் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**திரு கனகசபை மகேந்திரராஜா**

தகவல்: மனைவி, பிள்ளைகள்
தொலைபேசி: 06382 -993870 (ஜேர்மனி)

**Bergstr 7**
**67742 Lauterecken Germany**

தொடர்புகளுக்கு:
ராணி: 001416 2673644(கனடா)
செல்வராஜா: 0041 344228473(சுவிஸ்)
சிறிகாந்தன்: 0041 344312689(சுவிஸ்)

# பிரான்ஸ் பாடசாலைகளில் மத அடையாளங்களுக்கு தடைவிதிக்கும் சட்டம் அமுலுக்கு வந்தது

பிரான்சின் அரசு பாடசாலைகளில் முஸ்லிம் பெண்கள் அணியும் முக்காடுகள் உள்ளிட்டு வெளிப்படையான மதச் அடையாளங்களை அணிவதைத் தடைச் செய்யும் சட்டம் கடந்த வியாழன் முதல் அமுலுக்கு வந்துள்ளது. கோடைக்கால விடுமுறை முடிந்து பாடசாலைகள் மீண்டும் துவங்கியுள்ள நிலையில், இப்புதிய சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. பெரும்பான்மையான மாணவர்கள் இச்சட்டத்திற்கு ஏற்ப உடையணிந்து பாடசாலை வந்திருந்தார்கள். இதுஇவ்வாறிருக்க, இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என கோரிக்கைவிடுத்து பிரஞ்சு பத்திரிகையாளர்கள் இருவரை ஈராக் தீவிரவாதிகள் கடத்திவைத்துள்ளனர். இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள பிரஞ்சு அரசு, பணயக்கைதிகளின் விடுதலைக்கான முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளது. இதேவேளை, இவர்களின் விடுதலைக்காக முயன்றுவரும் பிரான்ஸ் முஸ்லிம் அமைப்பொன்று, ஈராக் தலைநகர் பாக்தாத் சென்று பேச்சுக்களை நடத்தியுள்ளது. அத்துடன், பத்திரிகையாளர்கள் உயிருடனும் நல்ல நிலையிலும் இருக்கிறார்கள் என்பதற்கு தங்களுக்கு ஆதாரங்கள் காட்டப்பட்டதாக, பாக்தாத்தில் பேச்சு நடத்திய பிறகு கூறியுள்ளனர்.


ஈராக் தீவிரவாதிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட 2 பிரெஞ்சு நிருபர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பணயக் கைதிகளாக இருக்கும் அவர்களை சன்னி தீவிரவாதிகளிடம் கடத்தல்காரர்கள் ஒப்படைத்தனர். பிரெஞ்சு நிருபர்கள் கிறிஸ்டியன் செஸ்நோட், ஜார்ஜஸ் மால் புருனாட் ஆகியோர் செய்தி சேகரிப்பதற்காக ஈராக் சென்றனர். அவர்களை கடந்த 20ம் திகதி, `இஸ்லாமிக் இராணுவம்' என்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் கடத்திச்சென்றனர்.

இந்த நிலையில் பிரெஞ்சு நிருபர்களைக் கடத்திய இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாதிகள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு தீவிரவாதிகள் பிரெஞ்சு நிருபர்களை தொடர்ந்து பணயக் கைதிகளாக வைத்திருக்க விரும்புகிறார்கள். `இஸ்லாமிய இராணுவம்' குழுவில் உள்ள ஈராக்கியர்கள் பிரெஞ்சு நிருபர்களை விடுவிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். இதனால் பணயக் கைதிகளை ஈராக்கிய சன்னி முஸ்லிம் தீவிரவாதக் குழுவிடம் கடத்தல்காரர்கள் ஒப்படைத்தனர். அவர்கள் பிரெஞ்சு நிருபர்களை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர். எனவே 48 மணி நேரத்தில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். இந்தத் தகவலை சிறைப்பிடிக்கப்பட்ட பிரெஞ்சு நிருபர்களில் ஒருவர் பணியாற்றும் பி பிகரோ பத்திரிகையின் ஆசிரியர் ஜீன் டி பெலாட் தெரிவித்தார்.




இதுஇவ்வாறிருக்க, ஈராக்கிய அதிபர் காசி அல் யாவார் பிரான்சுக்கான தனது பயணத்தை ஒரு வாரத்திற்கு ஒத்திப்போட்டிருக்கிறார் என்றும், ஈராக்கில் பிரஞ்சுப் பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டிருப்பதே இதற்கு காரணம் என்று பிரஞ்சு வெளியுறவுத் துறை அறிவித்திருக்கிறது. ஈராக்கிய பிரதமர் அய்யத் அல்லாவி ஒரு பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், பிரான்சு பயங்கரவாதிகளிடம் தீவிரத்தைக் காட்டுவதில்லை என்று கூறியதைத் தொடந்து அதிபரின் பயணம் தள்ளிப்போயுள்ளது. அல்லாவியின் கருத்துகள் ஏற்புடையவை அல்ல என பிரஞ்சு அரசு கூறியுள்ளது.




பணயக் கைதிகளாக்கப்பட்டுள்ள பிரான்சின் இரு பத்திரிகையாளர்கள்


பிரான்ஸ் இஸ்லாமிய அமைப்புக்களின் இரு தலைவர்கள், பக்தாத்தில் உள்ள உம் அல் குவாரா பள்ளிவாசலில் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.


# இயற்கையை வெல்லும் மனிதர்கள்....

## வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட மண்ணில் இருந்து சில மாறுபட்ட காட்சிகள்...

பிலிப்பைன்ஸ் நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த வாரம் ஐந்து நாட்களாக இடைவிடாது பெய்த கடும் மழையினால் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 1.3 மில்லியன் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர். 1970ம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற இந்த பாரிய இயற்கை அனர்த்தத்தினால் 50ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். பலர் தமது வீடு, வாசல், சொத்துக்களை இழந்துள்ளனர். வெள்ளம் பெருகியோடும் நிலையில் அப்பகுதிக்கு விஜயம் செய்த, பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபர் குளோரியா அரோயோ அம்மையார் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து (முத்தமிடாமல்) ஆறுதல் சொன்னார்.


மழை வந்தால் மதுவை மறந்துவிட முடியுமா..? திட்டமிட்டபடி நடக்கிறது "பார்ட்டி"


காட்டாறே வந்தாலும் நாங்கள் கலங்க மாட்டோம். 'காட்ஸ்'சே எங்கள் மூச்சு.


கடலே வீடு தேடி வந்ததே...! வலை வீசும் சிறுவர்கள்.


வாழ்வதற்கு இப்படியும்? போராட வேண்டியிருக்குமோ..? மூச்சைப் பிடித்தபடி சுமந்துசெல்லும் தந்தையின் தோள்களில் உட்கார்ந்திருக்கும் மகன்.


ஹாய்... நல்லாயிருக்கிறீர்களா..? வெள்ளப் பகுதியைப் பார்வையிடும் அதிபர் குளோரியா அரோயோ.

# ஒலிம்பிக் – 2004

## ஒலிம்பிக்கில் சாதனை படைத்த சீன வீரர்களுக்கு விமான நிலையத்தில் இராணுவ அணிவகுப்புடன் செங்கம்பள வரவேற்பு

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் சாதித்த சீன வீர, வீராங்கனைகள் கடந்த வாரம் பீஜிங் திரும்பியபோது அவர்களுக்கு விமான நிலையத்தில் இராணுவ பாண்ட் வாத்தியங்கள் முழங்க செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இம்முறை ஒலிம்பிக்கில் சீனக் குழுவினர் அற்புதமாகச் செயல்பட்டனர்.



அமெரிக்காவுக்கு `செக்' வைத்த இவர்கள் தடகளத்தில் கூட ஆதிக்கம் செலுத்தினர். 32 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் பெற்ற சீனா, பதக்கப் பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்து இரண்டாவது இடம் பிடித்தது. ஒலிம்பிக் வரலாற்றில் இதுதான் முதற் தடவை.

கடந்தவாரம் ஏதென்ஸில் இருந்து 245 பேர் கொண்ட சீன குழுவினர் விசேட விமானம் மூலம் தலைநகர் பீஜிங் வந்தனர். முதலில் குழுவின் தலைவர் யுவான் வெய்மின் இறங்கினார். இவரைத் தொடர்ந்து வீர, வீராங்கனைகள் விமானத்தில் இருந்து இறங்க இரசிகர்கள் கரகோசம் எழுப்பி உற்சாக வரவேற்பளித்தனர். இராணுவ பாண்ட் வாத்தியங்கள் இசைக்க, செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. மூத்த கம்யூனிசத் தலைவர் சாங் சன் அனைவரையும் வரவேற்றார். பீஜிங் மேயர் வாங் கிஷ்ன் மலர்க் கொத்து கொடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

வீரர்களிடம் 'ஆட்டோகிராப்` வாங்கவும் கடும் போட்டி காணப்பட்டது. 20 தங்கம் எதிர்பார்த்த சீனா 32 தங்கப் பதக்கங்களை வென்று, சாதித்துள்ளது. இப்போதுதான் எங்களது ஒலிம்பிக் கனவு நனவாகியுள்ளது என்றார் குழுவின் தலைவர் யுவான் வெய்மின். அடுத்த ஒலிம்பிக் போட்டி 2008 இல் சீனத் தலைநகர் பீஜிங்கில் நடக்கிறது. இதற்கான ஒலிம்பிக் கொடி ஏதென்ஸில் வைத்து பீஜிங் மேயர் வாங் கிஷ்னிடம் வழங்கப்பட்டது. இந்த கொடிக்கும் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. முதலில் நான்கு வீரர்கள் ஒலிம்பிக் கொடியை எடுத்து வந்தனர். பின்னர் இது ஏற்றிவைக்கப்பட, எங்கும் மகிழ்ச்சிக் கரகோசம் எழுந்தது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் 110 மீற்றர் தடை ஓட்டத்தில் தங்கம் வென்ற சீன வீரர் லி ஜாங், போட்டி தூரத்தை 12.91 வினாடிகளில் கடந்தார். இதன் மூலம் தடகளத்தில் தங்கம் வெல்லும் முதல் சீன வீரர் என்ற சாதனையை இவர் படைத்தார். 1993 இல் பிரிட்டனின் கொலின் ஜாக்சன் (12.91 வினாடிகள்) நிகழ்த்திய சாதனையை இவர் சமன் செய்தார். இப்படி மகத்தான சாதனை படைத்த நட்சத்திர வீரரான ஜாங்கிற்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. அப்போது அவர் கூறுகையில், `தடகளத்தில் பதக்கம் வென்றது மிகவும் பெருமையாகவுள்ளது. அத்துடன் தான் அமெரிக்கா சென்று பயிற்சி மேற்கொள்ளப் போவதில்லை. தான் அவர்களுக்கு எந்த விதத்திலும் சளைத்தவன் அல்ல. இங்கேயே தொடர்ந்து பயிற்சி மேற்கொள்வேன்' என்றார்.

## தங்கம் வென்றும் தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஹங்கேரி ஒலிம்பிக் வீரர் வழங்குத் தொடர முடிவு

சர்வதேச ஒலிம்பிக் குழு (ஐஓசி) மீது வழக்கு தொடர்வது குறித்து ஆலோசனை செய்து வருவதாக ஒலிம்பிக்கில் தங்கத்தை வென்று, தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஹங்கேரி வீரர் அட்ரியன் அன்னுஸ் தெரிவித்துள்ளார். ஏதென்ஸில் நடைபெற்ற 28வது ஒலிம்பிக் போட்டியில் கடந்த 22ம் திகதி நடைபெற்ற தட்டு எறிதல் போட்டியில், 70.93 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார் அன்னுஸ். ஆனால், அதைத் தொடர்ந்து நடைபெற வேண்டிய ஊக்கமருந்து சோதனையில் அவர் ஈடுபடாமல் ஒலிம்பிக் கிராமத்தை விட்டு வெளியேறினார். இதனால், அவரது பதக்கம் பறிக்கப்படுவதாக ஒலிம்பிக் குழு அறிவித்தது.



இந் நிலையில், புடாபெஸ்ரின் மேற்கே உள்ள ஸோம்பாதெலியில் உள்ளூர் பத்திரிகை நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது:

தட்டு எறிதலில் நான்தான் ஒலிம்பிக் சாம்பியன். அதனால் அந்த பதக்கத்தை நானே வைத்துக் கொண்டுள்ளேன். ஊக்கமருந்து சோதனையில் எனக்கு எதிராக முடிவு மேற்கொள்ளப்பட இருந்ததை பிரசாரம் மூலம் தெரியப்படுத்தவுள்ளேன். இந்த ஒலிம்பிக்குடன் மேற்கொள்ளவிருந்த ஓய்வு முடிவையும் கைவிட்டுள்ளேன். காரணம், இம் மாதிரியான அவப்பெயருடன் ஓய்வு பெறுவதை நான் விரும்பவில்லை.

இதற்கிடையே சர்வதேச ஒலிம்பிக் குழு மேற்கொண்டுள்ள பதக்கம் பறிப்பு முடிவு குறித்து எனக்கு ஆதரவாக வழக்கு தொடர பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அதில் சர்வதேச நிறுவனங்களும் அடங்கும் எனத் தெரிவித்துள்ளார் அன்னுஸ். அன்னுஸ் பெற்ற தங்கப் பதக்கத்தை திரும்பக் கொடுக்குமாறு ஹங்கேரி ஒலிம்பிக் சங்கத்துக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு கடிதம் எழுதியுள்ளது.


## ஒலிவ் இலைக்குள் கிருமிகள் ! விதித்த தடையை நியூசிலாந்து நீக்கியது

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்கள் ஒலிவ் இலை வலையங்களைத் தங்களுடன் கொண்டுவர விதிக்கப்பட்ட தடையை நியூசிலாந்து அரசு நீக்கியுள்ளது. ஏதென்ஸ், ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற நியூசிலாந்து வீரர், வீராங்கனைகளுக்கு சமீபத்தில் ஒரு அதிர்ச்சிச் செய்தி வந்தது. ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வெல்லும் போது சூட்டப்படும் கௌரவமிக்க ஒலிவ் இலை வளையங்களை நாடு திரும்பும் போதும் தங்களுடன் எடுத்து வரக் கூடாது என நியூசிலாந்து அரசு திடீர் தடை விதித்தது. ஒலிவ் இலைகள் மூலம் தொற்று நோய்க் கிருமி அல்லது நுண்ணுயிர்கள் பரவும் வாய்ப்பு இருப்பதால், அவற்றை அனுமதிக்கக் கூடாதென்று நியூசிலாந்து நாட்டு விவசாயத்துறை அமைச்சகத்தின் சிபார்சையடுத்து அந்நாட்டு அரசு இந்த முடிவுக்கு வந்தது.

ஒலிவ் இலைகள் மூலம் நோய்க் கிருமிகள் பரவினால் விலங்குகள், தாவரங்களை அவை பாதித்து அழித்துவிடும். ஆகவே, அவற்றை ஏதென்ஸிலேயே விட்டு விட்டு வர வேண்டும் என்று உத்தரவிட்டது. நியூசிலாந்து அரசின் இந்தத் திடீர் முடிவால், அந்நாட்டு பதக்க வீரர்கள் பெரிதும் கவலையடைந்தனர். அரும்பாடுபட்டுப் பெற்ற ஒலிவ் இலைகளை எப்படிச் சும்மா விட முடியும். தங்கள் அதிருப்தியை அவர்கள் அரசுக்குத் தெரியப்படுத்தினர். இதையடுத்து, அவசர ஆலோசனை நடத்திய நியூசிலாந்து அரசு, ஒலிவ் இலைகளுக்கு விதித்த தடையை விலக்கிக் கொண்டது. பதக்கம் வென்ற வீரர்களின் கோரிக்கையை, ஏற்று நாங்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றோம். தாங்கள் வென்ற ஒலிவ் வளையங்களை வீரர்கள் தாராளமாக எடுத்து வரலாம். அதேசமயம், விமான நிலையத்தில் அவற்றை ஒப்படைத்து விட வேண்டும். `அரசு இந்த இலைகளைத் தீவிரமாகச் சோதித்துக் கிருமிகள் எதுவும் இருந்தால் அவற்றை அழித்து, விட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களில் மீண்டும் சம்பந்தப்பட்ட வீரரிடம் ஒப்படைக்கும்' என்று நியூசிலாந்து விவசாயத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

## மனநோயாளியால் தங்கப்பதக்கத்தை இழந்த பிரேசில்

ஏதென்ஸ் ஒலிம்பிக் மரதன் முடிவை மாற்ற இயலாது என சர்வதேச தடகள கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கடைசிப் போட்டியாக ஆண்களுக்கான மரதன் ஓட்டம் ஆக.29 இல் நடந்தது. இதில் பிறேசில் வீரர் வாண்டர் லிய் லிமா முதல் நபராக ஓடிக் கொண்டிருந்தார். அப்போது கிரேக்க பாரம்பரிய உடை அணிந்த ஒருவர் இடையில் புகுந்து லிமாவைப் பிடித்துத் தள்ளியதோடு தாக்கினார். இந்த சம்பவத்தால் நிலைகுலைந்து போன லிமா மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. இவரைத் தாக்கியவர் அயர்லாந்தைச் சேர்ந்த முன்னாள் பாதிரியார் கார்னிலியஸ் ஹோரன் என்று தெரிய வந்தது. மனநிலை சரியில்லாத இவருக்கு ஒரு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது.



இதற்கிடையே மரதன் வீரர்களுக்கு ஏதென்ஸ் ஒலிம்பிக் குழுவினர் போதிய பாதுகாப்பு அளிக்கவில்லை என்று பிறேசில் குற்றம் சாட்டியது. மரதன் போட்டியின் முடிவை எதிர்த்து சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றத்திடம் முறையீடு செய்தது.



இது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் குழுவின் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், இந்தச் சம்பவம் மிகுந்த கவலை அளிக்கிறது. ஒலிம்பிக் உணர்வுகளை மதித்து செயல்பட்ட லிமாவுக்கு உயரிய கௌரவம் அளிக்கப்பட்டது. நிறைவு விழாவின் போது இவருக்கு நவீன ஒலிம்பிக்கின் தந்தையான டி கூபர்ட்டின் நினைவுப் பதக்கம் அளித்து உற்சாகப்படுத்தினோம். ஆனாலும் மரதன் முடிவை மாற்றுவது கடினம் என்றார். சர்வதேச தடகள கூட்டமைப்பும் மரதன் முடிவை மாற்றி அமைக்க வாய்ப்பில்லை என்று விளக்கம் அளித்துள்ளது.



இதேவேளை, ஒலிம்பிக்கில் மரதனில் வெண்கலம் வென்ற பிரேசில் வீரர் வான்டர்லே டி லிமாவுக்கு பிரேசில் மக்கள் அமோக வரவேற்பளித்து கௌரவித்துள்ளனர். தாக்குதலில் இருந்து விடுபட்டு இவர் ஓட முயற்சிக்கும் போது, இத்தாலியைச் சேர்ந்த ஸ்டெபானோ பால்டினியும், அமெரிக்காவின் மெப் கெப்லசிகியும் முந்திச் சென்று விட்டனர். இவர்கள் முறையே தங்கத்தையும், வெள்ளியையும் தட்டிச் செல்ல லிமாவுக்கு வெண்கலமே கிடைத்தது. இந் நிலையில் ஏதென்ஸிலிருந்து பிரேஸில் திரும்பினார் லிமா. இவருக்கு சாயோ பாலோ விமான நிலையத்தில் இரசிகர்கள் அமோகமான வரவேற்பளித்தனர். திரும்பிய பக்கம் எல்லாம் நீங்கள் வென்றது வெண்கலம் அல்ல, தங்கம் தான் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர். மக்களின் அன்பு மழையில் நனைந்த லிமா பின்னர் அளித்த பேட்டியில், `கிரேக்க கடவுளும், ஒலிம்பிக் கடவுளும் என் பக்கம் இருந்தனர். அதனால்தான் எனது பதக்க வாய்ப்பு பறிக்கப்படவில்லை. எனது திறமையை மீண்டும் நிரூபிக்க ஒரு வாய்ப்பு அமையும்' என்று அமைதியாகக் கூறினார்.

# மூன்று மாதங்களில்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

துடன், இந்த நிலையில் இதனை மீளமைக்கக்கூடிய வலிமை ஐக்கிய தேசிய கட்சிக்கே இருப்பதாக குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்கால நிர்வாக யோசனையை மையமாகக் கொண்டு சமாதான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்காவிட்டால் நாடு பாரிய சிக்கலுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, இதற்கு எதிர்மாறாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று கருத்துத் தெரிவித்திருந்துள்ளார். அவர், விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் இதயசுத்தியுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க ஜனாதிபதி முன்வந்தால் அதனை முன்கொண்டு செல்வதற்கு முழு அளவில் ஒத்துழைப்பு நல்குவதற்குத் தயாராக இருப்பதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பு யோசனையை ஜனாதிபதி சந்தேகக் கண்கொண்டு நோக்கியிருப்பது கவலையளிப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவிதமான உள்நோக்கத்தையும் வைத்துக் கொண்டு இதனைத் தெரிவிக்கவில்லையெனவும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் இந்த நிலைப்பாட்டை முன்னாள் அமைச்சரும், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டொக்டர் ராஜித சேனாரத்ன வெளியிட்டிருக்கின்றார்.

சமாதானப் பேச்சுகள் தொடர்ந்து பின்தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதால் அச்சச் சூழ்நிலை அதிகரித்துக் கொண்டு போகிறது. அச்சுறுத்தல்களும் கூடிக் கொண்டு வருகின்றன. காலம் கடத்தாமல் பேச்சுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளின் இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுகளை ஆரம்பிக்க ஜனாதிபதி இதயசுத்தியுடன் முன் வர வேண்டும். அதற்காக அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் தேவைப்பட்டால் அந்த ஒத்துழைப்பை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி இன்றும் தயாராகவே இருக்கின்றது.

அடுத்து இரண்டு, மூன்று வாரங்களில் பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடவிருப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். இத்னை நாம் வரவேற்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜனாதிபதியிடமிருந்து அழைப்புக் கிடைத்தால் அதனை உதாசீனம் செய்யாமல் ஏற்றுக் கொண்டு எமது ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம். புலிகளது யோசனை அடிப்படையில் பேசுவதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதான பங்காளியான ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்து வருவதுடன், அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் அறிவித்திருக்கின்றது. ஜனாதிபதி இது குறித்து கவலைப்படவோ, அச்சம் கொள்ளவோ தேவையில்லை.

ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா.வின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கான ஒத்துழைப்பை வழங்கும் விதத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கும் முடிவை ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கிறார்கள். தற்போதைய நிலையில் அரசு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. இனித் தாமதிக்காது பேச்சுகளை ஆரம்பிக்க ஜனாதிபதி முன் வர வேண்டும். ஜே.வி.பி. அதனைக் குழப்ப முயற்சித்து அரசிலிருந்து வெளியேறினால் எதிர்க்கட்சியின் முழுமையான ஆதரவை ஜனாதிபதிக்கு முழுமனதுடன் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

இதனை ஐ.தே.க. எந்தவிதமான உள்நோக்கத்தையும் வைத்துக் கொண்டு அறிவிக்கவில்லை. இதயசுத்தியுடன் தெரிவிக்கின்றோம். நாட்டின் மிகப்பெரிய பிரச்சினையான இனநெருக்கடி விடயத்தில் அரசியல் ஆதாயம் தேடும் கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபடாது. இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மீதோ, அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதோ ஜனாதிபதி சந்தேகக் கண்கொண்டு பார்க்கக் கூடாது.

சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டால் அது முன்கொண்டு செல்லப்படும் காலகட்டத்தில் அரசாங்கத்தைக் கவிழ்க்கக்கூடிய செயற்பாடுகளுக்கு எந்தவிதத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி துணைபோக மாட்டாது என்பதை நாம் ஜனாதிபதிக்கு உறுதிபடத் தெரிவிக்கின்றோம். சமாதான முன்னெடுப்பு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று முழு அளவில் பங்களிப்புச் செய்வதென உறுதி பூண்டிருக்கிறது. இவ்விடயத்தில் யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

சமாதானப் பேச்சுகளை இனி மேலும் தாமதப்படுத்தினால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கான பொறுப்பு ஜனாதிபதியையும், அவரது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசையுமே சாரும் என்பதையும் சொல்லி வைக்கின்றோம், என்று கூறியுள்ளார்.

# குருநகர் — பூநகரி மீனவரிடையே......

(13ம் பக்கத் தொடர்ச்சி)

*கருணாவை இந்த அரசாங்கம்தான் தூக்கிப்பிடித்தது. ஆனால் இந்தக் கருணா அரசாங்கத்துக்கு சேறைப் பூசியிருக்கிறான். விடுதலைப் புலிகள் மட்டக்களப்பை வெற்றிகொள்ளக் கூடிய ஆயுதங்களையோ, படைகளையோ கொண்டு வருவதாக இருந்தால் இந்தக் கடல் வழியாக கொண்டுவந்திருக்க முடியாது. அப்பிடிக் கொண்டுவருவதாக இருந்தால் கடற்படைக்கு இலஞ்சம் கொடுத்ததான் கொண்டுவந்திருக்க முடியும். அதாவது சிறீலங்கா கடற்படைக்கு கரியைப் பூசிப்போட்டு போயிருக்கிறான்.*

*இலஞ்சம் கொடுத்திருப்பமா, கொடுக்கமாட்டமா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்கவேணும். இலஞ்சம் கொடுத்துக் கொண்டுதான் செய்வேணும் என்றில்லை. இலஞ்சம் வாங்கிக்கொண்டு சிறீலங்கா கடற்படை செய்யிறளவுக்கு இல்லை. ஏனென்று சொன்னால் எதிரும் புதிருமாகத்தான் இன்னும் செயற்பாடு தொடருது.*

*சில விடயங்களிலை நாங்கள் மௌனமாக இருக்கிறது எங்களுடைய இயலாமை காரணமாக அல்ல. மௌனமாக இருக்கிறதுக்கு காரணம் என்னவென்று சொன்னால், சில அசைவுகள் பெரிய மோதலுக்கு காரணமான வழிவகைகளை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான். இப்ப நடந்த உணர்ச்சிகளால் ஏற்பட்ட கொந்தளிப்புகள், இன்றையோடு இதோடு முடிந்துபோகும் அத்தியாயமாக இருக்க வேண்டும்.*

# தோல்வியில் முடிவடைந்த.....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இம் மூன்று நடவடிக்கைகளில் 260 பேர் வரை உயிரிழந்ததுடன், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களும் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 155 பேர் குழந்தைகள் மற்றும் கொல்லப்பட்டவர்களில் பெற்றோர், ஆசிரியர்கள், 27 தீவிரவாதிகள், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் அடங்கியுள்ளனர். கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் 10 பேர் அரேபிய நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டள்ளது. ரஷ்யப் படைகளின் தாக்குதலில் 8 தீவிரவாதிகள் பாடசாலைக்குள்ளும், 19 பேர் தப்பியோடி பிற கட்டடங்களில் மறைந்திருந்த போதும் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் தப்பிய கிளர்ச்சியாளர்கள் குழுவை படையினர் கலைத்துச் சென்றவேளை 3 பேர் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் 520 பேர் காயமடைந்திருப்பதாக ரஷ்ய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவர்களில் 218 பேர் பாடசாலைச் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஒரு பெண் உள்பட 3 பேரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதேவேளை, படையினர் பாடசாலை மீது எவ்வித தாக்குதலையும் நடத்துவதற்கு திட்டமிட்டிருக்கவில்லை எனவும் கிளர்ச்சியாளர்கள் வெடிகுண்டுகளைப் பாடசாலைக்குள் வெடிக்கவைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட வேளையிலேயே, தவிர்க்கமுடியாத நிலையில் படையினர் பாடசாலையை நோக்கி முன்னேறியதாக ரஷ்ய அதிபர் புடினின் முக்கிய உதவியாளர்களில் ஒருவரான ஒஸ்லான் பெக் அஷ்லக் கனோவ் தெரிவித்தார்.

# ஆறுமுகம் தொண்டமான்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து கொண்டதையடுத்து வாயடைத்துப் போயுள்ளனர். இன்னும் பலரை எம்முடன் இணைத்துக் கொள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒரு ஜனநாயக நாட்டில் சகல கட்சிகளும் தமது கட்சிகளை சக்தி பெறச் செய்து கட்சியை வளர்த்தெடுக்க பூரண சுதந்திரம் உள்ளது. அந்த அடிப்படையில் ஜே.வி.பி.யினர் தமது கட்சியைச் சக்தி பெறச் செய்து வளர்த்தெடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? என்று சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும், சுற்றுலா அபிவிருத்தி அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார். அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி.யினர் தங்களது கட்சியை சக்தி பெற வைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாக சிலர் கூறுகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்வதைக் கண்டு நான் உண்மையிலேயே பெருமையடைகிறேன் என்று கூறியுள்ளார்.

1956ம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டிக்காத்து நாட்டில் அரசியல் புரட்சியை உண்டு பண்ணிய எனது தந்தையை பிரதமர் பதவியிலிருக்க விடாது 3 மாத காலப் பகுதியிலேயே பிற்போக்குச் சக்தியினர் கொலை செய்தனர். எனது சகோதரியான ஜனாதிபதியின் உயிருக்கு உலை வைக்க முயன்ற பிற்போக்குவாதிகள் அவரது கண்ணைக் கூடப் பறித்தனர் என்றார், எனினும் தனது தமக்கையின் கணவர் குமாரதுங்காவின் உயிரைப் பறித்தவர்கள் குறித்து அநுரா எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இங்கு உரையாற்றிய சிங்கள இனவாத அமைப்பான ஜே.வி.பி.யின் ரில்வின் சில்வா, இ.தொ. காங்கிரஸ் தலைவர் அரசோடு இணைந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். இது பற்றி எமக்குக் கவலையில்லை என்றார்.



காலம் ஆகி வந்த கதை

22

## என் கண்ணல்லவா நீ–2

(19ம் பக்கத் தொடர்ச்சி)

*...நான்கு தரம், ஒன்பது மணிக்கு*
*ரியூசன் முடிய, குமரன்*
*சேரின்ரை மோட்ட*
*சைக்கிளைத் தள்ளி ஸ்ராட்*
*பண்ணச் செய்தேன்.*
*மற்றும்படி, கிருஷ்ணா*
*லொட்ஜிற்கு சென்று சாம்பார்,*
*சம்பல் வைத்து மூன்று தோசை*
*குழைத்துத் தின்பேன். பிறகு*
*பப்ளிக் லைபிறரிக்குப்*
*போய்விடுவேன். அன்று,*
*ஒன்பது மணிக்கு ரியூசன்*
*முடிய கொட்டடியில் இருந்து*
*மெயின்ஸ்றீற்றுக்கு கண்ணாடி*
*எடுக்கப் போனேன்.*
*மெயின்ஸ்றீற்றில் ஏதாவது ஒரு*
*கடையில் சாப்பிடலாம்.*
*மூத்திர ஒழுங்கையால்*
*இறங்கி, முத்தவெளியையும்,*
*முனியப்பர் கோயிலையும்*
*கண்டு, அந்தக் காலையிலேயே*
*வேர்க்கத் தொடங்கினாலும்,*
*பண்ணைக் காத்தை மேலில்*
*தவழவிட்டு, புல்லுக்குளப்பக்கம்*
*திரும்பி, பப்பிளிக்*
*லைபிறறியைப் பார்த்து,*
*முன்னாலை வீணை வாசிக்கிற*
*சரஸ்வதியைக் கண்டு, இரண்டு*
*வருசத்துக்கு முன்னரேயே*
*ஆண்டு ஒன்றாச்சு. நாடு*
*இரண்டாச்சா? என்று*
*கேட்டெழுதியிருக்கிற சுவரைத்*
*தாண்டீட்டு, `கேட்டது தமிழீழம்*
*கிடைத்தது யப்பான் ஜீப்!'*
*என்று வியப்பாய்*
*எழுதியிருக்கிற மதிலையும்*
*தாண்டீட்டு கோர்ட்டடியாலை*
*போனால் மெயின்ஸ்றீற். அந்த*
*றோட்டிலை, சேனாதிராசா*
*கடையிலை, றிசீற்றையும்,*
*நூறுரூபா நோட்டையும்*
*குடுத்து கண்ணாடியை*
*எடுத்தன். சொப்பிங்*
*பாக்குக்கை கொப்பிகளோடை*
*கண்ணாடியை வைச்சன்.*
*திரும்ப அதே வழியாலை*
*வந்தன்.*
*ரியூசனுக்கு இன்னும் நேரம்*
*இருக்கு. பஸ்ராண்டடியிலை*
*டில்கா றேடியோக் கடையிலை*
*முரளி வேலை செய்யிறான்.*
*போயிட்டு போவம். அப்பதான்*
*பாத்தன். சொப்பிங்பாக்*
*அடியிலை ஓட்டையாயிருக்கு.*
*கையை வைச்சுப் பாத்தன்.*
*கண்ணாடியைக் காணேல்லை.*
*திறந்து பாத்தன்.*
*கண்ணாடியைக் காணேல்லை.*
*வடிவாத் தேடியும் பாத்தன்.*
*கண்ணாடியைக் காணேல்லை.*
*காணேல்லைக்*
*கண்ணாடியை!*

(இன்னும் வரும்.)

**உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.**

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில்
பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்ளுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

தொடர்புகளுக்கு: **Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

# உண்மைகளை விளங்கிக் கொள்ளாமல் சர்வதேச சமூகம் வெளியிடும் அறிக்கைகள் சமாதான முயற்சிகளைப் பின்தள்ளும்

## – பிரெஞ்சு ராஜதந்திரிகளிடம் விளக்கம் –

(05.09.04)

உண்மைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் சர்வதேச சமூகத்தினரால் வெளியிடப்படும் பக்கச்சார்பு அறிக்கைகள், தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகளை மேலும் சிக்கலானதாக மாற்றிவிடுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் இலங்கைக்கான பிரான்சின் பிரதித் தூதுவர் கயில் டி மய்சொண் இயூவ், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிரிவுத் தலைவர் ஆகியோரைச் சந்தித்து விளக்கியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பிரான்ஸ் தூதராலயத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் வெளியிட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரமே கொலைகளில் ஈடுபடுவதாக கூறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில், தற்போது இடம்பெற்று வரும் கொலைகளுக்கு இராணுவத்தினரின் உதவியுடன், செயற்படும் ஆயுதக் குழுக்களே முழுக் காரணம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் கொலைகளுக்கு பின்னணியிலுள்ளவர்களைக் கண்டறிந்து அரசாங்கம் தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். கிழக்கில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டு அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்துகின்றது. இதுவே, இன்றைய உண்மை நிலை. மேலும், அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் பேச்சுவார்த்தை தொடர்பாகக் கொண்டுள்ள மாறுபட்ட கருத்துகளால் தோன்றியுள்ள இழுபறி நிலை, மற்றும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியென்பவற்றை மூடி மறைப்பதற்காக இவ்வரசாங்கம் நாட்டில் மீண்டுமோர் யுத்தத்தை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றது. அதற்காக இவ்வாறான ஆயுதக்குழுக்களை மறைமுகமாக பயன்படுத்தி வருகின்றது. இந்த நிலைமையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாத ஐரோப்பிய ஒன்றியமும், சில சர்வதேச அமைப்புகளும் விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. நிலைமைகளைப் புரிந்து கொள்ளாத இவர்கள் பக்கச்சார்புடன் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பக்கச் சார்புடன் வெளியிடப்பட்ட இவ்வறிக்கைகளை நாம் நிராகரிக்கின்றோம். இவை பேச்சுகளைப் பின்தள்ளும். மக்கள் விடுதலை முன்னணியினரே இன்று பேச்சுகளுக்குத் தடையாக உள்ளனர் என அரசாங்கம் கூறுவதை ஏற்க முடியாது. ஏனெனில், தேர்தலுக்கு முன்பிருந்தே ஜே.வி.பி.யினர் பேச்சுகளுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டிருந்தனர். இதை அறிந்து கொண்டும் அவர்களுடன் கூட்டமைத்த ஜனாதிபதி தற்போது பேச்சுகளின் தடங்கலுக்கு வேறு காரணங்கள் கூறுகின்றார்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தைக்கு அரசுடன் ஒத்துழைப்பதாகத் தெரிவித்துள்ளது. இதைக்கூட அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த 55 வருடங்களாக தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பாத சிங்கள தேசம், தற்போதும் இடைக்கால நிர்வாகத்தின் மூலம் தமிழர்களுக்கு அதிகாரம் செல்வதை விரும்பவில்லை. இதற்காக ஆயுதக் குழுக்களுக்கு உதவுதல், மாற்று யோசனைகளை சமர்ப்பித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பேச்சுக்களை இழுத்தடித்து வருகின்றது என்றனர்.


சிறுவர்களை புலிகள் படையில் சேர்ப்பதாகக் கூறப்படுவது சம்பந்தமாக இவர்கள் விளக்க மளிக்கையில், சிறுவர்கள் தம்மிடம் உள்ளனர் என்பதை விடுதலைப் புலிகள் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளதுடன், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துடன் (யுனிசெப்) உடன்படிக்கையொன்றையும் செய்துள்ளனர். வட, கிழக்கிலுள்ள சிறுவர்களின் பிரச்சினைகளை முதலில் தெரிந்து கொண்டு அவர்கள் ஏன் படையில் சேர்ந்து கொள்கின்றார்கள் என்பதை ஆராய்ந்து அதற்காக நடவடிக்கையெடுப்பதை விடுத்து, விடுதலைப் புலிகளுக்கு அழுத்தங்களைக் கொடுப்பது பிரயோசனமற்ற செயலாகும். இது போன்று வட, கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாயின் ஓர் நிர்வாக முறை அவசியமெனத் தெளிவுபடுத்தினார்கள்.

இதேவேளை, சமாதான பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க தாம் அரசாங்கத்தை வலியுறுத்தப் போவதாக பிரான்ஸ் உதவி தூதுவர் தெரிவித்தார்.

# சிறீலங்காவின் புதிய இந்தியத் தூதர் கதிர்காமருடன் சந்திப்பு

(05.09.04)

சிறீலங்காவிற்கான இந்தியாவின் முதலாவது பெண் உயர்ஸ்தானிகரான நிருபமா ராவ், தனது முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பை சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் கடந்தவாரம் கொழும்பில் மேற்கொண்டார். நிருபமா ராவ் இந்திய வெளிவிவகார அமைச்சின் முதலாவது பெண் பேச்சாளராக பணியாற்றியவர். நிருபமா ராவ் 1981ம் ஆண்டு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதலாவது செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.



1973ல் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரியாகவும் இவர் பணியாற்றியுள்ளார். தற்போது 53 வயதுடைய ராவ், இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்காசிய பிரிவில் பணியாற்றிய போது, இந்திய - சீன உறவுகள் தொடர்பான விசேட சேவைகளையாற்றியுள்ளார். 90களில் இவர் ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு தொடர்பான விசேட நிபுணத்துவம் பெற்றார். மேலும், வாஷிங்டனிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக அதிகாரியாகவும், மொஸ்கோ உயர்ஸ்தானிகராலய பிரதித் தூதுவராகவும் சேவையாற்றினார். அதைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சின் பல்லின பொருளாதார உறவுகள் பிரிவின் தலைமைப் பொறுப்பை வகித்த ராவ், 1995 - 1998ம் ஆண்டு காலப் பகுதியில் பெரு நாட்டிற்கான தூதுவராக நியமனம் பெற்றார்.

# கைதான தந்தையை மீட்க போலி அமெரிக்க டொலர்கள் தயாரித்த மாணவன் கைது

(05.09.04)

கண்டி நகரில் கச்சேரிக்கு முன்பாக அமைந்துள்ள புகைப்பட நிலையமொன்றில் கண்டி குற்றத் தடுப்பு பிரிவு பொலிசார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான போலி அமெரிக்க டொலர்களையும் இவற்றை தயாரிக்க பயன்படுத்தப்பட்ட இரு கணினிகளையும் கைப்பற்றியுள்ளனர். மேலும், இப் போலி டொலர்களை தயாரித்த 16 வயது மாணவன் ஒருவனையும் பொலிசார் கைது செய்துள்ளனர். கண்டி குற்றத்தடுப்புப் பிரிவு பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து பொலிஸ் அதிகாரி சமரக்கோன் தலைமையிலான பொலிசார் மேற்படி போலி டொலர்களை தயாரித்த மாணவனை கடந்த வாரம் கைது செய்தனர்.

இம்மாணவன் கண்டியில் அமைந்துள்ள பிரபல வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையமொன்றில் 6 இலட்சம் ரூபா பெறுமதியான போலி அமெரிக்க டொலர்களை மாற்ற முற்பட்ட போது மறைந்திருந்த பொலிசார் இம்மாணவனை கைது செய்தனர். இம்மாணவன் அளித்த தகவலையடுத்தே கச்சேரிக்கு முன்பாக அமைந்திருந்த புகைப்பட நிலையத்தை திடீர் சோதனையிட்டு 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த போலி அமெரிக்க டொலர்களை கைப்பற்றியதுடன் இவற்றை தயாரிக்க பயன்படுத்தப்பட்ட இரு கணினிகளையும் கைப்பற்றியுள்ளனர். இம்மாணவன் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தின்போது தனது தந்தை இராணுவத்தில் கோப்ரலாக பணியாற்றிவிட்டு பின் தலைமறைவானதால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவரென்றும் அவரை விடுவிக்கவே தான் இவ்வாறு போலி டொலர்களை தயாரித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தை விட்டு தப்பிச் சென்றோரை நீக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானம்

(05.09.04)

சிறீலங்கா இராணுவத்தை விட்டு தப்பிச் சென்ற சகலரையும் இராணுவத்திலிருந்து நீக்க சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் தமது சேவை தொடர்பான விபரங்களை நேரடியாகவோ கடிதம் மூலமாகவோ நடவடிக்கை தலைமைச் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கென எதிர்வரும் செப்டெம்பர் 15ம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

CREDIT வங்கிக்கடன்

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா ? B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

# பாரிஸ் தேர் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள்

(06.09.05)

பிரான்ஸ், பாரிஸ் லாச்சப்பல் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுமார் 20,000 வரையான மக்கள் கலந்து கொண்டதாக பிரான்ஸ் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த ஒன்பது வருடங்களாக இடம்பெற்றுவரும் இத் தேர்த் திருவிழாவில் இம்முறையே அதிகளவான மக்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாரிசிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் இருந்து பெருமளவான தமிழர்கள் கலந்துகொண்டதுடன், ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பெருமளவான தமிழர்களின் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் வழமைபோன்று பெருமளவான ஐரோப்பியர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டிருந்தனர். தமிழர்ளின் அதிகமான வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள லாச்சப்பல் பகுதியூடாகவும், தமிழர்கள் அதிகமான வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள மற்றொரு பகுதியான மார்க்கடே புவாசொனியூடாகவும் பிள்ளையார், முருகன் என இரு தேர்கள் இழுத்துச் செல்லப்பட்டன. பிள்ளையார் தேரை ஆண்கள் இழுத்துச் செல்ல, முருகன் தேரை பெண்கள் இழுத்துச் சென்றனர்.

காவடியாட்டங்கள் இடம்பெற்றதுடன், வர்த்தக நிலையங்களின் முன்னால் ஏராளமான தேங்காய் குவிக்கப்பட்டு சிதறு தேங்காய்களும் அடிக்கப்பட்டன. இந்நிகழ்வுகளை ஐரோப்பாவின் பெருமளவான பத்திரிகையாளர்களும், நிழற்படப்பிடிப்பாளர்களும் பதிவு செய்துகொண்டனர்.

கடந்தகாலங்களில் இவ்வாறு சிதறு தேங்காய் அடிக்கப்படுவதை நிழற்படம் பிடித்திருந்த ஒரு பிரெஞ்சு இதழ், தனது முதல் பக்கத்தில், ஒரு பக்கத்தில் சிதறுதேங்காய் அடிக்கப்பட்டு அது குப்பைக்கு செல்லும் காட்சியையும், மற்றப் பக்கத்தில் வன்னியில் குழந்தையொன்று கோப்பையுடன் உணவுக்காக காத்திருக்கும் காட்சியையும் பிரசுரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இராணுவ புலனாய்வாளருடன் சென்று சச்சி மாஸ்டரே சேனாதிராஜாவை சுட்டார்

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து, சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவருடன் சென்ற சச்சி மாஸ்டரே, புலிகளின் மட்டு நகர் அரசியல் துறைப் பொறுப்பாளரான லெப். கேணல் சேனாதிராஜாவை சுட்டுக் கொன்றதாக கிழக்கு கொலைகள் தொடர்பாக நடைபெறும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. கரும்புலிகள் தினமான யூலை 5ம் திகதி மட்டக்களப்பு நகரில் வைத்து சேனாதிராஜாவும் நிலான் என்பவரும், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுடப்பட்டனர். பின்னர் சேனாதிராஜா மட்டக்களப்பு மருத்துவமனையில் மரணமானார். இதே நேரம் கருணாவின் முக்கிய சகாவும் அவரது புதிய பேச்சாளராகவுமிருந்த சச்சி மாஸ்டரும் அவரது சகா ஒருவரும் யூலை 15ம் திகதி மட்டக்களப்பு சிறச்சாலைக்குள் வைத்து கைதியொருவரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் மட்டக்களப்பு சிறைச் சாலைக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த சச்சி மாஸ்டரை தனது மோட்டார் சைக்கிளில் கூட்டிச் சென்றே, சேனாதிராஜா மீதும் அவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நிலான் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. காலை 9.15 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் புலிகள் இருவரையும் சச்சி மாஸ்டரே சுட்டதும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இந்த உண்மை மட்டக்களப்பு பொலிசாருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் தெரியவந்துள்ளது. ஆனாலும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட பொலிசார் எவரும் இதுபற்றி தகவல்களை வழங்க தயாராயில்லையென்பதால், இது குறித்த விசாரணைகள் மிக மந்தமாகவேயுள்ளன. இந்தச் சம்பவம் பற்றிய உண்மைத் தகவல்களை கண்காணிப்புக் குழுவிற்கும் தெரிவிக்க சிறைச்சாலை அதிகாரிகளும் ஏனையோரும், அச்சம் காரணமாக மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிறைச்சாலைக்குள் சச்சி மாஸ்டருக்கும் அவரது சகாக்களுக்கும் பல்வேறு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. சமையல் செய்வதற்கும், கையடக்க தொலைபேசி பயன்படுத்தவும், பணமும், ஆயுதங்களும், வழங்கப்பட்டிருந்ததாகவும், சச்சி மாஸ்டரின் கொலை தொடர்பான நீதிமன்ற விசாரணையில் சாட்சியமளிக்கபட்டுள்ளது.


## நித்தி வாகன சேவை

உங்கள் வீட்டுத் தளபாடங்களை பெரிய (20M³) வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி : 01 48050214/06 13342518/ 06 07348051


## மரண அறிவித்தல்

தோற்றம் 13.06.1924



மறைவு 31.08.2004

### திரு. கந்தையா கந்தசாமி

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.கந்தையா கந்தசாமி அவர்கள் 31.08.2004 அன்று யாழ்ப் பாணத்தில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற கந்தையா தங்கம் அவர்களின் மூத்த புதல்வனும் சின்னையா மாணிக்கம் அவர்களின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலம் சென்ற வாலாம்பிகை (கற்கண்டு) காலம் சென்ற சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரட்ணராஜா (கொழும்பு) மகேந்திர தாசன் (பிரான்ஸ்) காலம் சென்ற கமலாதேவி நிர்மலா தேவி (ஜேர்மனி), ரவீந்திரதாசன் (யாழ்ப்பாணம்), சுசிலாதேவி (ஜேர்மனி), கஜேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கிருஷ்ணகுமாரி, செல்வராணி, சாந்தலிங்கம், விஜயகுமாரி, யோகானந்தம், துமிர்ளா ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்வியா, பிரணவன், சுதன், சர்மிளா, தர்ஷினி, பிரதீபன், வேணி, வக்ஷலா, நிரோஷன், தயாநிதி, பகீரதன், வர்ஷா, சஞ்ஜயன் ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தசாமி, யோகம்மா (கிளி) இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். . கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தொடர்புகளுக்கு :**

திருமதி.கந்தசாமி இராசலட்சுமி
திரு.ரவீந்திர தாசன் -யாழ்ப்பாணம் 214590971
திரு.இரட்ண ராஜா -கொழும்பு -529442
திரு மகேந்திரதாசன் -பிரான்ஸ் -0148322477
திருமதி சாந்தலிங்கம் -ஜேர்மனி -2083770550
திருமதி யோகானந்தன் - ஜேர்மனி -44651731
திரு கஜேந்திரன் - சுவிஸ் -077225345


ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



**குறிப்பு:**

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



## மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்



**Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்**

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

**மோகன் ஜுவல்லர்ஸ்**

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
**புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes**
**என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்**
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

**MOHAN JEWELLERS & TEXTILES**
**Elisabethen anlage 25**
**4051 Basel**
**Tél - 061 271 41 09**
**Fax - 061 271 41 17**
**WWW.mohantextiles.com**

## இலங்கை ஒரு.....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாமல் போனது என்பதற்கான சிறந்த உதாரணம் என்றும் அங்கு குறிப்பிட்டார்.

தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை ஆறுமணிக்கு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உபதலைவர் ராஜ்குமாரின் தலைமையில் ஆரம்பமான நினைவஞ்சலிக் கூட்டத்தில், சக ஊடகவியலாளரான நிக்சன், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அமீன் மற்றும் புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றியிருந்தனர். நடேசனின் பாரியார், அவரது இளைய புதல்வர் உட்பட மற்றும் பல ஊடகவியலாளர்கள், அன்பர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

## இராணுவப்......

(32ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லாமல் தகவல்களும் திரண்டு வந்தன. ஆனால், இன்றோ அந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. எதிரியின் நடவடிக்கைகளும் உள்ளே தோன்றியுள்ள மாற்றங்களும், புலனாய்வுப் பிரிவிற்குப் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதற்கு இராணுவ தலைமைப்பீடமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

அணுகுமுறையில் ஏற்பட்ட தவறுகளும், இரகசியத் தகவல் கசிவும் பதவிப் போட்டியும் இப்பிரிவைக் காட்டிக் கொடுத்துள்ளது. முன்னர் இருந்த பொறுப்பும் விசுவாசமும் அற்றுப் போய்த் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. இன்று இப்பிரிவிலுள்ளோர் உயிராபத்தை எதிர்நோக்கி வருகின்றனர். பாதுகாப்பு அச்சுறுத்தலுள்ள புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குத் தேவையான பாதுகாப்புக் கோரப்பட்டும் அது இன்றுவரை வழங்கப்படவில்லை.

இப்போது இப்பிரிவிலுள்ள மூன்றில் இரண்டு வீதமானோர் பாதுகாப்பு எதுவும் இல்லாத நிலையில் கடமைக்குப் பணிக்கப்படுகின்றனர். எதிரி பலமடைந்துள்ள நிலையில், அதற்கு முகம் கொடுக்கும் வகையில் பாதுகாப்பை நடைமுறைப்படுத்த மேலதிகாரிகள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பலர் புலிகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர். 'மிலேனியம் சிற்றி' புலனாய்வு நடவடிக்கைகள் அம்பலமாக்கப்பட்ட பின்னர் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதற்கும் இங்குள்ள சிலரே காரணமாக இருந்துள்ளனர். புலனாய்வுப் பிரிவிற்குத் தகவல் வழங்கி வந்த 22 பேர் பிஸ்டல் குழுவினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பாதுகாப்பு வழங்கப்படாத நிலையில், தகவல் தருவோருக்கும் பாதுகாப்புக் கிடைக்கவில்லை. அதனால், இவர்கள் புலிகளினால் இலக்கு வைக்கப்பட்டு வருகின்றனர். இப்போது இருப்பவர்களிடமும் ஒத்துழைப்பைப் பெற முடியாதுள்ளது. இதனால், தகவல்கள் வந்து சேருவதில்லை. எம்மிடமிருந்து பலர் விலகிச் சென்றுவிட்டனர். இவ்வாறு சென்ற சிலரும் கொல்லப்பட்டுள்ளனர்.


இதனால், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் தகவல் வழங்குவோரும் உயிராபத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்து நீடித்தால் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் சீர்குலைந்து நாட்டின் பாதுகாப்பே கேள்விக்குறியாகிவிடும். இனிமேலாவது இராணுவ தலைமைப் பீடம் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# தமிழீழ வைப்பகத்தின் 10வது கிளை முல்லைத்தீவில் திறந்து வைப்பு

(05.09.04)

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் பொருளாதார வளத்தை வலுவாக்கும் வகையில் தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு நகரில் அமைக்கப்பட்ட தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளையின் பெயர்ப் பலகையினை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார். புதிய வைப்பக கட்டடத் தொகுதியினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தனது கருத்துரையில், போரினால் வலுவிழந்த எமது மக்களின் பொருளாதாரத்தை தமிழீழ வைப்பகமானது கட்டியெழுப்பி வருகின்றது. அதற்கு அமைவாகவே இவ்வாறான கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்றார்.




தமிழீழ வைப்பக மேலாளர் தெரிவிக்கையில், தமிழீழ வைப்பகம் ஆனது 1994ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தனது முதலாவது கிளையினை ஆரம்பித்து இன்று தனது பத்தாவது கிளையினை முல்லைத்தீவு நகரில் ஆரம்பித்துள்ளது. இக்கிளையின் மூலம் இப்பகுதி மக்களுக்கு பல்வேறு கடன் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். அதற்காக தமிழீழ வைப்பகமானது எப்போதும் தயாராகவே உள்ளது. இன்றைய நிகழ்வில், துறைசார் பொறுப்பாளர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், நகர வணிகர்கள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



## பேச்சுகள் தாமத....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வலியுறுத்திவருகிறார். இதற்கான மக்கள் ஆணையையும் அவர் பெற்றுள்ளார். இதிலிருந்து அவரால் விலகிச் செல்லவும் முடியாது. கூட்டரசாங்கத்தில் முரண்பாடுகள், கருத்து மோதல்கள் ஏற்படுவது சகஜமாகும். கட்சி அரசியலுக்கு அப்பால் நாட்டின் நன்மை கருதி செயற்படுவதே அவசியம்? நல்ல கொள்கைகளை ஆதரிக்க வேண்டும். உண்மையில் நாட்டின் சுபீட்சத்தை முக்கியமாக கருதுபவர்கள் சமாதானப் பேச்சுக்களையும், அதற்கான நடவடிக்கைகளையும் எதிர்க்கமாட்டார்கள். பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அதற்கான முயற்சிகளை நோர்வே அரசாங்கம் மேற்கொள்கின்றது. இது பற்றி நான் இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகைக்கும் கருத்துத் தெரிவித்திருந்தேன்.

சமாதான முயற்சிகளைத் தொடரமுடியாது என்று நோர்வே விலகிச் சென்றுவிடவில்லை. அவர்களும் பல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள், என்று தெரிவித்துள்ளார்.

# குற்றச்செயலில் ஈடுபடும் தமிழரை நாட்டுக்குள் வைத்திருப்பது குற்றச்செயல்களை அதிகரிக்கவே வழிவகுக்கும்

### – கனடிய குடிவரவுத்துறை அதிகாரிகள் கருத்துத் தெரிவிப்பு –

கனடாவில் குற்றச் செயல்களில் ஈடுபடும் இலங்கைத் தமிழர்களை, அவர்களது குடும்பத்தினரின் நலன்கருதி தொடர்ந்தும் கனடாவில் தங்கியிருக்க அனுமதிப்பது கனடாவில் மேலும் குற்றச் செயல்களை அதிகரிக்கச் செய்யவே வழிவகுக்கும் என கனடிய குடிவரவுத்துறை அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். கனடாவில் ரொரான்டோ நகரில் ஏ.கே.47 ரக துப்பாகியுடன் கைதான சாந்தி ஜீவன் கதிரவேலு என்ற 31 வயது இலங்கைத் தமிழ் இளைஞரை நாடு கடத்துமாறு கனடிய குடிவரவுத் துறை அதிகாரிகளின் தீர்ப்பை இடைநிறுத்தி, அந்நாட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பாகவே கனடிய அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கனடாவில் கொலை, தாக்குதல், கப்பம், போதைவஸ்து கடத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஏ.கே.கண்ணன் குழுவைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படும் சாந்தி ஜீவன் 2001ம் ஆண்டு கனடிய பொலிசாரினால் ஏ.கே.47 துப்பாக்கியுடன் ரொரான்டோ நகரில் வைத்து கைது செய்யப்பட்டார். இலங்கையில் பிறந்த கதிரவேலு 1989ம் ஆண்டு தனது 16 வயதில் கனடா வந்தார். அங்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட அவர், 2001ம் ஆண்டு பொலிசார் மேற்கொண்ட தேடுதலின் போது ஏ.கே.47 துப்பாக்கி மற்றும் 2 ரவைகளுடன் கைது செய்யப்பட்டார். அத்துடன் இவர் பயணம் செய்து கொண்டிருந்த வாகனத்திலிருந்து வாள் ஒன்றும் சொட்கண் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து, இவரை 18 மாதங்கள் தடுத்துவைத்து விசாரணை செய்த குடிவரவு அதிகாரிகள் இவரை, கனடாவிலிருந்து நாடு கடத்துமாறு 2002ல் தீர்ப்பு வழங்கியிருந்தனர். ஆனால், கதிரவேலு இதை எதிர்த்து மேன்முறையீடு செய்திருந்தார். இம் மேன்முறையீட்டை விசாரணை செய்த நீதிபதி, கதிரவேலு நாடு கடத்தப்பட்டால், கனடாவில் வசிக்கும் அவரது மனைவியும் மகனும் நிர்க்கதியாகி விடுவார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி, நாடு கடத்தல் தொடர்பான முடிவை 2010ம் ஆண்டுவரை ஒத்தி வைத்துள்ளனர். ஆயுதங்களில் இருந்தும் ஆயுதக் குழுக்களில் இருந்தும் ஒதுங்கியிருக்க வேண்டும் என கதிரவேலுவிற்கு உத்தரவிட்டுள்ள நீதிபதி, இவ்வழக்கு 2010ம் ஆண்டு யூன் மாதம் 18ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும் அப்போது இவரது நடத்தைகளைக் கருத்திற்கொண்டே நாடு கடத்துவது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

அசைவத்திற்கோ பல... சைவத்திற்கோ ஒன்று தான்!
பிரான்சில், ஈழத்தமிழர்களின் முதலாவது முழுமையான சைவ உணவகம்

கிருஸ்ண பவன்

விதம் விதமான தோசை, இட்லி, சப்பாத்தி, பூரி, இடியப்பம், பிட்டு, சைவ பலகாரங்கள், இனிப்புப் பண்டங்கள், சைவச் சாப்பாடுகள் இன்னும் பல....

கைதேர்ந்த சமையற்கலை வல்லுநர்களின் தயாரிப்பில் தாயக தென்னிந்திய உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட 'கிருஸ்ண பவன்'

கிருஸ்ண பவன்
24, Rue Cail
75010 Paris
Tél : 01 42 05 78 43
M° : La Chapelle / Gare du Nord

– ரம்மியமான சூழலில் இரசித்து சுவைக்க ஒரு சைவ உணவகம் –

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr
www.poobalam.com

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்

முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குப் பாதுகாப்பு இல்லை

## – இராணுவ தலைமையக அதிகாரி கவலை –

(05.09.04)

இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு உரிய பாதுகாப்பை வழங்காததால் அது செயலற்றுப் போயுள்ளதாக சிறீலங்கா இராணுவ தலைமையக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இராணுவப் புலனாய்வுப் பிரிவு நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கா குறிப்பிட்டுள்ளது தொடர்பாகக் கேட்டபோதே அந்த இராணுவ அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.



இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், கடந்த காலத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு நாட்டுப் பற்றுடனும் கடமை உணர்வுடனும் செயற்பட்டு வந்தது. யுத்த வெற்றிகளுக்கும், பாதுகாப்பிற்கும் அது சிறந்த முறையில் பங்களிப்பைச் செய்து வந்தது. அப்போது வெளியாரின் ஒத்துழைப்பும் பூரணமாகக் கிடைத்து வந்தது.

புலிகளால் பாதிக்கப்பட்ட பலர் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்பட்டனர். குறை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# பேச்சுகள் தாமதமாவதால் நாட்டிற்கு விபரீதம்

## – மகிந்த ராஜபக்ஷ –

(05.09.04)

பேச்சுவார்த்தைகள் காலம் கடந்து செல்வது நாட்டிற்கு விபரீதத்தை ஏற்படுத்தும். ஆகையால் சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாக வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இதற்கான முயற்சிகளில் அரசாங்கம் அயராது ஈடுபட்டு வருகிறது என சிறீலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ச கொழும்பு வீரகேசரி வார வெளியீட்டிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகள் தொடராத பட்சத்தில் நாட்டிற்கு பெரும் விபரீதம் காத்திருப்பதாகவும் பெரும்பான்மை பலம் அற்ற அரசாங்கம் நீடித்து நிலைக்காது என்ற பரிகாசங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி சமாதான முயற்சிகள் தொடர்பில் சாதகமான கருத்தையே கொண்டிருக்கிறார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டும் என்பதை அவர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# இலங்கை ஒரு தேசமாக ஒருபோதும் இருந்ததில்லை

## – சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் –




(05.09.04)

இலங்கை முழுவதும் ஒரு தேசமாக ஒருபோதும் இருந்ததில்லை என்பதை இப்போது சிங்கள ஆய்வாளர்களே ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்துள்ளார். கொழும்பு தமிழ் சங்கத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஜி.நடேசனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே, விரிவுரையாளர் தமிழ்மாறன் இவ்வாறு அங்கு கருத்து வெளியிட்டார்.

இலங்கை ஒரு தேசமாக இருக்கக்கூடிய எல்லா வாய்ப்புக்களும் தவறவிடப்பட்டுவிட்டதாக தனதுரையில் குறிப்பிட்ட வி.ரி.தமிழ்மாறன், இலங்கை ஒரு தேசமாக இருக்க முடியாமல் போனமைக்கு என்ன காரணம் என்பதற்கு, நடேசனுடைய வாழ்க்கையே ஒரு உதாரணமாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலத்தில் நடேசன் இலங்கைத் தேசியத்தை வலியுறுத்தி வந்த ஒருவர் என்பதை கூட்டத்தில் நினைவு கூர்ந்த தமிழ்மாறன், பின்னர் நடேசனுக்கு நேர்ந்த கதியும், அவ்வாறு நேர்வதற்கான பின்னணிக் காரணிகளுமே இலங்கை ஏன் ஒரு தேசமாக இருக்க

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

PHONE 2000

LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE

SFR

Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.

PHONE 2000
2, Rue Perdonnet,
75018 Paris.
☎: 01 40 05 03 43
Fax: 01 40 05 03 53
M°: La Chapelle

PHONE 2000
85, Rue des Pyrénées,
75020 Paris.
☎: 01 40 09 13 15
Fax: 01 40 09 01 31
M°: Maraîchers

PHONE 2000
19, Rue du Labat,
75018 Paris.
☎: 01 42 58 55 40
Fax: 01 42 58 55 46
M°: Marcadet Poissonniers

PHONE 2000
Informatique
87, Rue des Pyrénées,
75020 Paris.
M°: Maraîchers
Tél: 06 20 21 11 11

PHONE 2000
4, Rue de Cail,
75010 Paris.
☎: 01 40 05 93 28
Fax: 01 40 05 97 03
M°: La Chapelle ou Gare du Nord

PHONE 2000
5, Bld. davout,
75020 Paris.
☎: 01 43 71 40 30
Fax: 01 40 09 01 31
Mobile: 06 17 17 28 17
M°: Porte de Vincennes

Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11